
தொடுவானம்
உடுமலை.காம்

# 1

தொடுவான நிழலொன்றும்
தொட்டுவிடும் தூரமில்லை - அதை
எட்டி விரல் தொட்டு விட்டால்
என் மனதில் பாரமில்லை.

மெதுவாக திரும்பி பக்கவாட்டில் பார்த்தான் ராஜேந்திரன். சுவாதி மும்முரமாய் நோட்ஸ் எழுதிக் கொண்டிருந்தாள். வட்டமான முகமும், நீள் வடிவக் கண்களும், செதுக்கிய நாசியும், காலையில் வாரிய தலை கலையாமலிருந்தபோதும் ஒரு நீண்ட முடி மட்டும் விலகி அவள் கண்களை மறைக்க அதை ஒரு கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டே பாடத்தில் கவனமாயிருந்த அவளது பக்க

வாட்டுத் தோற்றம் ஓர் ஓவியம் போலிருக்க ரசனையாக நோக்கினான். வகுப்பு முடிய அனைவரும் கலைந்தனர். நோட்டுப் புத்தகங்களை அடுக்கி கைப்பையில் வைத்துக் கொண்ட சுவாதி எழுந்தாள். அவளுக்காக காத்துக் கொண்டு நின்றிருந்த மகேஸ்வரியின் புன்சிரிப்பைக் கவனித்தபடி சிரிக்காமல் உடன் நடந்தாள். இருபக்கமும் மரங்களடர்ந்த நீண்ட சிமெண்ட் பாதையில் நடந்தவர் களை ராஜேந்திரன் பின் தொடர்ந்தான். முகம் இறுகிப் போய் ஏதோ சிந்தனையுடன் நடந்த சுவாதியைப் பார்த்த மகேஸ்வரி 'களுக்'கென்று நகைத்தாள். சுவாதி முறைத் தாள்.

''என்னடி சிரிப்பு.''

''கடைசி வகுப்பு ரொம்ப போர்டி சுவாதி. எனக்கானால் தூக்கம் தூக்கமா வருது. சாமியாடிக் கொண்டே உன்னைப் பார்த்தால் நீ அவ்வளவு இன்ட்ரெஸ்டா நோட்ஸ் எடுத்துக் கிட்டு கவனிச்சுக்கிட்டு இருக்கே. அறுவையை பொறுமை யாய் கேட்கிற வித்தையை எங்கு கத்துக்கிட்ட? உனக்கு 'சகிப்புத் திலகம்'ன்னு பட்டம் கொடுக்கலாம்ன்னு நினைச்சேன். சிரிச்சேன்.''

''ச்சு. இப்படிப் பேசாதேன்னு எத்தனை ஆயிரம் முறை சொன்னாலும் திருந்தாத ஜென்மம்டி நீ. நாம் படிக்க வந்திருக்கிறோம் மகேஸ். தூங்க இல்லை. நாம தூங்கினா யாருக்கு நஷ்டம்? நமக்குத்தான். நமக்கு பாடம் எடுக்கிற வங்களுக்கு இல்லை.''

''சரி சுவாதிப்பாட்டி.''

''உன்னை... உனக்கு எல்லாமே விளையாட்டுத் தாண்டி. உன்னை சொல்லிக் குற்றமில்லை. நீ வளரும் விதம் அப்படி. கவலை இல்லாத பிறவி. கொடுத்து வைத்தவள்.''



''உன்னை விடவா கொடுத்து வைத்திருக்கிறேன். ஊரையே ஆளும் அகிலாண்டேஸ்வரியின் வாரிசு... உனக்கென்னடி கவலை வந்துவிட்டது?''

''இன்னொருமுறை அகிலாண்டேஸ்வரியின் வாரி சுன்னு சொல்லாதே. நான் அவங்க மகளில்லை.''

''அதனாலென்ன? நீ அகிலாண்டேஸ்வரியின் தங்கை ரெங்கநாயகியின் மகள்தான். ஆனால் உன் பெரியம்மா சின்ன வயதிலேயே விதவையாயிட்டாங்க. அவங் களுக்கு குழந்தையில்லை. அவங்களோட கை கொள்ளாத சொத்து அனைத்திற்கும் நீயும், உன் அக்காவும்தான் வாரிசுன்னு ஊருக்கேத் தெரியுமே.''

''ஊருக்குத் தெரிந்தது அவ்வளவுதான். தெரியாதது நிறைய இருக்கிறது.''

''என்னவோ போ. நீ போட்டு வரும் சுடிதார் ஒவ் வொன்றும் இரண்டாயிரத்திற்கு குறையாது. தினம் ஒரு மாடலில் செயின். வளையல், ஸ்டட், போட்டு வருகிறாய். பாக்கெட் மணி ஆயிரக் கணக்கில் தருகிறார்கள். எனக்கு மட்டும் உன்னைப் போல் கணக்குப் பார்க்காத வீடு கிடைத்தால்...''

மகேஸ்வரியை முடிக்க விடாமல் சுவாதி குறுக்கிட் டாள். ''அப்படி மட்டும் யாராவது என் இடத்தில் இருந்து கொண்டு என்னை வெளியேற்றி விட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவேன் தெரியுமா?''

''பதிலுக்கு உனக்குக் கிடைப்பது குடிசையாக இருந் தால்?''

''ஆனந்தமாய் அனுபவிப்பேன்'' கண்கள் மலரச் சொன்ன வளை விசித்திரமாய் பார்த்தாள் மகேஸ்வரி.

''சுவாதி. இந்த சினிமாக்களில் வருவது போல் 'பணமே பிடிக்கவில்லை ஏழையாய் வாழ ஆசை'யென்பது போல் பித்தேதும் பிடித்து விடவில்லையே?''

''இல்லை மகேஸ். உனக்குப் புரியாது. நீ நினைப்பது போல் கணக்குப் பார்க்காமல் எனக்கு இந்த உடை, நகை, பணமெல்லாம் கிடைத்து விடவில்லை. அதன் ஒவ்வொன்றின் பின்னாலும் கணக்கு இருக்கிறது. விலை கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்.''

''உன் சொந்தப் பெரியம்மாவிடம் விலை கொடுக்கிறாயா? என்ன விலை கொடுக்கிறாய்? அதையும்தான் சொல்லேன்.''

''என் தன்மானம்தான் நான் கொடுக்கும் விலை'' என்று மனதில் கசந்த சுவாதி.

''மகேஸ். நான் இந்த கோர்ஸை ரொம்ப நம்பியிருக்கிறேன். இதை முடித்தால் வேலை நிச்சயம். டிகிரி முடித்தாலும் இந்த கோர்ஸ் முடித்தால்தான் வேலை கிடைக்குமென்பதாலேயே இதில் சேர்ந்தேன். இதை நல்லபடி முடித்து உடனே வேலை கிடைத்து விட்டால் என் கஷ்டத்திற்கு விடிவு கிடைத்து விடும்.''

''என்ன கஷ்டம் சாப்பாட்டுக்கு இல்லாத கஷ்டமா?'' மீண்டும் மகேஸ்வரி குலுங்கிச் சிரிக்க அமைதியாய் அதை வெறித்த சுவாதி மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

'சாப்பாட்டிற்குக் கஷ்டம்தான் மகேஸ்வரி. சுயமரியாதையுடன் ஒரு வாய் சோறு எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. அது வேண்டும்.'

மனதை அமைதிப்படுத்த சாலையோரச் செடிகளை லேசாய் தொட்டுக் கொண்டே நடந்த சுவாதி,

''ஒன்மினிட் சுவாதி'' என்று பின்னால் நடந்து வந்த ராஜேந்திரனின் குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தாள்.



அருகில் வந்தவன், ''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும் சுவாதி'' என்றான்.

''பேசுங்கள்.''

''தனியாகப் பேசவேண்டும்.''

''நான் பஸ் ஸ்டாப்பில் வெயிட் பண்ணுகிறேன்'' மகேஸ்வரி நகர முற்பட அவளைக் கைப் பிடித்து நிறுத்தியவள் ராஜேந்திரன் பக்கம் திரும்பி,

''இதோ பாருங்கள் ராஜேந்திரன். எதுவாக இருந்தாலும் என் தோழி முன்னாலேயே சொல்லுங்கள்'' என்றாள் கறாராக. ராஜேந்திரன் திணறிப் போனான். தயக்கத்துடன் புத்தகத்தில் மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுக்கப் போனான். அதை முறைத்துப் பார்த்த சுவாதி.

''என்னது இது.:.?'' என்று கேட்டாள்.

''கடிதம்...''

''காதல் கடிதமா...?'' கடுமையாய் சுவாதி கேட்ட விதத்தில் ராஜேந்திரன் சங்கடப்பட்டுப் போனான்.

''எனக்கு இந்தக் காதலில் எல்லாம் விருப்பமில்லை ராஜேந்திரன். நீங்கள் வேறு பெண்ணைத் தேடுங்கள். இது முதல் முறை என்பதால் விட்டு விடுகிறேன். திரும்பவும் இதே போல் நீங்கள் தொந்தரவு செய்தால் இந்த டிரெயினிங் நடத்தும் நிர்வாகியிடம் புகார் செய்வேன். நினைவிருக்கட்டும்.'' வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசிய சுவாதி அதுவரை நடந்த நிகழ்ச்சிகளைத் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த மகேஸ்வரியை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

"ஏண்டி சுவாதி இப்படிப் பட்டென்று பேசிட்டே. அவன் முகத்தைப் பார்க்கச் சகிக்கலை."

"சகிக்காத மூஞ்சிதானே அவனுக்கு?"

"அபாண்டமாய் பேசாதே. உன்கிட்ட ஒருத்தன் ஐ லவ் யூன்னு சொன்னா கண்டபடி திட்டணுமா? நம் வகுப்பிலேயே அவன்தாண்டி பார்க்க நல்லாயிருக்கிறவன். ஹேண்ட்சம் ஹீரோ. அவனைப் போய் வேண்டாம்னுட்டியே."

"அவன் காதலிச்சா நானும் காதலிக்கணுமா? அப்படி ஏதும் சட்டமிருக்கா?"

"காதல் ஒரு அற்புத உணர்வு சுவாதி. அழகாய் தங்கப் பதுமை போல் இருக்கே. உன்னைப் பார்த்தா யாருக்குமே காதலிக்கத் தோணத்தான் செய்யும். நீ என்ன சந்நியாசினியா? நானும் இந்த ஒரு வருடமா உன்னை கவனிச்சுக்கிட்டுத்தான் வரேன். ஆண்களைக் கண்டாலே உனக்குப் பிடிக்கலை. ஏன்?"

"அதுக்குக் காரணம் சொல்லணும்கிற அளவுக்கு முக்கியமான விஷயமில்லை மகேஸ். அதைவிட முக்கியமானது நிறைய என் வாழ்வில் இருக்கு. நீ சொல்வது போல் காதல் ஓர் அற்புத உணர்வாகவே இருக்கட்டும். நான் இல்லைன்னு சொல்லவில்லை. அது தானாகவே ஓர் ஆண் மேல் எனக்கு வரணும். எனக்கு ராஜேந்திரன் மேல் அந்தவித உணர்வோ ஈர்ப்போ வரவில்லை."

"சரி நீ சொல்வது போல் தானாய் வரும் அந்த உணர்வு ஈர்ப்பு யார் மேலும் உனக்கு வந்ததே கிடையாதா?"

பொறியில் அடித்தது போன்ற அந்த கேள்வியில் சடக்கென்று தலை நிமிர்ந்தாள் சுவாதி. பதில் சொல்லாமல்



மகேஸ்வரியையே பார்த்தாள். அந்தக் கேள்வி அவள் இதயத்தைத் தட்டியது. திறந்த இதயத்தில் கிரீம் கலர் கோட், சூட், டையுடன் வசீகரமாய் நின்ற அந்த உருவம் சிரித்தது. சிரித்ததுடன் நில்லாமல்,

"என் இளமதியின் தங்கையா நீ? அவள் ஜாடை அப்படியே இருக்கிறதே" என்றது.

சொல்ல இயலாத வேதனையுடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள் சுவாதி.

"பஸ் வந்தாச்சு சுவாதி" மகேஸ்வரியின் குரலில் தன்னிலை திரும்பியவள் கடலூர் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். உடன் ஏறி அவள் அருகில் அமர்ந்து கொண்ட மகேஸ்வரி,

"நேராய் கிராமத்துக்குத் தானே போகிறாய்" என்று கேட்டாள்.

"இல்லை. இன்று அக்கா வீட்டுக்குப் போகணும் நைட் பஸ் பிடித்துத்தான் ஊருக்குப் போகணும்."

வழியில் தியாக துருவத்தில் இறங்கிக் கொண்ட சுவாதி தோழிக்கு கை ஆட்டிவிட்டு அக்காவின் வீடு நோக்கி நடந்தாள்.

## 2

வாழ்க்கையென்னும் வானத்திலே
இறக்கை விரித்து சிறகடிக்க
நிலாக்கால கனவுகள்தான்
தொடுவான நனவுகள்தான்

வாசலில் பூனிபார்மைக் கூடக் கழட்டாம
விளையாடிக் கொண்டிருந்த அஜய்யும், பல்லவியும்,

"ஹேய்... சித்தி" என்று ஆனந்தக் கூச்சலிட்டப
ஓடிவந்து கட்டிக் கொண்டனர். சத்தம் கேட்டு எட்டி
பார்த்த இளமதி நெற்றியில் துண்டை இறுக்கி
கட்டியிருந்தாள். இரண்டு வளர்ந்த குழந்தைகளுக்கு தா
போலில்லாமல் அன்று மலர்ந்த பூப்போல் அழகா
தோற்றமளித்தவளைக் கண்டு 'இவள் அழகுக்கு மு
நான் என்ன அழகு' என்ற எண்ணம் என்றும் போ
அன்றும் சுவாதியின் மனதில் தோன்றியது.

"என்னக்கா தலையில் துண்டைக் கட்டியிருக்க?
என்று வினவியபடி படியேறிய சுவாதி உள்ளே நுழை
வசதியாக வாசல் கதவை விரியத் திறந்த இளமதி,

"ஒரே தலைவலி சுவாதி" என்றாள் வலியின் வேதனை
முகத்தில் தெரிய.

"இன்னைக்கு வேலைக்குப் போகலையா? லீ
போட்டுட்டியா?"

"லீவா? இந்த வருட லீவையெல்லாம் எடுத்து முடி
சிட்டேன். லீவ் எது? ஸ்கூலுக்கு போயிட்டுத்தான் வ
தேன்" என்றாள் பக்கத்து கிராமத்தில் ஆசிரியையா
பணிபுரியும் இளமதி.

"மாமா எப்போ வருவார்?"

"அவர் கடையை அடைச்சிட்டு நடுராத்திரியை
போல்தான் வருவார். நீ உட்காரு. காபி போடறேன்" பதி
கூறியபடி தங்கைக்கு காபிப் போட உள்ளே சென்றவளை
பார்த்த சுவாதியின் மனம் வலித்தது. அழகின் இல
கணம். ஆசிரியை வேலை பார்ப்பவள். அவள் மணக்



வேண்டி வந்ததோ சாதாரண தோற்றமுடைய மளிகைக் கடைக்காரனை. ஒரே கிராமம். ஏழ்மை நிலையிலிருந்த மணமகனின் குடும்பம். அந்த ஏழ்மை நிலைதான் முக்கியமான தகுதியாக அவளது பெரியம்மா அகிலாண்டேஸ்வரியால் கருதப்பட்டது.

"நம்மளை விட கீழே இருக்கிறவனுக்கு, படிக்காதவனுக்கு பொண்ணைக் கொடுத்தாத்தான் நமக்கு அடங்கி இருப்பான்" காதில் தண்டட்டி ஆட குரூர விழிகளுடன் சாய்வு நாற்காலியில் ஆடியபடி கூறிய பெரியம்மா நினைவில் வந்தாள். அவளது பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசாத அவர்களின் அம்மா ரெங்கநாயகி. அவர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தே பழக்கப்படுத்தப்பட்ட இளமதி அவர்கள் அமைத்துத் தந்த மணவாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானாள். இதுவரை இளமதியும், அவளது கணவன் கோவிந்தனும் ஒருவரிடமொருவர் பேசி சுவாதி கண்டதில்லை. நடு இரவில் வீடு திரும்புகிறவன் மௌனமாகக் குளித்து, உணவருந்தி, படுத்ததும் உறங்கி விடுவான். அதிகாலையில் எழுந்து கடை திறக்கச் சென்று விடுபவன் இளமதி குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவளும் கிளம்பிச் சென்ற பின்னர் வந்து அவனிடமிருக்கும் சாவியால் கதவைத் திறந்து குளித்துச் சாப்பிட்டுச் செல்வான்.

'எப்படி இவர்களிருவருக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்தன?' என்று சுவாதிக்கு அடிக்கடி நினைவு தோன்றும் இயந்திர வாழ்க்கையை 'விதியே' என்று ஏற்றுக் கொண்டு எப்போர்ப்பட்ட இழப்பு அது?

"என் இளமதியின் தங்கையா நீ?" கண்களில் அளவிட முடியாத சோகத்துடன் அடங்க மறுத்த சிகையை சிலுப்பிக்

கொண்டு ஆறடி உயரத்தில் ஆளை ஈர்த்த இழுப்பல்லவா அது!

"என்னடி குருட்டு யோசனை?" காபியை ஆற்றியபடி வந்த இளமதி கேட்டாள்.

'உன்னை ஒருவன் உயிராய் நினைத்தானே அது உனக்குத் தெரியுமா? தெரியாதா?' கேட்க விரும்பிய கேள்வியை மனதில் கேட்டுக் கொண்டபடி காபியை வாங்கிக் கொண்ட சுவாதி,

"இன்னும் இரண்டு நாளில் நம்ம ஊர் திருவிழா ஆரம் பிக்குது நினைவிருக்கா, இல்லையா?" என்று கேட்டாள்.

"நினைவில்லாம என்ன? அம்மா போன வாரம் வந்து எங்களுக்கும், குழந்தைகளுக்கும் வாங்கிய புதுத் துணி களை கொண்டு வந்து கொடுத்திட்டு சொல்லிட்டுப் போனாங்க. என் மாமனாரும், மாமியாரும் பத்து நாளைக்கு முன்னாடியே வந்து நினைவு படுத்திட்டுப் போனாங்க."

"அம்மா வேறென்ன சொன்னாங்க."

"உன் வீட்டுக்காரர் யோகத்தப் பாரு. கடைசி வரைக் கும் செய்முறை செய்கிற மாமியார் வீடு யாருக்குக் கிடைக் கும்ன்னு சொன்னாங்க."

"உங்க செய்முறையைக் கொண்டு போய் குப்பையில் போடுன்னு சொல்ல வேண்டியதுதானே. நீயா செய்முறை வேணும்னு கேட்டே?"

"சொல்லலை சுவாதி. சொல்ல ஒரு நிமிசங்கூட ஆகாது. ஆனா அது அம்மாவை தூக்கி எறிஞ்சுப் பேசின மாதிரி ஆகிடும். அதை யோசித்துத்தான் பொறுத்துப் போகி றேன். அவங்க அது மட்டுமா சொன்னாங்க. 'நீ சம்பாதித்து ஆகப் போகிறதென்ன? அதான் நோகாம சொத்தைக் கொடுக்க நாங்க இருக்கோமே. நீயும் உன் வீட்டுக்காரரும் கொடுத்து வச்ச பிறவிங்கல்ல'ன்னு என் வேலையை மதிக்காமப் பேசினாங்க."



"இவங்க சொத்து யாருக்கு வேணும்? நீ சம்பாதிக்கறே. மாமா உன்னை விட மூணு மடங்கு சம்பாதிக்கிறார். நீங்க உழைத்துச் சம்பாதித்து வாங்கற சொத்தே போதும்க்கா."

"அதைத்தானே அவங்களாலே தாங்கிக்க முடியலை. எங்க கை தாழ்ந்தே இருக்கணும்னு நினைக்கிறாங்க. எங்கே எங்க கை உயர்ந்திடுமோன்னு பெரியம்மாவுக்கு பயம் வந்திருச்சு. இந்த வருச வெள்ளாமை நல்ல மகசூல் கண்டிருக்கு. பக்கத்து வயல் விலைக்கு வந்ததும் என் மாமனார் வாங்கிப் போட்டுட்டார். பெரியம்மாவிற்கு அது பொறுக்கலை. 'புதுசா வந்த வகிசி'ன்னு ஜாடை பேசி னாங்களாம். என் மாமியார் வந்து என்கிட்டே ஆத்திரப் பட்டாங்க. இவர் 'ஊர்க் கதையெல்லாத்தையும் இவ கிட்ட வந்து ஏன் கொட்டறே'ன்னு அவங்களை திட்டி அனுப்பிட்டார்" பேசிக் கொண்டே இளமதி இரவு சமைய லுக்கு சப்பாத்தி மாவைப் பிசையப் போக சுவாதி தடுத் தாள்.

"வேணாம்க்கா. உனக்கே தலைவலி. நான் வீட்டில் போய் சாப்பிட்டுக்கறேன்."

"உனக்குன்னு தனியாகவா செய்யப் போகிறேன். தலை வலியோடு காலையிலிருந்து வீட்டு வேலை பார்க்கலே? ஸ்கூலுக்குப் போயிட்டு வரலே? சாப்பிடாம போறாளாம். யாரோ மாதிரி பேசுறா. தினசரி தியாக துரு வத்தைத் தாண்டித்தானே கள்ளக்குறிச்சிக்கு படிக்கப் போறே. ஒரு எட்டு கூடப் பிறந்தவ எப்படி இருக்கான்னு வந்து பார்க்கறியா? ஆடிக்கொரு தரம், அமாவாசைக்கொரு

தரம்ன்னு வந்து போறவ சாப்பிடாமக்கூட போவியாடி?'' கோபமாய் இளமதி பேச, சமாதானப்படுத்தும் விதமாய்,

''சரி சரி. நான் சாப்பிட்டுட்டே போகிறேன். நீ மாவு பிசைஞ்சு கொடு. நான் தேய்ச்சுக் கொடுக்கிறேன்'' என்று கூறியபடி சப்பாத்தி தேய்க்கும் கட்டையுடன் அமர்ந்தாள். அவள் சப்பாத்திக்கு தேய்க்க எதிரே அமர்ந்து குருமாவுக்கு காய் வெட்டியவாறு இளமதி,

''பெரியம்மா எப்படி இருக்காங்க?'' என்றாள்.

''அப்படியேதான் இருக்காங்க. இருக்கிற இடத்தில் சேவகம் பண்ண உனக்கப்புறம் நானிருக்கேனே. மகாராணி போல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு நாற்காலியில் ஆடிக்கிட்டு அதிகாரம் பண்ணிக்கிட்டு இருக்காங்க.''

''நீ கோர்ஸ் படிக்க கள்ளக்குறிச்சிக்குப் போயிருவேல்ல.''

''அது ஒண்ணுதான் ஆறுதல். ஆனால் அதுக்கும் வேட்டு ஒண்ணு வச்சிருக்காங்க. காலையில் ஐந்து மணிக்கே எழுந்து அவங்களுக்கு வெந்நீர் விளாவி வைக்கிறது முதல் அவங்க வேலையை எல்லாம் செய்தால்தான் நான் படிக்கப் போக முடியும்ன்னு உத்திரவு இருக்கு.''

''பெரியம்மா ஒன்பது மணிக்கு குறைஞ்சு எழுந்திருக்க மாட்டாங்களே.''

''என்னை வேலை வாங்கணும்னு ஐந்து மணிக்கே அலாரம் வெச்சு எழுந்திருக்கிறாங்க.''

''வீட்டு வேலைக்கு ஒண்ணுக்கு நாலு ஆள் இருக்கில்ல?''

''இருக்கு. ஆனா பெரியம்மா வேலைகளையெல்லாம் நான் செய்தாத்தான் நறுவிசா இருக்காம். அவங்க சேலையை துவைக்கிறது உட்பட.''



''சின்னப் புத்தி'' வெறுப்புடன் கூறினாள் இளமதி.

சுவாதி சப்பாத்தி மாவை பெரியன்னையின் நினைவில் அழுத்தித் தேய்த்தாள். வாணலியில் எண்ணெயை விட்டு காய்கறிகளை அதில் போட்டு வதக்க ஆரம்பித்த இளமதி திரும்பிப் பார்த்து,

''நம்ம அம்மா நம்மளை பலிகடா ஆக்கிட்டாங்க. பெரியம்மாவை குத்தம் சொல்லி என்ன பண்ண?'' என்றாள்.

''ப்ச்சு. அவங்க அப்பா கூட வாழமாட்டேன்னு பிறந்த வீட்டுக்கு வந்திட்டாங்க. தாத்தாவுக்கு அப்புறம் பெரியம்மா கிட்ட அடைக்கலமாயிட்டாங்க. அடைக்கலமாய் போய் நம்மளை அகதிகளா பெரியம்மா கிட்ட விட்டது யாரு? அம்மாதானே.''

''அப்பாவை விட்டு விட்டு வந்ததுக்கப்புறம் அம்மா திரும்பிப் போகவேயில்லை. அவர் செத்ததுக்கு கூட மூணாம் மனுசி மாதிரி போயிட்டு உடனே திரும்பி வந்திட்டாங்க.'' இளமதி வெறுப்புடன் கூறினாள். தந்தையின் பேச்சு வரவும் சுவாதி தமக்கையை நிமிர்ந்து பார்த்து,

''அப்பா ரொம்ப அழகு'' என்றாள் பிரியமுடன். அதே பிரியத்தை மனதிலேற்ற இளமதி அங்கீகாரப் புன்னகையுடன்,

''ஆமாம் கொள்ளை அழகு. நீயும், நானும் அப்படியே அப்பா ஜாடையாம். உரித்து வைத்தது போல் இருக்கோமாம். எல்லோரும் சொல்வாங்க'' என்றாள்.

''அதனாலதான் அப்பாவைப் பிடிக்காத அம்மாவுக்கு அவரைப் போல் இருக்கிற நம்மைப் பிடிக்கலை போல'' என்று சுவாதி கூற அவள் அருகே மண்டியிட்டு தலையைக் கோதிக் கொடுத்த இளமதி,

அலட்டிக்கறே" என்றாள்.

"ஏண்டா மனசைப் போட்டு சப்பாத்திக்கு தேய்ப்பதை விட்டுவிட்டு தமக்கையின் மடியில் முகம் புதைத்த சுவாதி.

"திருவிழாவை நினைச்சா பயமாயிருக்கு" என்றாள் நலிந்த குரலில்.

"ஏன் சுவாதி?"

"மாமா வீட்டிலிருந்து திருவிழாவுக்கு வருகிறார் களாம்."

"ஓ!" என்று திகைத்த இளமதி, புரிந்து கொண்ட பாவனையாய் தங்கையின் கையை அழுத்தியவள்,

"நானும் தான் வருவேனே" என்றாள்.

"நீ வந்தாலும் உன் மாமனார் வீட்டிற்கு போய் விடுவே" என்று நம்பிக்கையில்லாமல் கூறிய தங்கையிடம்,

"போனாலும் உடனே வந்து உன் கூடவே இருப்பேன். போதுமா?" என்று ஆறுதலாய் கூறினாள் இளமதி.

"நிச்சயமாய்...?"

"நிச்சயமாய்."

இளமதி உறுதியாகக் கூறவும் முகம் தெளிந்த சுவாதி. "நீ நகர்ந்து கொள். சப்பாத்தியை நான் போட்டு எடுக் கிறேன்" என்றபடி சுறுசுறுப்பாய் எழுந்தாள். நீண்ட பின்ன லுடன் சுடிதாரின் துப்பட்டாவை இறுகக் கட்டிக் கொண்டு சப்பாத்தியை போட்டு எடுத்துக் கொண்டு இருந்தவளைப் பார்க்க இளமதி இரக்கமாக இருந்தது. அவளது அழ குக்கும், படிப்பிற்கும், அளிக்கப்பட்டிருந்த வசதிகளுக் கும் சுவாதி எவ்வளவு உற்சாகமாக இருக்க வேண்டும். ஆனால் அளிக்கப்பட்டிருந்த அந்த வசதிகள் அடிமை சாசனம் எழுதி வாங்கிய பின்னர் தானே அளிக்கப்



பட்டிருக்கின்றன? தன்மானத்தை குழி தோண்டிப் புதைத்த பின்னர்தானே வெகுமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இளமதி இதையெல்லாம் யோசித் ததே இல்லை. கீழ்ப்படியப் பழக்கப்படுத்தப் பட்டிருந்தவள் பதில் பேசாமல் கீழ்ப்படிந்தாள். சுவாதி அவளை விட ஆறு வயது இளையவள். கேள்வி கேட்கும் தலைமுறை. ஆராய்ந்து பார்க்கும் அறிவு. யோசிக்கும் திறன். சுயமரி யாதையில்லாத வாழ்வு அவளை வெருட்டுகிறது. சொந்தமில்லாத வசதிகள் அவளை வெறுக்க வைக்கிறது. பாவம் அலை பாய்கிறாள். கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டு காரியத்தில் ஆழ்ந்தாள் அந்தக் காரிகை.

## 3

சுற்றமெனும் பேர்கொண்டு
சுற்றிப் பலரிருந்தும்
நானிருந்தேன் தனித்தீவாய்
தொடுவானம் என்துணை வருமா?

இளமதி, சுவாதியின் தாய்வழித் தாத்தா சட்ட நாதனுக்கு ஒரு மகன், இரண்டு பெண்கள். மூத்தவள் அகிலாண்டேஸ்வரிக்கு உள்ளூரிலேயே பெரிய இடத் தில் பெண் கேட்டு வர மண முடித்துக் கொடுத்தார். அடுத் தவன் பரமசிவம் படிப்பில் கெட்டிக்காரன். மருத்துவம் படித்து அவன் டாக்டராகிவிட அவனுக்கும் மிகப்பெரிய இடத்தில் ஒரே பெண்ணாகப் பிறந்த அபிராமிக்கும் பேசி

முடித்து அவனை அபிராமியின் அனைத்து சொத்துக்
களுக்கும் சொந்தக்காரனாக்கி விட்டார் சட்டநாதன்.
எல்லோருக்கும் இளையவளான ரெங்கநாயகிக்கும்
மூத்தவர்களைப் போல் அவர் பெரிய இடத்தில் சம்பந்தம்
பேசிக் கொண்டிருக்க அவளோ அவருக்கு அந்த
வேலையை வைக்காமல் தானாய் மாப்பிள்ளை தேடிக்
கொண்டாள். தையல் படிக்கிறேன். பேர்வழி என்று பக்
கத்து டவுனுக்கு சென்று வந்த ரெங்கநாயகியை அங்கே
சாதாரண வேலையிலிருந்த நாராயணன் கவர்ந்து விட
ரெங்கநாயகி காதல் வசப்பட்டாள். உயரமாய், கம்பீரமாய்
ஒரு ரோமானிய சிற்பம் போல் அழகாய் தோற்றமளித்த
நாராயணனின் கவர்ச்சியில் மயங்கி விட்டாள்.

முதலில் எதிர்த்த சட்டநாதன் ரெங்கநாயகி வீட்டை
விட்டு வெளியேறி விடப் போவதாக பயமுறுத்தியவுடன்
மானம், மரியாதைக்கு அஞ்சி ஏழையென்றாலும் ஒரே
இனம்தானே என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக்
கொண்டு ரெங்கநாயகியை நாராயணனுக்கே மணமுடித்து
வைத்தார். திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குப் போன
ரெங்கநாயகிக்கு நாராயணனை பிடித்த அளவுக்கு அந்த
வீட்டின் ஏழ்மை பிடிக்காமல் போனது.

தன்மானச் சிங்கமான நாராயணன் மாமனார் வீட்டு
உதவியை மறுத்தார். ஏளனமாய் பார்க்கும் மாமனாரின்
வீட்டிற்குச் செல்வதை தவிர்த்தார். மதியாத மைத்துனரின்
முகம் பார்க்காமல் விலகினார். ஆனால் மதியாதார் தலை
வாசல் மிதியாத ரோஷமுள்ள ஆண் மகனின் மனைவி
யான ரெங்கநாயகியோ புகுந்த வீட்டை வெறுத்து பிறந்த
வீட்டிலேயே தங்க ஆரம்பித்தாள். ஒரே வருடத்தில்
இளமதியைப் பெற்றெடுக்க தலைப் பிரசவத்திற்கு தாய்



வீடு சென்றவள் திரும்பி வர மறந்து அங்கேயே ஐந்து
வருடங்களாக தங்கிவிட அக்கம் பக்கமுள்ள உறவினர்
களும் ஊர்ப் பெரியவர்களும் பஞ்சாயத்து பேசி அனுப்பி
வைத்தனர். வந்தவள் வார முடிவில் திரும்பிப் போய்விட
நாராயணன் தவித்துப் போனார். மீண்டும் ஊர் பெரிய
வர்கள் தலையிட வந்து சேர்ந்தவள் 'பழைய குருடி
கதவைத் திறடி' என்று ஏதேனும் காரணத்தை சாக்காய்
கொண்டு பிறந்த வீடு சென்றுவிட நாராயணன் கெஞ்சி
அழைத்து வர என்று நிலையில்லாத குடும்ப வாழ்வு
அமைந்துவிட நாராயணன் நிலை குலைந்தார். ரெங்க
நாயகியை மறக்கவும் முடியாமல் அவளை தன் வசம்
வைத்திருக்கவும் இயலாமல் விரக்தியில் வசமான
நாராயணன் குடிப் பழக்கத்திற்கு அடிமையானார். ஆனால்
அதுவே ரெங்கநாயகியின் மனச்சாட்சியை தட்டி எழுப்
பாமல் அவள் பிறந்த வீட்டிலேயே நிரந்தரமாய் தங்கி விட
வலுவான காரணமாய் அமைந்து விட்டது. இளைய மகள்
சுவாதி பிறந்த செய்தியைக் கூட நாராயணனுக்கு தெரி
விக்கவில்லை. தானாக தெரிந்து கொண்டு குழந்தையைப்
பார்க்க வந்த நாராயணனை குழந்தையைப் பார்க்க
விடாமல் அவமரியாதை செய்ய உடைந்துப் போன உள்ளத்
துடன் திரும்பி வந்தவர், அதற்குப் பின்னர் மிக அதிக
அளவில் குடிக்க ஆரம்பித்தார் மகனை நினைத்து மறுகி,
மறுகி நாராயணனின் தாய் கண் மூடி விட நாராயணன்
மனைவி, மக்களிருந்தும் அநாதையானார்.

நாராயணனைப் போலவே அழகின் சிகரமாய் விளங்கிய
அவரது அக்கா கமலம் பணக்கார குடும்பத்தில் வாழ்க்கைப்
பட்டிருந்தாள். கோயம்புத்தூரில் வாழ்ந்தவள் தம்பியை
தன்னிடம் அழைக்க தமக்கையின் உதவிக்கரத்தையும்
நிராகரித்தார் நாராயணன். தம்பியின் நிர்க்கதியான

நிலையை எண்ணி துயருற்ற கமலம் தம்பி மகள்களில் ஒருத்தியை தன் மருமகளாக்கிக் கொண்டால் தம்பி தன் குடும்பத்திற்குள் வருவான் என்று எண்ணினாள். தமிழில் ஆர்வமுள்ள கமலத்தின் கணவர் மணிமாறன் மூத்த மகளுக்கு கனிமொழி என்று பெயரிட்டு அடுத்த மகனுக்கு இளஞ்செழியன் என்று பெயரிட்டிருந்தார். தன் தம்பியின் மூத்த மகளுக்கு 'இளமதி' என்று பெயர் சூட்ட வைத்தாள் கமலம்.

மூத்த மகளுக்கு பெயர் வைப்பதில் உரிமை பெற் றிருந்த நாராயணன் இளைய மகளின் பெயர் கூட அறி யாத நிலைக்குத் தள்ளப்பட்டார். பிள்ளைப் பாசம் அதிக மானதால் அவர்கள் படிக்கும் பள்ளிக்குச் சென்று பிள்ளை களைப் பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டபோது தான் இளையவளின் பெயர் 'சுவாதி' என்பதே அவருக்குத் தெரிய வந்தது. மனைவியின் பிரிவைத் தாங்கிக் கொண்ட வருக்கு குழந்தைகளைப் பிரிந்து இருப்பது கொடுமை யாகிப் போனது. மனத் துயருடன் போராடிக் கொண் டிருந்தவரை மரணத்தின் வாசலில் வேகமாய் தள்ளி விட்டது. அவரை அழைக்காமலே ரகசியமாய் முடிந்து விட்ட இளமதியின் திருமணச் செய்தி.

நாராயணனைப் போலவே அதிர்ச்சி அடைந்த கமலம் மகனுக்கு மணமுடிக்க நினைத்திருந்த தம்பி மகளை மற்றவர் வீட்டில் மண முடித்து வைக்க ரெங்கநாயகிக்கு எப்படி மனம் வந்தது என கொதித்துப் போனாள். கோபத் துடன் உறவினர்களை அழைத்துக் கொண்டு நியாயம் கேட்கப் போனவளை சட்டநாதனின் மறைவுக்குப் பின்னர் தங்கையின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அகிலாண்டேஸ்வரி அதிகாரமாய் எதிர்கொண்டாள்.



''கதவு திறந்திருந்தா கூட்டமாய் வந்திர்றதா?'' உட் காரக் கூடச் சொல்லாமல் நிற்க வைத்துப் பேசியவளின் வார்த்தைகளில் திமிரும், ஏளனமும் பொங்கி வழிய வந்தவர்கள் பொங்கினார்கள்.

''கூட்டமாய் வரவேண்டிய அவசியம். வந்திருக்கோம். உங்க தங்கச்சியைக் கூப்பிடுங்க'' என்றாள் கமலம்.

''அவளைக் கூப்பிட நீ யார்?''

''அவ புருசனின் அக்கா. அவளோட நாத்தனார்.''

''புருசனே வேண்டாம்னு வந்திட்டா. நாத்தனார் உறவு என்ன வேண்டிக் கிடக்கு?''

''உறவு கொண்டாட யாரும் இங்கே வரலை. என் தம்பிக்கும் எனக்கும் தெரியாமல் என் தம்பி மகளுக்கு நீங்களா எப்படி கல்யாணம் நடத்தலாம்?''

''என் தங்கச்சி மகளுக்குத்தான் கல்யாணம் செய்து வைத்தேன்.''

''அப்பன் என் தம்பிதான். மறந்திராதீங்க.''

''அந்த குடிகாரனைத்தான் வேண்டாம்னு உதறிட்டு என் தங்கச்சி வந்திட்டாளே.''

''அவனை குடிகாரனாக்கியது யாரு? கூட இருந்து பொழப்பு நடத்தாம அவனை தறிகெட்டு அலைய விட்டது யாரு?''

''இல்லாதவங்க. இருக்கப்பட்டவங்க வீட்டில் பெண் ணெடுத்தா அப்படித்தான் ஆகும்.''

''அவன் இல்லாதவன் சரி. நான் இருக்கப்பட்டவ தானே. மாமன் மகளைக் கட்ட என் மகனுக்குத்தானே உரிமையிருக்கு. உடந்தைப்பட்டவனிருக்க அவன் முறைப் பெண்ணை அவனுக்குத் தெரியாமல் எப்படி அடுத்தவ

ணுக்கு கட்டி வைப்பீங்க. அப்படியென்ன அவங்க வசதியிலே, படிப்பிலே, அழகில என் மகளை விட பெரிய ஆளா? இல்லையே. இல்லாத வீட்டில்தானே பொண்ணைக் கொடுத்திருக்கீங்க" படபடப்பாய் பேசிக் கொண்டு போன கமலத்தை இடைமறித்த அகிலாண்டம்,

"பாரும்மா. சும்மா பேசிக்கிட்டேப் போகாதே. அப்பன் சரியில்லாத பொண்ணுக்கு இப்படித்தான் கல்யாணம் முடியும். ஊம்.. ஊம்.. நடையைக் கட்டு" என்று கதவைக் காட்டிப் பேசினாள். அவள் பேசின விதத்தில் அவமானப் பட்டுப் போன கமலமும் மற்ற உறவினர்களும் ஊர் திரும்பினார்கள். அடுத்த இரு தினங்களில் நாராயணன் அமைதியைத் தேடிச் சென்று விட்டார். இறைவனடி சேர்ந்து விட்ட தம்பியின் மரணத்திற்குப் பின்னர் பிறந்த ஊரோடு கமலத்துக்கு இருந்த ஒரே தொடர்பும் அறுந்து விட அவள் கோயம்புத்தூரிலேயே ஐக்கியமாகி விட்டாள்.

இளம் வயதிலேயே விதவையாகிவிட்ட அகிலாண்டேஸ்வரி கணவனின் அனைத்து சொத்துக்களுக்கும் அதிபதி ஆகிவிட்டிருந்தாள். சட்டநாதன் இருக்கும் போதே ரெங்கநாயகியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவள் அவரின் மறைவுக்குப் பின்னர் 'நீயே கதி'யென்று ரெங்கநாயகி தமக்கையின் தயவில் வந்து விட அவளின் மீதும் அவள் பெண்களின் மீதும் அகிலாண்டேஸ்வரியின் ஆதிக்கம் அடிமைச் சங்கிலியாய் விழுந்து பிணைத்துக் கொண்டது. அடி பணிந்து பழக்கப்படுத்தப்பட்ட இளமதி என்றும் நிமிர்ந்து விடாமலிருக்க மிக ஏழ்மையான படிப்பறிவில்லாத குடும்பத்தில் மணமுடித்து வைக்கப்பட்டாள். அடுத்தவளையும் அப்படியே மழுங்கடிக்க அகிலாண்டம் முயன்று கொண்டிருந்தாள்.



ஆனால் இளமதியின் வாழ்க்கையில் அகிலாண்டம் ஆடிய விளையாட்டை சுவாதியின் வாழ்க்கையில் ஆட முடியுமா? என்று சமீப காலமாய் அவள் கவலைப்பட ஆரம்பித்திருக்கிறாள். இளமதி மென்மையானவளாய் இருக்க இளமதியின் தங்கை சுவாதியோ வன்மையானவளாய் தகப்பனின் ரோசத்தையும், சுயமரியாதையையும் கொண்டவளாய் இருந்தாள். அன்பிற்காக, பாசத்திற்காக ஆயிரம் சேவைகள் அவள் பெரியம்மாவிற்கு செய்யத் தயாராக இருந்தாள். ஆனால் "அநாதைகளுக்கு வேறு போக்கிடம் ஏது?" என்று அவள் காதுபட கூறிக் கொண்டே தான் சாப்பிட்ட இடத்தை சுத்தம் பண்ண வைப்பதிலிருந்து இரவில் தைலம் தடவி கால் பிடித்து விடக் கூட சுவாதிதான் வரவேண்டுமென்று கட்டளையிடும் குரூரம் சுவாதிக்கு ஓர் அவமான உணர்வை உண்டு பண்ணியது. இளமதி இருக்கும் வரை சுவாதியை பாதுகாத்தாள். அவள் மணம் முடித்துச் சென்ற பின்னர் அந்தச் சிறுமியை தனிமையும் பயமும் சூழ்ந்து கொண்டன. அணுக முடியாத அன்பு காட்டத் தெரியாத அம்மா, ஆணவத்துடன் அவமதிக்கும் பெரியம்மா, எகத்தாளமாய் பார்க்கும் டாக்டர் மாமா, அவரின் பணக்கார திமிர் பிடித்த மனைவி, அவர்களின் அளவில்லாத சொத்திற்கு வாரிசான அழகில்லாத இரண்டு மகள்கள், அவர்களின் பொறாமைத் தீ. அந்தத் தீயின் தணலில் தன்னந் தனியாக வாட்டப் பட்ட சுவாதி அந்த வீட்டை வெறுத்தாள். அந்த வீட்டின் மனிதர்களை வெறுத்தாள். இறந்துப் போன தந்தையை நினைத்து மறுகினாள். அழிக்கப்பட்ட தமக்கையின் வாழ்வை நினைத்து உருகினாள். அன்புக்காக ஏங்கிய அந்தச் சின்னஞ்சிறு கிளி சிறகடிக்க முடியாமல் சிறையுண்டு கிடந்தது.

# 4

அழகிலே திருமகளாம் - அவள்
அறிவிலே கலைமகளாம் - மங்கல
முகத்திலே மலைமகளாம் - அவள்
முன்னாலே தொடுவான நிழலாம்

நகர்ப்புற மக்கள் புத்தாடை அணிந்து புதுவகை பல காரங்கள் செய்து கொண்டாட வருடந்தோறும் பல பண்டிகைகள், வரும். தீபாவளி, பொங்கல், வருடப் பிறப்பு மற்றும் குடும்பத்தினர் பிறந்த நாள், திருமண நாள் என்று எத்தனையோ. ஆனால் இவற்றின் குதூகலம் கிராமம் அறியாதது. கிராம மக்கள் தைப்பொங்கலைத்தான் கொண்டாடுவார்கள். அதுவும் கூட அன்று பொங்கும் சர்க்கரைப் பொங்கல் மட்டுமே விசேஷம். இதை அறிந் திருந்த பெரியோர்கள் வருடந்தோறும் கிராமங்களில் கோவில் திருவிழாக்களை ஏற்படுத்தி வைத்தார்கள். வீடு தோறும் கடன் வாங்கியாவது திருவிழாவிற்கு புத்தாடை எடுத்து விடுவார்கள். அசைவ உணவு சமைப்பார்கள். சொந்த பந்தங்களை அழைத்து விருந்து வைப்பார்கள். ஊரே ஒன்று கூடும் அந்த விழாக்கள் கிராமக் கலாச் சாரத்தையும், ஒருமைப்பாட்டையும் உணர்த்துவதாக இருக்கும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் உறவினர்கள் வந்திருக்க, ஊர் கோவிலில் மைக்செட் அலற, அதன் கீழ் கிராமத்து வாண் டுகள் டப்பா டான்ஸ் ஆட, இளவட்டங்கள் வேட்டியை பிடித்துக் கட்டிக் கொண்டு இங்கும் அங்கும் உல்லாசமாய்



அலைய மாவிளக்கு, முலைப்பாரி சுமந்து வயதுப் பெண்கள் புதுப் பாவாடை தாவணியில் அலங்காரமாய் பெட்ரோமாக்ஸ் லைட் வெளிச்சத்தில் வரிசையாய் பவனி வர எத்தனையோ பார்வை பரிமாற்றங்கள் அந்த திருவிழா நாள்களில் மலரும் நினைவுகளாய் மனதில் பதியும். எத்தனையோ திருமணங்கள் அந்த விழாநாள் களில் நிச்சயிக்கப்படுவதுண்டு. திருமணங்கள் சொர்க் கத்தில் நிச்சயிக்கப்படுவது உண்மையென்றால் அந்த விழா நாள்கள் கிராம மக்களின் சொர்க்கம்.

அகிலாண்டேஸ்வரியின் வீட்டிலும் உறவினர்கள் வந்து இறங்கினர். பரமசிவம், அபிராமி தம்பதியினரும் அவர்கள் பெற்ற ரத்தினங்களும் வந்து இறங்கியதிலிருந்து அவர்களின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. அவர்களின் ஏவல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சுவாதி திணறிக் கொண்டிருக்கையில் இளமதி வந்து சேர்ந்தாள்.

''அக்கா வந்திட்டியா?'' சுவாதி ஆர்வமாய் கட்டிக் கொள்ள.

''உன் அக்கா டில்லியிலிருந்தா வந்திருக்கா. இந்தா இருக்கிற தியாகத் துருவத்திலிருந்து வந்திருக்கா. நீ போய் தம்பி வீட்டைக் கவனி. இங்கே ஆடினது போதும்'' என்று அதிகாரமாய் ஆணையிட்டாள் அகிலாண்டம். சுவாதியின் முகம் சுருங்கி விட்டதைக் கண்ட இளமதி ஆதரவாய் அவளது கையை பிடித்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

''அஜய்யும், பல்லவியும் எங்கேக்கா?''

''எங்க மாமனார் வீட்டில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன்.''

''அங்கேயே விட்டு விட்டு வரணுமா? இங்கே கூட்டி வரக்கூடாதா?''

சுவாதியின் குரலில் ஏக்கம் இழைந்தோட என்ன சொல்வதென்று தெரியாமல் இளமதி தடுமாறினாள். தாயின் ஜாக்கிரதை உணர்வு அவளுக்கு. தான் சிறுமைப் பட்டாலும் தன் குழந்தைகளுக்கு பெருமை மட்டுமே வரவேண்டும் என்ற தீர்மானம். பார்த்துப் பார்த்து வளர்க்கும் குழந்தைகள் சொல்லடி பட்டுவிடக் கூடாதென்ற கவனம். அவளைப் பொறுத்தவரை அவள் பெற்ற செல்வங்கள் ராஜா வீட்டுக் குழந்தைகள். அகிலாண்டேஸ்வரிக்கு இளமதி இளப்பமாகத் தெரிய வளர விட்டது இளமதியின் தாய் ரெங்கநாயகி செய்த மன்னிக்க முடியாத குற்றம்.

ஆனால் இளமதி தன் குழந்தைகளை போற்றி வளர்ப்பவள். சிறு துன்பம் கூட அவர்களுக்கு நேர விடாமல் தாங்கி வளர்ப்பவள். தன் குழந்தைகளை அகிலாண்டம் எப்படி நடத்துவாள் என்பதை நன்கு அறிந்தவள். எனவே தன் குழந்தைகளை அகிலாண்டம் இளப்பமாக நினைக்க ஒரு போதும் அவள் அனுமதித்ததில்லை. குழந்தைகளை அவள் கண்ணில் பட விட்டதுமில்லை. எனவேதான் குழந்தைகளை மாமனார் வீட்டில் விட்டு விட்டு அவள் மட்டும் சுவாதிக்காக வந்தாள். அதைச் சொன்னால் ஏற்கனவே மனம் நொந்து வாழும் சுவாதியின் மனம் இன்னும் நோகாதா? எனவே.

"நம்மை மாதிரியே தாய் வீட்டுச் சொந்தம் போதும்ன்னு அவங்களையும் வளர விடணுமா? பெரியவங்க மனசு வேதனைப் படாதா? அவர்களுக்கும் பேரன், பேத்திகள் வந்து இருக்காங்க என்று ஆசை இருக்குமில்லே" என்று தங்கையின் முகம் வாடாமல் இதமாய் எடுத்துரைத்த இளமதி பேச்சை மாற்ற விரும்பி "இந்தா திருவிழாவிற்கு நான் எடுத்த டிரஸ்" என்று கொடுத்தாள்.



"தேங்க்ஸ் கா."

"பெரியம்மா என்ன டிரஸ் எடுத்துக் கொடுத்தாங்க காண்பி."

"ச்சு நீயொன்றும் பார்க்க வேண்டாம்."

"ஏண்டா விலை கம்மியா?"

"அதெல்லாம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு எடுத்துக் கொடுத்திருக்கு. சும்மா கொடுக்க வேண்டியது தானே. 'நாராயணன் பெத்ததுகளுக்கு நான் அழுக வேண்டியிருக்கு. அகிலாண்டம் வீட்டில் தண்டச்சோறு தின்னுகிற அன்னக்காவடிக்கு ஆயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு புதுத்துணி? என் சொத்தை அனுபவிக்க நீ வரம் வாங்கி வந்திருக்கே. உனக்கு அழுக நான் வரம் வாங்கி வந்திருக்கேன். இந்தாப்புடி'ன்னு முகத்தில் விட்டு எறிஞ்சாங்க" கண்கள் கலங்க விவரித்தவள் அடக்க முடியாமல் விம்ம.

"சுவாதி" என்று இளமதி தங்கையை அணைத்துக் கொண்டாள். இப்படித்தான் சுவாதியும், இளமதியும் உண்ணும் ஒவ்வொரு கவளத்தின் பின்னும், ஒவ்வொரு துணியின் பின்னும் அணியும் ஒவ்வொரு நகைகளின் பின்னும் ஆயிரம் கதைகளிருக்கும்.

"உன் கோர்ஸ் இந்த வருடம் முடியுதில்ல."

"ஆமாம்க்கா."

"இதை முடித்தவுடன் வேலை நிச்சயம் சுவாதி. நான் வாங்கி தருகிறேன். நீ மனதை தளர விட்டு விடக் கூடாது. இந்த மட்டில் நம் சுய சம்பாத்தியத்துக்கு வழி செஞ்சிருக்காங்களே. அதை நினைத்து அமைதியாயிரு."

"சும்மா ஒன்றும் செய்யலை. அதற்கு சரியா நாமும் உழைத்து இருக்கிறோம்."

"இருக்கட்டும் படிக்க வைக்க மாட்டேன்னு சொல்லியிருந்தா நம்ம கதி என்ன ஆகிறது?"

"உன் கதி எப்படியும் நல்லாதானிருக்கும். நீதான் அவங்க சொன்னதை அப்படியே முதுகெலும்பில்லாம செய்திடுவாயே. என் கதிதான் அதோ கதியாகி என்னைப் புதைத்த இடத்தில் புல் முளைச்சிருக்கும்."

"சுவாதி" என்று அலறியபடி அவள் வாயை பொத்திய இளமதியின் கரம் நடுங்கியது. அவள் இதயம் துடித்தது. 'ஆண்டவனே! ஏன் இந்த பெண்ணிற்கு இவ்வளவு ரோசத்தையும், சுயமரியாதையையும் கொடுத்தாய்? இந்தச் சூழ்நிலையிலிருந்து அவளைக் காப்பாற்ற மாட்டாயா?' அந்தத் தமக்கையின் மனம் இறைவனிடம் தங்கைக்காக கெஞ்சியது.

"சுவாதி" அகிலாண்டேஸ்வரி அழைக்கும் குரல் கேட்டு அக்காளும், தங்கையும் கண்களை துடைத்துக் கொண்டு வெளியே விரைந்தனர்.

"என்ன பெரியம்மா?"

"திருவிழா நாள்ல கூட மற்ற நாட்களை போல மலைச்சு மலைச்சு நிற்கணுமா? ஓடியாடி வேலை செஞ்சாத்தான் நான் உட்கார வைத்து போடுகிற தெண்டச் சோறு செரிமானம் ஆகும். உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. அகிலாண்டேஸ்வரி சொத்து பத்துக்கு அன்னக்காவடி மக வாரிசாகணும்னு விதிச்சிருக்கே" அகிலாண்டம் அர்ச்சனை செய்ய அதை நமட்டுச் சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். மாமா பரமசிவத்தின் மகள்களான பூமாவும், பாமாவும், அவமானத்தில் குன்றிப் போன சுவாதி எரிமலையை மனதில் அடக்கிக் கொண்டவளாய்,



"இப்ப என்ன செய்யணும் பெரியம்மா?" என்றாள்.

"பாமாவின் கால் விரல்களுக்கும் கை விரல்களுக்கும் மருதாணி வைத்து விடு."

"என்னது கால் விரல்களுக்குமா?"

"ஏன் அலர்றே கல்யாண வயதுல நிற்கிற பொண்ணு. கால் விரல் அழகா இருக்க வேணாமா?" 'நானும் கல்யாண வயசு பொண்ணுதான்' என்று மனதுக்குள் பொருமிக் கொண்ட சுவாதி மருதாணிக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு மாமாவின் இரண்டாவது மகளான பாமாவின் கை விரல்களை தொடப் போனாள்.

"பொறு பொறு. முதலில் காலில் இட்டு விடு அப்புறம் கையில் இட்டுக் கொள்கிறேன்" படக்கென்று சுவாதியின் முகத்துக்கு நேரே கால்களை நீட்ட, பாமாவின் கால்கள் சுவாதியின் முகத்தில் பட்டுவிட சுவாதி துடித்துப் போனாள். அடிபட்ட வேதனை முகத்தில் தெரிய கன்றிப் போன முகத்துடன் சுவாதி ஊமையாய் அவள் கால்களுக்கு மருதாணி இடலானாள். மனம் தாளாத இளமதி,

"நீ நகர்ந்துக்க சுவாதி. உனக்கு மருதாணி இடத் தெரியல. நான் வைத்து விடுகிறேன்" என்றபடி தங்கையின் கையில் இருந்த மருதாணிக் கிண்ணத்தை வாங்கப் போனாள்.

"அதெல்லாம் அவ நல்லாத்தான் மருதாணி இடறா. நீ இங்கே வா பூமா கைபிள்ளைக்காரி தெரியுமில்ல. அவ குழந்தையின் ஜட்டிகளை அலசிப் போடு."

'ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் அழகிய மங்கை மாமாவின் மகளின் குழந்தை அசிங்கம் பண்ணியிருந்த ஜட்டிகளை அலசிப் போடுவதா?' சுவாதி இதழ்கள் துடிக்கப் பேசத் தொனிக்க, இளமதி அவளை விழிகளால்

எச்சரித்தவாறு ஜட்டிகளை எடுத்துக் கொண்டு பின் பக்கம் விரைந்தாள். நடப்பவை அனைத்தையும் சலன மில்லாமல் ரெங்கநாயகி பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அன்று இரவு அலங்கார விளக்குகளால் ஜொலித்த அம்மன் கோவிலுக்கு குடும்பத்தோடு போனார்கள். அர்ச்சனை சாமான்கள் அடங்கிய தட்டை சுவாதி சுமந்து வர இளமதி பூமாவின் குழந்தையை தூக்கி வந்தாள். கோவிலில் அபிஷேகம், தரிசனம் எல்லாம் முடிந்து வெளியே வரும்போது,

"சௌக்கியமா அத்தை" என்று குரல் கேட்டு நிமிர்ந் தாள். அகிலாண்டம். அகிலாண்டத்தின் கணவரின் ஒன்றுவிட்ட தங்கை மகன் வேலுத்தம்பி நின்றிருந்தான்.

"வாடாப்பா வேலு. எங்கே ரொம்ப நாளா ஆளைக் காணோம்."

"பிஸினஸ் விஷயமா வெளியூர் போயிருந்தேன் அத்தை."

"அது வெளியூரா, இல்லை வேலூரா?" அடிக்கடி திருட்டு வழக்குகளில் மாட்டிக் கொண்டு சிறை சென்று வரும் வழக்கமுள்ள அவனைப் பார்த்து பாமா கிண்ட லாகக் கேட்க சுவாதி வாய் விட்டுச் சிரித்து விட்டாள். கேள்வி கேட்டவளை விட்டு விட்டுச் சிரித்தவளை பார்த்து அகிலாண்டம் முறைத்தாள். அவளது பார்வையின் வேகம் தாளாமல் சுவாதியின் சிரிப்பு மறைந்தது. அதற்குள் எல்லோரும் வந்துவிட கோவில் வாசலில் விட்ட செருப்புகளைப் போடப் போனார்கள்.

"எங்கே என் செருப்பு?" என்று அகிலாண்டம் தேட,

"இதுவா அத்தை" என்றபடி அகிலாண்டத்தின் செருப்பு களை எடுத்து வந்து அவளது காலடியில் போட்டான்



வேலுத்தம்பி. அந்த செயலால் பூரித்துப் போன அகி லாண்டேஸ்வரி முகமெல்லாம் மலர செருப்புகளை போட்டுக் கொள்ள பரமசிவத்தின் மனைவி அபிராமி,

"மாமியாருக்கு மருமகன் இப்போதே பாதபூஜை பண்ணுகிறார் போல" என்றாள் கேலியாக சொல்வது போல்" அந்த வார்த்தைகளில் அடிபட்டவளாய் சுவாதி திகைப் புடன் இளமதியை நோக்கினாள். அகிலாண்டத்தின் பார்வை யோசனையாய் வேலுத்தம்பியின் மேல் விழுந்தது. தங்கையின் திகைத்த பார்வையும், அகிலாண்டத்தின் யோசனையான பார்வையும் நடக்கப் போவதை இள மதிக்கு உணர்த்த அனுபவசாலியான இளமதியின் அடி வயிற்றில் கலக்கம் மூண்டது.

## 5

எட்டாத கனியினைப் போல்
எட்டிப் போகும் இன்ப வாழ்வே!
தொடுவானம் என் கனவா?
துன்ப வாழ்வு என் கனவா?

பரமசிவத்தின் மனைவி அபிராமி பெரிய செல்வந் தரின் ஒரே மகள் தாய் வீட்டுச் சொத்தோடு டாக்டரான பரமசிவமும் கை கொள்ளாமல் சம்பாதித்துத் தள்ள அள்ள அள்ள குறையாத செல்வத்துடன் வாழ்ந்து வந்தாள். இருந் தாலும் பணம் படைத்த தன் மகள்களை விட நாதியற்றுப் போன நாத்தனார் ரெங்கநாயகியின் மகள்கள் அழகின் இலக்கணமாய் விளங்குதல் கண்டு பொருமிப் போனாள்.

அழகிகளாக இருந்தாலும் பணத்தில் குறைந்தவர்கள் தானே என்று நிம்மதியடைய முடியாமல் அவர்கள் அகிலாண்ட ஈஸ்வரியின் சொத்துக்கு வாரிசுகள் என்ற பேச்சே அடிபடவே அவளது வயிறு எரிய ஆரம்பித்தது. எரியும் வயிற்றில் மேலும் எண்ணெயை ஊற்றுவது போல் இரண்டு பேருமே நன்றாகப் படிக்க ஆரம்பிக்க அபிராமி துடித்துப் போனாள். அதைத் தூண்டி விடுவது போல் பெரிய இடத்தில் இளமதியை திருமணம் செய்து கொடுத்து விடுவார்களோ என்று பயப்படையில் அகிலாண்ட ஈஸ்வரி அடிமட்டத்தில் இளமதியை பொருந்தாத் திருமணம் செய்து கொடுத்து அவள் வயிற்றில் பாலை வார்த்தாள். இப்போது சுவாதியோ இளமதியை விட நாகரிகப் பழக்கங்களால் பொலிவுற்றுத் திகழ பாமா பொறாமையால் வெந்து தாயிடம் புகார் கூற அபிராமி சுவாதியை அழிக்க நேரம் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

இளமதியைக் கொடுத்தது போல் சாதாரண இடத்தில் கூட சுவாதியைத் திருமணம் செய்து கொடுத்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள். ஏனென்றால் ஏழ்மை நிலையிலிருந்த கோவிந்தனுக்கு இளமதியைக் கொடுத்து அவனுக்கு ஒரு சிறிய மளிகைக் கடையொன்றை மட்டும் தியாக துருவத்தில் வைத்துக் கொடுத்தார்கள். ஆனால் யாருமே எதிர்பாராத விதமாய் இளமதியின் கணவன் பேய்த்தனமாய் உழைத்தான். அவனது அசுர உழைப்பால் சிறிய பெட்டிக்கடையில் தொடங்கிய மளிகைக்கடை இன்று தியாக துருவத்தில் முதன்மையான மளிகைக் கடையாக விளங்குகிறது.

போதாதற்கு இளமதி ஆசிரியை வேலை கிடைத்து விட இரட்டை வருமானம் கிடைக்கப் பெற்றது. ஒன்றைப்



பத்தாக்கும் இளமதியை கணவன் தற்போது பத்தை நூறாக்கினான்.

விழுப்புரத்தில் அபார்ட்மெண்ட் டைப்பில் அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றைக் கட்டிக் கொண்டிருப்பதாக மற்றவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டதிலிருந்து அபிராமியின் அடிவயிறு பற்றிக் கொண்டது. கிராமத்தில் பம்ப் செட்டை சரி பண்ணிக் கொடுத்ததினால் இளமதியின் மாமனாரும், மாமியாரும் கடுமையாய் உழைக்க நிலமகள் கண் திறந்தாள். அமோக விளைச்சலினால் அடுத்தடுத்த வயல்களையெல்லாம் வாங்கிப் போட ஆரம்பித்த இளமதியின் கணவன் அகிலாண்ட ஈஸ்வரியின் சொத்துக்களின் அளவை நெருங்க ஆரம்பித்தான். மூன்று வருமானம் கிடைக்கும் இளமதியின் அந்தஸ்து உயரும் நேரத்தில் அபிராமியின் மூத்த மகள் பூமாவின் அந்தஸ்து சரிய ஆரம்பித்திருந்தது.

+ 2 முடித்த பூமாவை வசதியான இடத்தில்தான் மணமுடித்துக் கொடுத்தார்கள். ஏகப்பட்ட சீர்வரிசையோடு போன பூமாவிற்கு புகுந்த வீட்டில் மதிப்பு கிடைக்கவில்லை. மாதா மாதம் ஏதேனும் ரூபத்தில் பூமாவின் கணவனுக்கு படியளக்க வேண்டும். நிறுத்தினால் பூமாவின் பாடு திண்டாட்டமாகி விடும். பணததைக் கொடுத்து வாழவேண்டிய நிலையில் பூமா இருக்க இளமதி நிம்மதியாய், மதிப்புடன் வாழ்வது அபிராமிக்குப் பொறுக்கவில்லை. எனவே இளமதியின் கணவன் போல் உழைப்பாளியான, எந்தவிதத் தீய பழக்கங்களும் இல்லாதவன் சுவாதிக்கு வந்துவிடக்கூடாது என்று எண்ணியவளின் எண்ணத்தில் தென்பட்டவன்தான் வேலுத்தம்பி.

வேலுத்தம்பி தீய குணங்களின் மொத்த உறைவிடம் உழைக்க அஞ்சும் சோம்பேறி. மழைக்குக் கூட

பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்காத தற்குறி. பொய், திருட்டு, குடி அவனுக்கு கைவந்தகலை. நடத்தை சரி இல்லாதவன். இன்னும் கொலை ஒன்றுதான் பண்ணவில்லை. அதையும் கூடிய சீக்கிரம் பண்ணி விடுவான் என்பது அபிராமியின் கணிப்பு. குரங்கு கையில் பூமாலை கிடைத்தால் என்ன ஆகும்? நாய் வாயில் வைரம் கிடைத்தால் அதற்கு அதன் மதிப்பு தெரியுமா? வேலுத்தம்பியிடம் சுவாதி மாட்டுவதும் இவற்றைப் போலதான். அகிலாண்ட ஈஸ்வரி எப்போதும் அடிமைகளை விரும்பும் குணமுள்ளவள். வேலுத்தம்பி அவளுக்கு அடிமை வேலை செய்யும் சமயம் பார்த்து இந்த நச்சு விதையை அவள் மனதில் விதைத்து விட்டாள் அபிராமி.

மறுதினம் ஓய்வாக அகிலாண்ட ஈஸ்வரியின் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது போல் பேசிக் கொண்டிருந்த அபிராமி பேச்சு வாக்கில் கேட்பது போல் கேட்டாள்.

"என் அண்ணி அந்தத் தம்பி உங்க நாத்தனார் மகன் முறைதானே."

"யாரைச் சொல்றே அபிராமி?"

"அதுதான நேத்து கோவிலில் பதவிசா உங்க செருப்புக்களை எடுத்து வந்து கொடுத்துடுச்சே அந்தப் பிள்ளை தான்."

"வேலுத்தம்பியைச் சொல்றியா? என் வீட்டுக்காரருக்கு சித்தப்பா மகன்தான். அவங்க அம்மா என் நாத்தனார் மகள் முறைதான்!"

"சொந்த பந்தம்கிறது சரியாத்தான் இருக்கு. என்னதான் இருந்தாலும் மாமன் பெண்டாட்டியில்லையா? வசதி குறைஞ்சிருந்தாலும் வீராப்பு குறையாம இருக்காது.



அதே உங்க வழி சொந்தம்னதும் காலைத் தொட்டுக் கும்பிடுது. கவனிச்சிங்களா."

முதல் நாள் விதைத்த விதைக்கு அபிராமி தண்ணீர் பாய்ச்சி செடியாக்கி விட்டாள் அகிலாண்ட ஈஸ்வரி யோசித்து, யோசித்து அதை மரமாக்கும் மார்க்கத்தில் செல்ல ஆரம்பித்தாள். அதைச் சரியாக கணித்து விட்ட அபிராமி மேலும் அகிலாண்ட ஈஸ்வரிக்கு வேப்பிலை அடிக்க ஆரம்பித்தாள்.

"கண்ணைக் கவனிச்சீங்களா அண்ணி."

"யார் கண்ணை அபிராமி?"

"மாமியாருக்கு கவனிப்பான்னு கேலி பேசியதும் அந்தப் பிள்ளை முகத்தில் வெட்கம் வந்ததைப் பார்க்கணும். பத்துப் பேரை ஒத்த கையில் அடிச்சுப் போடற சண்டியர்ன்னு பெயர் வாங்கின ஆம்பிளை உங்க முன்னாலே கைகட்டி நின்ன மரியாதை என்ன அடக்கம் என்ன... அடடா பார்க்க இரண்டு கண் பத்தாது அண்ணி."

"ஆமாம் அபிராமி. அவன் எப்பவும் எங்கிட்ட பயந்து தான் நடப்பா" பேசாம உங்க தங்கச்சி மக சுவாதியைப் பொண்ணுக் கொடுத்து வீட்டோட மருமகனாக்கிங்க அண்ணி. என்ன நான் சொல்றது."

"எனக்கும் அதே யோசனைதான். ஆனா இளமதி போல சுவாதி சொல் பேச்சு கேட்கிறவ இல்லை. அவ சம்மதிப்பாளா?"

"நல்லாயிருக்கு அண்ணி நியாயம். உங்க வீட்டுக்காரர் சொத்தில் சாப்பிட்டு படிச்சு ஆளாகலாம். அவங்க தங்கச்சி மகன் மட்டும் வேணாமா? உங்களுக்கு ஒண்ணும் தெரியலை அண்ணி. வெறும் காது கம்மலுக்கு கொலை

செய்கிற காலம் இது. இத்தனை சொத்தை ராணி மாதிரி கட்டிக் காக்கறீங்க உங்களுக்குன்னு ஒரு நம்பிக்கையான ஆளை கூட வைச்சிருக்கணும். அது உங்க உறவு முறையாயிருந்தாத்தான் உங்களுக்கு நல்லது. இல்லை தூங்கும்போது கல்லைத் தூக்கிப் போடக்கூட யாரும் யோசிக்க மாட்டா. பார்த்துக்குங்க. சொல்லிட்டேன்."

"என்ன அபிராமி! எதையெதையோ சொல்றே?"

"பின்னே ஊரு நடப்புத் தெரியாம அப்பாவியா, இருக்கிங்களே அண்ணி! காதலிச்ச கல்யாணம் பண்ணிக்கிட்ட ரெங்கநாயகி ஏன் புருஷன் வீட்டுல வாழலை தெரியுமா? உங்க சொத்துக்காகத்தான். அங்கே என்ன கொட்டிக் கிடக்கண்ணி? ஓட்டக் குடிசையும் ஒண்ணு ரெண்டு தென்னை மரம் பார்த்தா பிறந்த வீட்டுக்கு உங்க தயவுல வந்திட்டா உங்க சொத்துக்கு தன் பிள்ளைகளை வாரிசாக்கணும்னு பிளான் போட்டா. செஞ்சு காட்டிட்டா."

"சரியாச் சொன்னே அபிராமி!"

"இன்னொன்றையும் யோசிங்க அண்ணி. இளமதியை ஏழைப்பட்ட இடத்துலதான் கொடுத்தீங்க. அவ புருஷன் பேசாம வீட்டோட மாப்பிள்ளையா இருக்க மாட்டேன்னுட்டான். இப்ப அவங்க தனி ராஜ்யமாய் ஆடறாங்க. ஒரு நல்லது கெட்டதை உங்களைக் கேட்டு உங்களை முன்னாடி வச்சு செய்யறாங்கதானா. இடம் வாங்கிப் போடறதும், வயல் வாங்கிப் போடறதும் எதுனாச்சும் மட்டு மரியாதை காட்டறாங்களா?"

"ஆமாமா அவ மாமனார் ஒரு வெம்போதி இப்ப காணாதத கண்டுட்டு பெரிய சம்சாரின்னு பீத்திக்கிட்டு அலையறாணாம் இந்த அகிலாண்ட ஈஸ்வரி வாழ்ந்த வாழ்வென்ன? என் கால் தூசி பெறுமா இது? என்ன அபிராமி சொல்ற?"



"அதுகளை விடுங்க அண்ணி அரை காசு பார்த்துட்ட பரதேசிப் பரம்பரை. அற்பனுக்கு வாழ்வு வந்தா அர்த்த ராத்திரியிலதான குடை பிடிப்பான். எனக்கு உங்களைப் பற்றித்தான் கவலை. கடைசி வரைக்கும் உங்க கூட இருந்து வெந்நீ தண்ணீ வச்சுக் கொடுத்து, பிடிச்சதை சமைச்சுப் போட்டு கால் கை அமுக்கி விட்டு கவனிச்சுக்க யாருண்ணி இருக்காங்க. உங்க நாத்தனார் மகனுக்கு கட்டி வச்சிட்டா பேசாம எங்க அத்தைக்கு தொண்டூழியம் பண்ணிக்கிட்டு இங்கயே கிடடின்னு சொல்லி அரட்டி வைப்பான். எங்கேயும் இழுத்துக் கிட்டும் போகமாட்டான். அவளைப் படிப்பை முடிக்க விட்டீங்கன்னா ஒரு வேலையைப் பார்த்துக்கிட்டு வீட்டை விட்டு ஓடுவா. அதனால படிப்பை நிறுத்திட்டு நாளைக்கே நிச்சயத்தை முடிச்சு அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை பண்ணி வீட்டோட போடுங்கண்ணி. நல்லா நாதியில்லாத கழுதைகளுக்கு சோறு போட்டு, துணிமணி வாங்கிக் கொடுத்து கல்யாணமும் பண்ணி ஊரான் வீட்டுக்கு அனுப்பறிங்க. அதுங்களுக்கு நன்றி இருக்குமின்னா நினைக்கறீங்க."

"உண்மைதான். அந்த சுவாதியின் இறுகிய முகமும், சில சமயம் அகிலாண்ட ஈஸ்வரியை எதிர்த்துப் பார்க்கும் நேர் கொண்ட பார்வையும். அதுவும் அவளது அப்பனை ஏதேனும் சொல்லிவிட்டால் முகம் சிவந்து நிற்கும் சினமான தோற்றமும் அவளது நன்றி கெட்ட தனத்தைத் தான் காட்டுகிறது.

போதும் இந்த அகிலாண்ட ஈஸ்வரி போட்ட சோற்றைத் தின்னுவிட்டு கொழுப்பெடுத்து நாராயணன் மகள் அலைய வேண்டாம். படிப்பை நிறுத்திவிட்டு கழுத்தை நீட்டுடி கழுதையென்று சொல்ல வேண்டியதுதான் கழுதை

சம்மதிச்சாலும் சம்மதிக்காவிட்டாலும் நாதாவென்று இருந்து வந்த தாலியைக் கட்டுடான்னா வேலுத் தம்பி கட்டிட்டுப் போகப் போகிறான் அவன் இதற்கெல்லாம் பயப்படற ஆளா?"

அகிலாண்டேஸ்வரி முடிவெடுத்து விட்டாள். அதை தெரியப்படுத்திக் கொண்ட அபிராமி நிம்மதியா தூங்கப் போனாள். முன்னம் இட்ட தீ முப்புரத்தை எரிக்க இப்போது அபிராமி இட்ட தீ ஜோதியை எரிக்கக் கிளம்பியது.

## 6

கங்கை நதி ஓரத்திலே
மணம் மணக்கும் பாரத்திலே
தோகை விரி சாரத்திலே
தொடுவானம் தூரத்திலே

திருவிழா முதல்நாளே முடிந்திருந்தது. ஊர் திருவிழா முடிந்த அலுப்பும் சக்கையும் சோர மெத்தனமாய் காட்சி அளித்தது. கோவிலின் வாசலில் காய்ந்த வாழை மாத் தண்டுகள். பொங்கல் வைத்ததன் அடையாளமாய் மூ வடிவில் வரிசையாய் காணப்பட்ட கற்கள். அவற்றில் கிடந்த சாம்பல்கள் திருவிழா நாளின் மிச்சமாகக் கிடக்க வீடுதோறும் வருகை தந்திருந்த உறவினர்கள் அவரவர் ஊர் திரும்பலாயினர். அகிலாண்டேஸ்வரியின் வீட்டில் முகாமிட்டிருந்த பரமசிவத்தின் குடும்பம் கிளம்பும் சுவடு தெரியவில்லை.

மறுநாள் வேலைக்குத் திரும்ப வேண்டிய இளமதி கிளம்பத் தயாரானாள்.



ரெங்கநாயகி அவளை அழைத்தாள்.

"என்ன இளமதி எங்கே கிளம்பிட்டே?"

"இதென்னம்மா கேள்வி தியாக துருவத்துக்குக் கிளம்பறேன். அஜய்யும், பல்லவியும் நாளைக்கு ஸ்கூலுக்குப் போகணும்."

"சரி ராத்திரி கடைசி பஸ்சுக்குப் போகலாம். இப்ப வேணாம் இருந்து போ" "இது என்ன புது கரிசனம்" என்று ஆச்சரியப்பட்ட இளமதி. "இல்லேம்மா இப்போ போனாத் தான் வீட்டைச் சுத்தம் பண்ணி எதாவது சமைத்து வைக்கலாம். அஜய் அப்பா இரண்டு நாளும் ஹோட்டலில் சாப்பிட்டுகிட்டு இருப்பார்." "நம்ம ஊர் பாண்டிக் கிட்ட உன் வீட்டுக்காரரை வரச் சொல்லி விட்டாச்சு. இரவு சாப்பாட்டுக்கு உன் வீட்டுக்காரர் இங்கே வந்திடுவார். ஊருக்கே விருந்து வைக்கப் போறோம். நீயும் உன் புருஷன் பிள்ளைகளோட இருந்து சாப்பிட்டு விட்டு போ."

"ஊருக்கே விருந்தா? என்னம்மா விசேஷம்?"

"எல்லாம் நல்ல விசேஷம்தான் உன் தங்கைக்கு இன்னைக்கு பரிசம் போட வாராங்க."

"ஜோதிக்கா? மாப்பிள்ளை யாரும்மா?"

"அக்காளோட நாத்தனார் மகன் வேலுத் தம்பிதான்."

"என்னது" மிரண்டு போனாள் இளமதி. கண்கள் அக்னி பிழம்பாக உணர்ச்சி கொந்தளிப்பில் வெடவெடுத்த வளைக் கவனியாதவளைப் போல தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தாள் ரெங்கநாயகி.

"இன்னைக்கு பரிசம் போட்டுட்டு வார முகூர்த்தத்திலேயே கல்யாணம் இரண்டு வாரம்தான் இருக்கு. எத்தனை சோலி பார்க்கணும். அக்கா எதைப்பத்தியும்

கவலைப்பட வைக்காம இப்பவே சோலிகளைப் பார்க்க ஆரம்பிச்சாச்சு."

பேச்சை முடித்தவளாய் உள்ளே செல்லத் திரும்பிய ரெங்கநாயகியை இளமதி தடுத்து நிறுத்தினாள்.

"இப்போ சுவாதி கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம்? அவள் படிப்பை முடிக்கட்டுமே. முடிச்சவுடன் வேலை காத்திருக்கும்மா."

"அதைத்தான் அக்கா வேண்டாம்கிறா."

"எதை?"

"சுவாதிக்கு வேலை கிடைச்சுட்டா தன் போக்கில மாப்பிள்ளை தேடிட்டுப் போயிடுவாங்கறா. எனக்கும் அது தான் சரின்னு படுது."

"படிச்சவனா நல்ல வேலை பார்க்குறவனா இருந்தா சுவாதி போக்கில் கல்யாணம் பண்ணிக்கிறதில் தப்பென்னம்மா இருக்கு? உனக்கும் உன் அக்காவுக்கும் அவ சுமை குறையுமில்லை."

"அது சரி உன்னை மாதிரியே சுவாதியும் புருஷன் பின்னால போயிட்டா அக்காவுக்கு யார் ஆதரவு? கடைசி வரைக்கும் அவளை யார் பார்த்துக்குவா? படிச்சு வேலை பார்க்கிறவன் வீட்டோட மாப்பிள்ளையா இருக்க ஒத்துக்குவானா? ஆனால் வேலுத்தம்பி சரிங்குறான். கடைசி வரைக்கும் அக்காவை அவ மனம் கோணாம சுவாதி பார்த்துக்கிட்டு கூடவே இருக்கட்டும் என்கிறான்."

அதிர்ந்து போனாள் இளமதி. இப்படி வேறு இருக்கிறதா? இந்தப் படிப்பையும் அதன் மூலம் கிடைக்கும் வேலையையும் அந்த வீட்டில் இருந்து பெறும் விடு



வெட்டி அவள் வெறுக்கும் வாழ்க்கையை அவளுக்கு நிரந்தரமாக்க முயற்சி நடக்கிறது என்பதை அறிந்தும் அறியாதவளைப் போல் அந்தத் தாய் நிற்கிறாளே அவளிடம் எப்படி வாதாடுவாள்? கூடப் பிறந்தவளின் சொல்படி பெற்ற பெண்களின் வாழ்க்கையை பந்தாடுபவளின் கண்களை எப்படி திறப்பாள்? பெற்ற பெண்ணை பலிபோட பெற்ற தாயே எமனை சாட்சியாக்க நிற்கிறாளே. அன்று நடந்தது இன்னும் இளமதியின் ஆவி துடிக்கின்றதே. இன்னும் அதே கதை தொடர்வதா? அதை இளமதி பார்த்து நிற்பதா? "அம்மா?" இளமதி ஆதங்கத்துடன் அழைத்தாள்.

"என்னடி" என்று ஒட்டு உறவு இல்லாமல் கேட்டாள் தாய்.

"அந்த வேலுத்தம்பி அயோக்கியன்மா. குடிகாரன், நடத்தை சரியில்லாதவன், திருடன், ஜெயிலுக்கு போய் விட்டு வந்தவன். அவனுக்குப் போய் நம்ம சுவாதியை எப்படிம்மா?"

"அவன் என்ன பிறக்கும் போதே அயோக்கியனாய் இருந்தானா? இடையில் வந்த சகவாசம் எல்லாம் சரியாயிடும்னு அக்கா சொல்றா."

"அக்கா... அக்கா எதற்கெடுத்தாலும் அக்கா தானா? சுவாதி என்ன சொல்றான்னு கேட்டிங்களா?"

"இல்லை" என்றாள் ரெங்கநாயகி. அத்தோடு நிறுத்தாமல் "எதுக்குக் கேட்கணும்?" என்று துணைக் கேள்வி வேறு கேட்டாள்.

"உன் கல்யாணத்தை உன்னை கேட்டுக்கிட்டா நடத்தினோம்?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தாள்.

''அம்மா நான் வேற சுவாதி வேற'' இளமதி உடன் பிறந்தவளின் மனம் புரிந்த தோழமையில் புலம்ப, ''அப்படி என்னடி அவ உன்னைவிட சேத்தி? இரண்டு பேரும் ஒரே வயித்துல தானே பொறந்தீங்க?'' என்று சொன்னாள் ரெங்கநாயகி.

''சரி அப்போ எனக்குப் பார்த்த மாதிரியே நல்ல மனுச ராப் பாருங்க, பணம் வேணாம், படிப்பு வேணாம், குண மிருந்தா போதும்மா'' என்று இளமதி வாதாட, ''பார்க்கிற பார்வையிலே ஒருவன் நல்லவனா, கெட்டவனான்னு எப்படிச் சொல்ல முடியும். உங்க அப்பாவைக் கூட நல்ல வன்னு நெனச்சுத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். பின்னாடி குடிகாரன் ஆகலியா'' என்று நியாயம் பேசினாள் ரெங்கநாயகி.

''அப்பாவை திருத்தியிருந்தால் அவர் திருந்தியிருப்பார் நீங்கள் தான் அவரையே வேண்டாம்னுட்டீங்களே?'' இளமதி ரெங்கநாயகியைத் தொடக்கூடாத அந்தரங்க உணர்வை தொட்டுக் கேள்வி கேட்டு விட்டாள். அதை தாங்க முடியாமல் ஆவேசப்பட்ட ரெங்கநாயகி, ''இப்ப உன் வாயில இருந்து வந்திருச்சல்ல. ஒருத்தனை வெறுக் காம திருந்தினா திருந்திருவான்னு. ஒன் தங்கச்சியை அந்த தம்பி மேல அன்ன....பு காட்டி திருத்தச் சொல்லுடி'' என்று பொரிந்தாள். தாயாரையே வெறித்துப் பார்த்த இளமதி நிதானமாக'' அப்படி ஒரு ரிஸ்க் சுவாதி எடுக் கணுமுன்னு என்னம்மா அவசியம்?'' என்று கேட்டாள். போராடிய மகளுக்கு சரிக்குச் சரி பதிலடி கொடுத்து வாயடைத்து விட்ட ரெங்கநாயகிக்கு துளைக்கும் விழி களோடு இளமதி கேட்ட இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. என்னவென்று சொல்வாள்? இளம் வய



தில் காதல் மட்டுமே பெரிதாகத் தெரிந்தது. வசதி வேண்டாம். குடிசையில் இருந்து கூழ் குடித்தாலும் உன்னோடு வாழ்ந்தால் போதும் என்று வசனம் பேசத் தெரிந்தது. ஆனால் ஏழ்மையை சந்திக்க நேர்கையில் அதைவிடக் கொடியது எதுவுமில்லை என்று மருண்டு விட்டாள். திருமணம் என்பது ஒருவழிப் பாதை என்று நினைக்காமல் பிறந்த வீடு திரும்பி விட்டாள். அவளை ஏற்றுக் கொண்டு புகுந்த வீட்டிற்கு தூரத்தாத பிறந்த வீட்டிற்கு முக்கியமாக அகிலாண்டேஸ்வரிக்கு அடிமை யாக அவள் மாறி விட்டாள். அவளைப் பொருத்தவரை அகிலாண்டத்தின் சொல் மட்டுமே வேதம். அவளைப் போலவே அவளின் பெண்களும் அகிலாண்டத்தின் செருப்பாக தேய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

பதில் சொல்லாமல் ரெங்கநாயகி உள்ளே சென்றுவிட வீடு அந்தத் தொடும் மாலைப் பொழுதின் சுப நிகழ்ச் சிக்கான வேலைகளில் இறங்க ஆரம்பித்தது. விவரம் தெரியாத சுவாதியின் வினாவிற்கு விடை யாருமே சொல்லவில்லை. இளமதிக்கு கூற தைரியமும் இல்லை. மாலை போய் இரவு வந்தது. ஊர் கூடி விருந்துண்ண விருந்து பரிமாறப்பட்டது. மொட்டை மாடியில் புது ஜமுக்காளங் கள் விரிக்கப்பட்டன. வரிசையாய் தட்டுக்கள் ஏந்தி வந்த வேலுத் தம்பியின் குடும்பத்தார் அவைகளை நடுவில் வைக்க சுற்றிலும் எல்லோரும் அமர்ந்தனர். நிச்சய பத் திரிகை வாசிக்கப்பட தட்டிலிருந்த பட்டுப் புடவையை எடுத்து சுவாதிக்கு கட்டி வரச் சென்றார்கள், ஊர் பெண் கள். நிச்சய புடவையை கட்டிவிட்டு இழுத்து வரப்பட்ட சுவாதியின் முகத்தில் மணக்களை இல்லை. பிணக்களை

தவறு என்று அடி வாங்கியவள் இளமதி. கண்கள் கட்டப்பட்ட குதிரை போலே படிப்பில் மட்டும் கவனமாக ஓடியவள் பள்ளியிறுதி தேர்வில் மாவட்டத்திலேயே முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றாள். மருத்துவப் படிப்பு அவளைத் தேடி வர,

"நடுத்தெரு நாராயணன் மகளுக்கு டாக்டர் படிப்பு கேட்குதா" என்று அகிலாண்டம் டாக்டர் கனவில் மண்ணை அள்ளிப் போட்டாள். அக்கம், பக்கத்தார் ஜாடை பேசப் போனால் போகிறதென்று ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர்த்து விட்டாள். கலைந்த கனவை நினைத்து ஏங்காமல் கிடைத்த வாய்ப்பை வரமாக ஏற்றுக் கொண்டு படிப்பைத் தொடர்ந்தாள் இளமதி.

ஆசிரிய பயிற்சி பள்ளியில் விடுதியில் தங்கிப் படிக்க நேர்ந்தது. அது மிகப் பெரிய விடுதலையாக இளமதிக்கு அமைந்தது. பிறந்ததிலிருந்து சிரித்து அறியாதவள் தன் பத்தொன்பதாவது வயதுப் பிராயத்தில் முதன் முதலாய் லேசாய் புன்னகைக்க கற்றுக் கொண்டாள். வார இறுதி நாட்களில் விடுதியில் படிக்கும் மற்ற மாணவிகளைப் பார்க்க அவர்களது உறவினர் வந்து போகும்போது இளமதியின் மனதில் ஏக்கம் சூழும். ஒரு வார இறுதி நாளில் அந்த ஏக்கம் அகல பல வருடங்கள் கழித்து மகளைப் பார்க்க வந்தார் நாராயணன். சுவாதி போல் தந்தை முகம் பார்க்காமல் வளர்ந்தவளல்ல இளமதி. முதல் ஆறு வருடங்கள் பார்த்துப் பழகிய அப்பா, ஊடே பள்ளியில் மூன்றாம் மனிதரைப் போல பார்க்க நேரும் அப்பா என்று தந்தையின் அன்பை அறிந்தவள். தன்னையும் நினைத்துப் பார்க்க ஒரு ஜீவனிருக்கிற மகிழ்வு, சிறு வயதில் பிரிந்த தந்தையை மீண்டும் பார்க்க முடிந்த நெகிழ்வு இரண்டும் சேர இளமதி பேச்சிழந்து நின்றாள்.



எந்தவிதத் தடையுமின்றி மகளைப் பார்க்க முடிந்ததால் மீண்டும் உயிர் பெற்ற நாராயணன் வாரம் தோறும் மகளைப் பார்க்க வந்தார். அப்படி வரும் ஒரு வார இறுதியில் தந்தையின் வரவு செய்தி கேட்டு விரைந்து வந்த இளமதி தந்தையின் அருகே நின்றிருந்த அழகிய இளைஞனைக் கண்டதும் தயங்கி நின்றாள். அவளது தயக்கத்தைக் கண்ட நாராயணன்,

"என்னம்மா யாரோன்னு நினைத்து பயப்படறியா? நம்ம சொந்தம்தான்ம்மா" என்றார்.

"அதுவும் மிக நெருங்கிய சொந்தம்" என்றான் கூட வந்திருந்த வாலிபன்.

அவனது குறும்பு மின்னும் கண்களும், வார்த்தைகளும் எந்தச் செய்தியையோ அறிவிக்க முயல்வது போல் இருக்க இனம் புரியாத உணர்வில் அடிவயிற்றில் பட்டாம்பூச்சி பறப்பதைப் போல் உணர்ந்தாள் இளமதி.

"இது இளஞ்செழியன்ம்மா உன் அத்தை பையன்" என்று நாராயணன் அறிமுகம் செய்து வைக்க,

"ஆமாம். நான்தான் உனக்கு இளமதின்னு பேர் வைக்கக் காரணமாயிருந்த இளஞ்செழியன். உன் முறைப் பையன்" என்று இளஞ்செழியன் பின்பாட்டு பாடினான்.

அவனது பார்வையின் வேகம் தாங்க முடியாதவளாய் இளமதி முகம் தாழ்த்திக் கொள்ள,

"என்ன மாமா உங்க பொண்ணு முறைத்துக்கிட்டு முகம் திருப்பிக்கிட்டுப் போகுது. முறைப் பொண்ணுன்னா முறைக்கணுமா?" என்று மேலும் அவன் வம்புக்கு இழுத்தான். வாய்விட்டுச் சிரித்து அவனது கேலியை ரசித்த நாராயணன்.

"உன் அத்தைக்கு ஒரு பொண்ணும், பிள்ளையும்மா, இளஞ்செழியனுக்கு நேர் மூத்ததுதான் கனிமொழி. அதுக்கு கல்யாணமாகி பன்னிரெண்டு வயதில் ஒரு பெண்ணும் பத்து வயதில் ஒரு பையனுக்கு இருக்கு" என்றார்.

"எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை, அதையும் சொல்லிருக்க மாமா" என்று இடை செருகினான் அவன்.

"அப்படியாப்பா" என்று சுரத்தில்லாமல் கூறினாள் இளமதி.

"என்ன மாமா உங்க பொண்ணு கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் 'அப்படியா'ன்னு சொல்லுது. ஒருவேளை எனக்கு கல்யாணமாகாமல் இருப்பதால் கவலையோ? நான் உடனே அம்மாவுக்கு லெட்டர் எழுதப் போகிறேன்."

"என்னன்னுப்பா?"

"நான் கடைசியாய் பெண் பார்த்து விட்டு வந்த இடத்திற்கு சம்மதம் என்று சொல்லிடுங்கன்னு" இளஞ்செழியனின் பார்வை இளமதியின் மீதே இருந்தது. அவன் எதிர்பார்த்தது போலவே அவள் பதட்டமாய் நிமிர,

"என்ன மாமா உங்க பொண்ணுக்கு வியர்த்திருக்க. எனக்கு கல்யாணம்ன்னா பிடிக்கலையோ?" என்றான்.

"அப்பா அப்படியெல்லாம் இல்லைன்னு சொல்லுங்க" என்று வெடுக்கென்று கூறினாள் இளமதி.

"எப்படியெல்லாம் இல்லையாம்?" அவன் கிண்டலாய் மேலும் பேச இளமதியின் கண்களில் நீர் நிரம்பி விட்டது. அதைக் கண்டு பதறிப் போன நாராயணன்,

"என்னம்மா இதுக்குப் போய் கண் கலங்கி நிற்கிறே. கேலி பேசறது யாரு உன் அத்தை மகன்தானே. விளையாட்டுப் பிள்ளைபோல் பேசுவான். ஆனால் இன்ஜினி



யரிங் படிச்சு மேலே எம்.பி.ஏ. பட்டமும் வாங்கியவன். அவங்க அப்பாவோட இரும்பு கம்பெனியை நிர்வாகம் பண்ணுகிறவன், மாமா பொண்ணுன்னு கொஞ்சம் விளையாட்டாய் பேசுகிறான். கண்ணைத் துடைச்சுக்கம்மா" என்றார் பாசமாக.

"அடேங்கப்பா. அவர் என்ன பெரிய படிப்பு வேண்டும்னாலும் படிச்சிருக்கட்டும். எவ்வளவு பெரிய ஆளாய் வேண்டும்னாலும் இருக்கட்டும். என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறார்."

"உன்னை வம்புக்கு இழுக்காமல் யாரை வம்புக்கு இழுப்போனாம். நீ தானே என் மாமன் மகள் ரத்தினம். உன் தோழிகளா என் மாமன் மகள்கள்."

"அப்பா வேண்டாம் நான் அவரிடம் பேசவில்லை."

"ஏன் என்னிடம் பேசவே மாட்டாயா? நான் உனக்கு வேண்டவே வேண்டாமா?"

இளமதி இளஞ்செழியனை கோபமாய் பார்க்க முயல அவன் பார்வை கூர்மையாய் அவள் இதயத்தைத் துளைத்தது. அவனது பார்வை ஏதோ செய்தி சொல்ல அதையறிய முடியாத அப்பாவியாய் இளமதி தவித்துப் போய் தந்தையைப் பார்த்தாள். அன்புடன் அவள் தலையை தடவிக் கொடுத்தபடி,

"கிண்டல் போதும் செழியா. என் பொண்ணுக்கு இதெல்லாம் பழக்கமில்லை" என்றார் கண்டிப்புடன்.

"எனக்கும் பழக்கமில்லை மாமா."

"எது பழக்கமில்லை."

"உங்கள் பெண்ணிடம் பழக்கமில்லை. இப்போது தானே முதன் முதலாய் பார்க்கிறேன். இனித்தான் பழகிப் பார்க்கணும்."

"சரி சரி கிண்டல் போதும். பார்த்த முதல் நாளிலேயே அவளை அழ வைத்து விட்டாயே."

"இப்போது அழ வைத்தால் காலம் பூராவும் சிரிக்க வைக்கப் போகிறேன்."

அவன் வார்த்தைகள் மீண்டும் புதிர்போட புரிந்தும் புரியாமல் அவர்களைப் பார்த்தபடி விடை கொடுத்தாள் இளமதி.

அடுத்த வாரம் அவன் மட்டும் இளமதியைப் பார்க்க வந்தான். இளமதியின் கண்கள் தந்தையைத் தேட

"மாமா வரவில்லை மதி" என்றான். அவனது 'மதி' என்ற அழைப்பில் லேசாய் மதி மயங்கியவள்,

"என் அப்பா வரவில்லை?" என்றாள்.

"ஒரு முக்கியமான வேலை."

"போனவாரம் என்னிடம் சொல்லவில்லையே."

"நான் வேண்டுமானால் என் இளமதியிடம் சொல்லவில்லையேன்னு கேட்டு விட்டு வரவா?"

"வேண்டாம், வேண்டாம்."

"என்ன வேண்டாம். நான் போக வேண்டாமா? இங்கேயே உன்னுடன் இருந்து விடவா?"

"ஐயோ நான் அப்படிச் சொல்லவில்லை."

"எப்படிச் சொல்லவில்லை?"

"அப்பாவை கேட்டுவிட்டு வர வேண்டாம்னுதான் சொன்னேன்."

"அப்ப உன் அப்பாவைக் கேட்காமலே நான் தனியாகவே வந்து உன்னைப் பார்க்கவா? அவ்வளவு ஆசையா என் மீது?"



அவனது சீண்டலில் கோபமடைந்து தலை நிமிர்ந்தவள் அவனது கண்களில் தெரிந்த 'எதையோ' கண்டு தலை குனிந்தாள்.

"சொல்லு இளமதி."

"என்ன சொல்ல?"

"என் மேல் ஆசையா, இல்லையா?"

ஒவ்வொரு வார்த்தையையும் வலிக்குமோ என்பது போல் மென்மையாய் உச்சரித்தான். செவியில் நுழைந்த அந்த வார்த்தைகள் இளமதியின் இதயத்தைத் தொட கலக்கமாய் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவன் கண்களில் வழக்கமான குறும்பு இல்லை. கனிவு இருந்தது. காதல் இருந்தது. உண்மை இருந்தது. மௌனமே பாஷையாய் பேச்சை மறந்து நின்றவளிடம் சிறு தலையசைவுடன் விடைபெற்று சென்றான் அவன். அடுத்து வந்த வார இறுதி நாள்களில் இளஞ்செழியன் தொடர்ந்து வந்தான். முதல் இரு வாரங்கள் மட்டும் கூட வந்த நாராயணன் அடுத்து வந்த நாள்களில் அவனை தனியாகவே அனுப்பி வைத்தார். அவர் போட்ட கணக்குப் பிசகவில்லை. இளமதியின் இதயத்தில் இளஞ்செழியன் மெல்லக் குடியேறினான். வாரத்தின் அந்த ஒரு நாளில் மட்டும் உயிர்த்தெழுந்த இளமதி மற்ற நாள்களில் உயிரைப் பிரியும் வேதனைக்கு ஆளானாள்.

சிறு காற்றுக்கே ஒடிந்து விடும் கொடிபோலே தன்னம்பிக்கையின்றி ஒரு வித பயத்துடன் வளர்ந்தவள் அவள். தந்தையிடம் பாசத்துடனும், தாயிடம் பயத்துடனும் வாழ்ந்தவள் அவள். பெரியன்னையின் கட்டளையை மீறி அறியாதவள். அடிபணிந்தே பழக்கப்படுத்தப்பட்ட அவளுக்கு அத்தையின் மகன் மேல் காதல் வந்திருக்கக்

கூடாது. ஆனால் காதல் அவள் வாழ்வில் குறுக்கிட்டு விட்டது. காலம் வகுத்திருக்கும் கட்டளையை அறியாதவளாய் அவள் காதலித்தே விட்டாள்.

## 8

மானாடும் விழியோடு
மயிலாடும் நடையோடு
நானிருந்தேன் விடியல் வேண்டி
நடந்திருந்தேன் தொடுவானம் நோக்கி...

மன்மதனின் மலர் வளையத்தில் இளஞ்செழியனும் இளமதியும் சிறைப்பட்டிருக்க காலம் யாருக்காகவும் காத்திருக்காமல் சுழன்றது. இளமதியின் பயிற்சி முடியும் நாள் நெருங்கியது. அந்த வார இறுதியில் இளஞ்செழியனுடன் நாராயணனும் வந்திருந்தார். இருவரின் கண்களிலும் ஒரு கலக்கம் தெரிந்தது. ''அப்பா ஏன் என்னவோ போல் இருக்கிறீங்க.''

''அடுத்த வாரம் உன் டிரெயினிங் முடியுதுல்லம்மா அதுக்கப்புறம் நீ ஊர் திரும்பணுமே. அதுக்கு முன்னாலேயே உன் கல்யாணத்தை பற்றி இளஞ்செழியனுக்கு ஒரு முடிவு சொல்ல வேண்டாமா தங்கம்'' நிலைமையை உணர்ந்த இளமதி இளஞ்செழியனைப் பார்த்தாள். அவனது கண்களும் அதே கேள்விகளோடு தன்னை நோக்குவதை உணர்ந்தவளாய் ''நான் என்னப்பா செய்ய?'' என்று சிறு குழந்தையாய் தந்தையிடம் வினவினாள்.



''அடுத்த வாரம் நீ என்கூட நம்ம வீட்டுக்கு வந்திரும்மா.''

''அம்மாவையும், சுவாதியையும் விட்டு விட்டா? எப்படிப்பா?''

''நீ என் கூட நம்ம வீட்டுக்கு வந்து விடும்மா. நான் உன்னை இளஞ்செழியனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன். இந்த வக்கத்த அப்பா எப்படி கல்யாணம் பண்ணி வைப்பான்னு நினைக்காதேம்மா. நான் வக்கத்தவன்தான் நாதியில்லாதவனில்லே. என் அக்கா உன்னை தங்கத்தாலே இழைத்து தன் மகனுக்கு கட்டிக்குவா. இப்பவே உன்னை செழியன் கூட அனுப்பி இருப்பேன். ஆனால் அது முறையில்லை தங்கம். பெத்தவன் உயிரோட இருக்கையில் அத்தை மகனை ஏன் ஒளிஞ்சு மறைஞ்சு கட்டிக்கணும். வந்திரு செல்லம். எல்லாம் நல்லபடி நடக்கும்.''

''மாமா சொல்வதை கேளு மதி. அம்மா, அப்பா, அக்காக்கள் எல்லோரும் அடுத்த வாரம் ஊருக்கு வந்திடுவாங்க. நீ மாமா வீட்டுக்கு வந்திட்டால் நம்ம ஊரிலேயே பெருமாள் கோவிலில் ஜாம், ஜாம்னு கல்யாணம் பண்ணிட்டு எங்ககூட கோவைக்கு கூட்டிக்கிட்டுப் போயிருவோம். தயங்காதே.''

இளஞ்செழியனும் வற்புறுத்த அதுவரை இருந்த பயமும் அவநம்பிக்கையும் பறந்தோட இளமதி சம்மதம் என்று தலையாட்டினாள். எல்லாம் நல்லபடி நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாராயணனும், இளஞ்செழியனும் பிரிந்து போக எதையும் நினைத்தது போல் நடக்க விடாத அகிலாண்டம் வேலை செய்ய ஆரம்பித்தாள்.

[illegible]



"இளமதி" அவளது அழைப்பில் அவன் பதற்றமாய் எழுந்தான்.

"ஐயோ நீங்களா நல்ல வேளையா வீட்டுல யாருமில்லை. சீக்கிரம் போயிடுங்க. அவங்க வந்திட்டா பெரிய ரகளையாயிடும்."

"இப்போ நீ கிளம்பி வந்ததினால வந்திருக்கிற ரகளை விட பெரிய ரகளை வந்துவிடாது. மாமாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கோம்."

"ஐயோ! அப்பாவுக்கு என்ன?"

"வேறென்ன பாசம். முதல்லே பொண்ணாட்ட பாசம். அது அறுந்துகிட்டு போயிடுச்சு. இப்ப பெத்த பாசம் இது போகுமுன்னு எதிர்பார்க்கல போலும். அது தான் நெஞ்சு பொறுக்காம நெஞ்சுவலி வந்திருக்கு."

"நான்தான் என்ன செய்வேன்?"

"என்ன செய்யணுங்கிறத சொல்லி விட்டுத்தானே போனோம். அப்புறம் ஏன் இங்கே வந்தே?"

"நானா வரவில்லை கொண்டு வரப்பட்டேன்."

"அப்ப விருப்பத்த உனக்கு கல்யாணம்கிறது" நெஞ்சம் பதறக் கேட்டவனின் விழிகளை சந்திக்க முடியாமல் தலை கவிழ்ந்து கொண்டவளின் விழிகள் தாரை தாரையாய் கண்ணீரை சொரிந்தன.

"அப்போ செய்தி நிஜம். உனக்கும் சம்மதம் அப்படித் தானே" வெறுப்பில் வெதும்பியவனாய் அவன் கேட்க அவள் நிமிர்ந்து பார்த்தாள். உலகத்தின் சோகத்தையெல்லாம் மொத்தமாய் குத்தகை எடுத்தாற் போல அடிபட்ட பறவையின் பார்வையாய் அவளது பார்வை இருக்க அவன் பேச்சிழந்து போனான்.

''வா. மதி என்னுடன் வந்துவிடு. யார் என்னைத் தடுக்க முடியும்? நான் உன் அத்தை மகன். நீ மேஜர். சட்டமும், சாஸ்திரமும் நமக்கு துணை தான் நிற்கும். என்னைவிட உன் மேல் யாருக்கு உரிமை இருக்க முடியும். உன்னைத் தூக்கிக் கொண்டு போய் தாலி கட்ட எனக்கு உரிமை உண்டு. வந்து விடு'' அவளது கரம் பற்றி அழைத்தான். அவளோ கரங்களை விடுவித்துக் கொண்டாள். மீண்டும் சினங் கொண்டவன், ''ஏன்'' என்றான் உறுமலாய்.

''நான் உங்களுடன் வர முடியாது'' ஈனஸ்வரத்தில் ஆனால் உறுதியான குரலில் கூறினாள் அவள்.

''அதுதான் ஏனென்று கேட்கிறேன். என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா'' ஆறடி உயரத்தில் அழகான முகம் கோபத்தில் சிவக்க அவன் கேட்ட விதம். அவள் நெஞ்சில் பதிந்தது. ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

''என் அம்மாவுக்கு நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் பிடித்தமில்லை.''

''அது தெரிந்தது தானே. அவங்களை கேட்டுக்கிட்டா என்னை விரும்பினாய்?''

''அப்போ நிலைமை வேறு அவர்களுக்கு தெரிவதற் குள் உங்களைக் கல்யாணம் பண்ணிருவேன்னு நினைச் சேன். ஆனா நிலைமை இப்போ தலை கீழாயிருச்சு. அவங்க சொல்ற மாப்பிள்ளையை நான் கட்டலைன்னா. தானும் விஷம் குடிச்சிட்டு, சுவாதிக்கும் விஷம் வைத்து கொன்னுடுவேன்னு சொல்லறாங்க. அவங்க பிடிவாத மானவங்க, சொன்னதை செஞ்சிடுவாங்க.''

''மதி இதென்ன முட்டாள் தனம். அவங்க உன்னை மிரட்டுகிறாங்கம்மா.''



''ஆனால் என்னைப் பெத்த தாய் செத்துடுவேன்னு சொல்லும்போது, அதை மீறி உண்மை சொல்றாங்களா பொய் சொல்றாங்களான்னு டெஸ்ட் பண்ணிப் பார்க்க என்னால் முடியாது.''

''மதி... அப்போ என்னை மறந்துட முடிவு செஞ்சிட்டே...''

''என்னை மன்னிச்சிடுங்க. இன்னாருக்கு இன்னது தான்கிறது விதி. நான் அடிமை வாழ்வு வாழப் பிறந்தவள். நான் மகாராணியாக முடியுமா? என் ஆசைக்கு அளவிருந்திருக்க வேண்டும். பூமியிலே நடப்பதே பெரும் பாடாக இருக்க தொடுவானம் தொட ஆசைப்படலாமா? நீங்கள் தொடுவானம். என்னால் நினைத்துப் பார்க்க முடியாத தூரத்திலிருப்பவர். நான் கிணற்றுத் தவளை. கிணற்றைத் தாண்டவும் மாட்டேன். என் விதியை மாற்ற உங்களாலும் முடியாது. போயிடுங்க. அப்பாவிடம் சொல் லுங்க. அவருக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லைன்னு சொல்லுங்க. அம்மா அவரையும் நடை பிணமாக்கி னாங்க. இப்போ என்னையும்... போயிருங்க,''

''மதி கடைசியாய் சொல்றேன். மதி வந்திடு மதி.'' அவள் முகம் நோக்கி குனிந்து கெஞ்சினான். அவன். அவளோ உடைந்து சிதறினாள்.

''வர முடியாதுங்க வர முடியாது. பிறந்த போதே ரெக்கை வெட்டின கிளியாகத்தான் என்னை வளர்த்தாங்க. உங்களை பார்த்தது தெய்வம் கொடுத்த வரம். கொஞ்ச நாள்தான் ஆனாலும் சந்தோஷமாக உயிர் வாழ்ந்தேன். அவ்வளவுதான் என் சந்தோசத்திற்கான கோட்டா முடிஞ்சு விட்டது. இனி கடைசி வரை நான் பிணம் தான். சிரிக்கச் சொன்னால் சிரித்துப் பார்க்கச் சொன்னால் பார்க்க

வேண்டிய நடை பிணம். இவர்கள் கொடுக்கும் சாவிக்கு ஆடும் பொம்மை. நீங்க போயிடுங்க."

முகத்தில் அறைந்து கொண்டு கதறியழுதவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டு சில நிமிடங்கள் அங்கேயே நின்றான். பின்னர் திரும்பிப் பார்க்காமல் ஊருக்கு திரும்பி விட்டான். இளமதியின் திருமணச் செய்தியும் அதைத் தொடர்ந்த நாராயணனின் மரணச் செய்தியும் செவியைத் தொட்ட போது துயரத்துடன் தாங்கிக் கொண்டான். மனதில் குடி கொண்டிருந்தவளை மறக்க பேய்த்தனமாய் வேலையில் மூழ்க ஆரம்பித்தான்.

பெற்றவள் அமைத்துக் கொடுத்த வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இளமதி கர்மயோகி போல் ஆனால் எந்த நொடியிலும் இளஞ்செழியனின் நினைவு வராதபடி பார்த்துக் கொண்டாள். வேலை, குடும்பம், குழந்தைகள் என்று கடமைகள் அவளை சூழ்ந்து கொள்ள அந்த அரனின் மத்தியில் சாத்வீகமாய் அவள் வாழ்ந்தாள்.

ஆனால் இரண்டு குழந்தைக்கு அன்னையானவளிடம் "எனக்கும் நீ தான் அன்னை" என மடியில் விழுந்து மயங்கிப் போன சுவாதியின் நிலைமை நெஞ்சை அறுத்து கையில் எழுந்து நின்றது. இளஞ்செழியனின் நினைவு.

# 9

**வானத்தினை வில்லாக வளைத்து**
**மேகத்திலே மாலை தொடுத்து**
**நிலவினையே துணைக்கு அழைத்து**
**தொடுவானை தொட்டு வருவேன்**



கடைசி பைலைப் பார்த்து கையெழுத்திட்ட இளஞ்செழியன் மணியைப் பார்த்தான். மாலை ஆறு என்றது. மேஜை மேலிருந்த இன்டர்காமை அழுத்த மறுமுனையில் அவனது செயலாளர் "யெஸ் சார்?" என்றாள்.

"ஒரு காபி" என்றவன் தளர்வாய் சுழல் நாற்காலியில் சரிந்து கொண்டான். அறைக் கதவு தட்டப்பட "யெஸ் கமின்" என்றான். உள்ளே வந்த அவனின் செயலாளர் ஆவி பறக்கும் காபியை மேஜை மேல் வைத்து விட்டுச் சென்றான். காபியை அருந்தியபடி மேஜை மேலிருந்த கவர்களை ஆராய்ந்தான். அன்று காலையில் அவனுக்கு வந்த விரைவு தபால்கள் இரண்டு பிரிக்கப்படாமலிருந்தன. முதல் கவர் டெல்லியிலிருந்து அவனது தமக்கை கனிமொழியிடமிருந்து வந்திருந்தது. படித்து விட்டு கோட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டவன் இரண்டாவது கவரை எடுத்து அனுப்பியவர் யாரென்று பார்த்தான்.

'திருமதி இளமதி கோவிந்தன், தியாக துருவம்' என்றிருந்தது. அவசரமாய் நிமிர்ந்து அமர்ந்தவனின் நெஞ்சம் படபடத்தது. கவரைப் பிரித்தான்.

*அன்புள்ள இளஞ்செழியன் அவர்களுக்கு,*

*வணக்கம். தங்களை உடனடியாக சந்திக்க வேண்டிய அவசரத்தில் இருக்கிறேன். தங்கள் உதவி இப்போது எனக்குத் தேவை. இந்தக் கடிதத்தை தந்தி போல் பாவித்து கிளம்பி வந்தால் நலமாக இருக்கும்.*

*இப்படிக்கு*
*இளமதி கோவிந்தன்.*

முத்து முத்தான கையெழுத்தில் இரண்டே வரிகள் எழுதி அவனை அழைத்திருந்தாள்.

'இவள் யார் என்னைக் கூப்பிட? நான் என்ன கிள்ளுக் கீரையா? அவள் கூப்பிட்ட உடனே விடுவித்துக் கொண்டு ஓட வேண்டுமாக்கும். கையெழுத்தைப் பார். இளமதி கோவிந்தனாம். இளமதி கோவிந்தனுக்கு இளஞ்செழியனிடம் என்ன உதவி வேண்டிக் கிடக்கு' கோபமாய் வாய்விட்டு முணுமுணுத்தவன் மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்தான். அந்தக் கடித வரிகள் காட்டிய அவசரம் அவனது யோசனையைத் தூண்டியது. ஆனால் 'இளமதி கோவிந்தன்' என்ற கையெழுத்து கொதிக்க வைத்தது. இந்தக் கடிதத்தையும் மடித்துப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டவன் எழுந்து வெளியே வந்தான்.

'அவன் எப்போது புறப்படுவான்' என்று காத்துக் கொண்டிருந்த அவனுடைய செயலாளர் மேஜையை சரி பண்ணுவது போல் பாவனை காட்ட அதைக் கவனியா தவன் போல் கடந்து வந்து காரை எடுத்தான்.

வீட்டிற்குள் நுழைந்தவனை எதிர் கொண்ட அன்னை கமலத்திடம்.

"போனில் பேசறதும் ஈமெயில் அனுப்புறதும் கனி மொழி அக்காவிற்கு போதலை. போல லெட்டர் போட் டிருக்கு." என்றவாறு கடிதத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு சோபாவில் அமர்ந்து ஷூவை அவிழ்த்துக் கொண்டிருந் தான். எதிரே அமர்ந்து கடிதத்தைப் படித்த கமலம்,

"உடனே கிளம்பு செழியா" என்றாள்.

"எங்கேம்மா டில்லிக்கா?"

"இல்லைப்பா. தியாக துருவத்துக்கு. இளமதியைப் பார்க்க."



"இளமதியையா?" கேள்வி கேட்டபடி தாயை நிமிர்ந்து பார்த்தவனுக்கு தூக்கி வாரிப்போட்டது. கமலம் கையில் வைத்திருந்தது இளமதி எழுதிய கடிதம்.

"அம்மா அக்கா எழுதிய லெட்டர் இங்கேயிருக்கு" அவசரமாய் எடுத்துக் கொடுத்தான் அவன்.

"இருக்கட்டும் அதை அப்புறம் படிக்கிறேன். நீ முதலில் கிளம்பு" என்றாள் கமலம் விடாப்பிடியாய்.

"அவ வான்னு எழுதினா நான் உடனே போகணுமா?"

"ஆமாம்டா. அப்படித்தான். அவ ஏதோ நெருக்கடியில் இருக்கிறது போல் தெரியுதுடா. நம்ம உதவி தேவைப் படவும் தானே கூப்பிடறா. உடனே போ."

"ஏன் அவளோட அம்மா, பெரிய்ய அம்மா, இத் தனைக்கும் மேலா அவ புருசன்... பார்த்தீங்கல்ல, இளமதி கோவிந்தன்னு கையெழுத்துப் போட்டிருக்கிறதை... அத்தனை பேர் இருக்காங்க, அவங்க செய்யாத உத வியையா நாம செய்யப் போகிறோம்?"

"அவங்களாலே முடியாத உதவியாய் இருக்கலாமில்லை. அதனால்தானே உன்னை வரச் சொல்லியிருக்கா போ."

"நமக்கென்னம்மா வந்தது?"

"நாமதான் உதவி செய்யணும் செழியா. அவ கல்யாணம் இன்னொருத்தர் வீட்டு மருமகளா போயிட்டாலும் உறவு அறுந்து போகாதுடா. அவ என் தம்பி மகள்டா. என் உடன் பிறந்தவன். ரத்தம்டா அவள். என் தம்பிக்கு பிறந்த பிறப்பு கண் கலங்கி உதவின்னு கேட்கையில் நான் செய்யாம இந்த பூமியில் இருக்கிறதா?"

அன்னையின் ஆணையை மீற முடியாமல் மனதில் லாமல் கிளம்பிச் சென்றான் இளஞ்செழியன். இரவு

கிளம்பிய அவனது கார் விடியற் காலையில் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த இளமதியின் எதிரில் புழுதி பறக்க நின்றது. நிமிர்ந்து பார்த்த இளமதி ஒரு கணம் பேச்சிழந்து உறைந்து நின்றாள். மறுகணம் சுதாரித்தவ ளாய்

"வாங்க, வாங்க உள்ளே வாங்க" என்றாள். சத்தம் கேட்டு கடை திறக்க கிளம்பிக் கொண்டிருந்த கோவிந்தன் எட்டிப் பார்த்தான்.

"என் அத்தை மகன். கோயம்புத்தூரிலிருந்து வந்திருக் கிறார்" என்றாள் இளமதி.

"அப்படியா உங்களைப் பார்த்ததில் ரொம்ப சந்தோசம் உள்ளே வாங்க" என்று வரவேற்றவன் மனைவியைப் பார்த்து,

"இளமதி காபி கொண்டு வா" என்றான்.

"இதோ" என்று உள்ளே விரைந்து சென்று காபி கொண்டு வந்தாள் இளமதி. காபி அருந்திக் கொண்டிருந்த வனிடம் மரியாதையாய் உறவினர் நலம் விசாரித்த கோவிந்தன் இளமதியின் பக்கம் திரும்பி,

"வெந்நீர் போட்டுக் கொடு இளமதி. அவர் குளிக் கட்டும். கடைப் பையனிடம் கோழி வாங்கிக் கொடுத்து விடுகிறேன். சமைத்துப் போடு" என்றவன்,

"குளிச்சுட்டு சாப்பிடுங்க. நான் கடையைத் திறந்து விட்டு வந்து விடுகிறேன்" என்று இளஞ்செழியனிடம் கூறினான்.

"அதெல்லாம் வேண்டாம். நான் உடனே கிளம் பணும்." என்று இளஞ்செழியன் மறுக்க,



"அது சரி. வராதவங்க வந்திருக்கீங்க. ஒரு வாய் சாப் பிடாம போறதாவது. நான் சாப்பாட்டிற்கு வந்து விடு வேன். இளமதி உன் பள்ளிக்கூடத்துக்கு போன் பண்ணி லீவ் சொல்லி விடுகிறேன். கவலைப் படாமல் வேலையைப் பார்" என்றபடி வாசலில் இறங்கினான். பின்னாலேயே அவசரமாய் இளமதி தொடர்ந்து வர ஆச்சர்யத்துடன், "என்னம்மா?" என்றான் கோவிந்தன். இளமதி அப்படி யெல்லாம் கணவனிடம் ரகசியம் பேசியதில்லை.

"அவர் வந்திருப்பதை நம் ஊர்க்காரங்க யார் கிட்டயும் சொல்லிட வேண்டாம்" என்று கோரிக்கை வைத்தவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"சரி" என்றான் ஒற்றைச் சொல்லாய்.

திரும்பி வந்த இளமதியிடம்,

"எதற்கு வரச் சொல்லி கடிதம் போட்டாய். அதைச் சொல்லு முதலில். கேட்டுட்டு நான் உடனே கிளம் பணும். உன் வீட்டில் விருந்து சாப்பிடவெல்லாம் எனக்கு நேரமில்லை" என்று வெடுவெடுத்தான் இளஞ்செழியன்.

அவன் பேசுவது காதில் விழுகாதது போல் "ஏய் அஜய், பல்லவி எழுந்திருங்க. ஸ்கூலுக்கு நேரமாய்ருச்சு" என்றவாறு உள்ளே சென்று குழந்தைகளை எழுப்பியவள் அங்கிருந்தே திரும்பி பல்லைக் கடித்துக் கொண்டிருந்த இளஞ்செழியனைப் பார்த்து,

"வெந்நீர் ரெடியாயிருக்கு. பாத்ரூமில் பேஸ்ட் பிரஷ் இருக்கு. பல் தேய்ச்சுட்டு குளிச்சுட்டு வந்திடுங்க. நான் குழந்தைகளை கிளப்பி ஸ்கூலுக்கு அனுப்பிட்டு வந்து டிபன் எடுத்து வைக்கிறேன்" என்றபடி அவன் மறுத்துப் பேச வழியில்லாமல் குழந்தைகளுடன் சென்று விட்

டாள். அவன் குளித்து வரு முன்னர் குழந்தைகளை குளிக்க வைத்து பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவனுக்கு சாப்பாடு எடுத்து வைத்தாள். இளஞ்செழியன் அசையாமல் அமர்ந்து இருக்க,

''சாப்பிட வாங்க. பூரி, சிக்கன் வறுவல் சூப்பரா பண்ணியிருக்கேன்'' என்றாள் எதுவும் நடக்காதது போல்.

வேறு வழியில்லாமல் எழுந்து வந்து பசியின் வேகத்தில் அவன் சாப்பிட்டு முடிக்கவும் சமையலறையை சரி பண்ணி விட்டு அவன் எதிரே வந்து அமர்ந்தாள்.

''இப்போதாவது சொல்கிற உத்தேசம் இருக்கா? இல்லை நான் கிளம்பிப் போய்கிட்டே இருக்கவா?'' என்று கேட்டான். அவனை நிமிர்ந்து பார்த்த இளமதியின் கண்கள் கலங்கியிருந்தன. அவனது இதயம் இளகியது. அதை வெளிக்காட்டாமல் கல்லைப் போன்ற கடினமான குரலில்.

''என்ன விஷயம்?'' என்றான்.

''பெரியம்மா சுவாதிக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணி இருக்காங்க.''

''சுவாதி யார்?''

''என் தங்கையின் பெயர் சுவாதி.''

''ஓகோ. கல்யாணம் நிச்சயம் பண்ணினா பண்ணிக்க வேண்டியதுதானே. உன் கல்யாணத்தையும் உன் பெரியம்மா தானே நிச்சயம் பண்ணினாங்க. நீ பண்ணிக்கலையா?''

''சுவாதிக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை.''

''அப்படியா...? அப்போ நீ... இஷ்டப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டயா?''



''இப்போது நாம் சுவாதி கல்யாணத்தைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கோம்.''

''சின்ன திருத்தம் மேடம். நாம் பேசலை. நீதான் பேசுறே.''

''சரிசரி. நான்தான் பேசுகிறேன். இந்த குதர்க்கப் பேச்சை விட்டு விட்டு என் பேச்சை கொஞ்சம் காது கொடுத்து கேட்கக் கூடாதா?''

''சொல்லு.''

சொன்னாள் ஆதியோடு, அந்தமாக எல்லாவற்றையும் சொன்னாள். முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் கேட்டுக் கொண்டவன் இறுதியாகக் கூறினான்.

''எல்லாம் சரி. இதில் நான் என்ன செய்ய முடியும்? இது உங்கள் குடும்ப விஷயம். இதை ஏன் என்கிட்ட சொல்லுகிறாய்?''

''நீங்கள் என் அத்தை மகன். எனக்கு மட்டுமில்லை சுவாதிக்கும் தான்.''

''நினைவிருக்கிறது மேடம். அதற்கென்ன இப்போது?''

''இல்லை யாரோ போல் பேசுகிறீர்களே. அதுதான் உறவு முறையை நினைவு படுத்தினேன்.''

''எனக்கு எல்லாம் நினைவிருக்கிறது. உனக்குத்தான் மறந்து விட்டது.''

''நல்லது. அப்படியானால் அன்று ஒரு நாள் 'என் மேல் நம்பிக்கை இருந்தால் என்னோடு வா'ன்னு கூப்பிட்டதும் நினைவிருக்கும்.''

விழிகள் சிவக்க அவளை உறுத்துப் பார்த்தான் அவன் 'புரையோடிப் போன புண்ணை குத்திக் கிளரத்தான் என்னை வரச் சொன்னாயா?''

"இல்லை அதற்காக வரச் சொல்லவில்லை. அன்று நீங்கள் கூப்பிடும்போது என்னால் உங்களோடு வர முடியவில்லை. இன்றைக்கு அந்த வார்த்தைகளை நம்பி என் தங்கையை அனுப்புகிறேன். கூப்பிட்டுப் போங்க."

"என்னது?" பதறிப் போய் நாற்காலியை விட்டு எழுந்தான் அவன்.

"என்... என்ன சொல்கிறாய்?"

"எதற்கு இந்தப் பதட்டம். நான் மட்டுமில்லை. சுவாதியும் உங்கள் மாமன் மகள்தான். நீங்கள் தூக்கிக் கொண்டு போய் தாலி கட்ட உரிமையுள்ளவள்தான். உங்களுக்கு அவள் மானத்தையும் உயிரையும் காப்பாற்றும் பொறுப்பு இருக்கிறது."

"அதற்காக... அதற்காக... என்ன வார்த்தை சொல்லி விட்டாய். நீ உன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் உன்னைக் காதலித்தவன்."

"ஆனால் நான் இப்போது உங்கள் காதலியில்லை. திருமதி கோவிந்தன்."

"தெரியும் மேடம். அதுதான் கொட்டை எழுத்தில் கையெழுத்து போட்டு இருந்தீர்களே 'இளமதி கோவிந்தன்' என்று. கோவிந்தனின் மனைவியிடம் எனக்கு எந்த உரிமையும் இல்லைதான். அதேபோல் கோவிந்தனின் மனைவிக்கும் எனக்கு கட்டளையிடும் அதிகாரமில்லை."

"இதோ பாருங்கள். இது கட்டளை இல்லை. வேண்டுகோள். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் பிச்சை கேட்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். சுவாதி கேட்பது தாலிக் கயிறால் கிடைக்கும் சுகமான வாழ்க்கையை இல்லை. சுயமரியாதையுடன் அவள் சாப்பிட



ஒரு பிடிச்சோறு. அதை அவள் சாகும் வரை போட மாட்டீர்களா?"

அவள் கண் கலங்கி கையேந்தி கேட்டவிதம் மனதை பாதித்து விட எந்தவித பதிலும் சொல்லாமல் வெளியேறி விட்டான் இளஞ்செழியன்.

தான் சொன்ன வார்த்தைகளுக்கு நிச்சயம் மதிப்பிருக்கும் என்பதை அறிந்திருந்த இளமதி அமைதியானாள்.

சாப்பிட வந்த கோவிந்தன்,

"எங்கே உன் அத்தை மகன் வந்திருந்தாரே காணோம்" என்று கேட்டான்.

"ஊருக்குப் போயிட்டார்" என்றபடி தட்டைப் போட்டு பரிமாற ஆரம்பித்தாள் இளமதி.

"அப்படியா" என்றவன் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் சாப்பிட ஆரம்பித்தான்.

"அவர் எதுக்கு வந்திருந்தாருன்னு நீங்க கேட்கலையே" என்றபடி அவன் தட்டில் இன்னும் கொஞ்சம் கோழி வறுவலை வைத்தாள் இளமதி.

"எதுக்கு கேட்கணும்?"

"கேட்க வேண்டாமா? அவர் எதுக்கு வந்திருந்தாருன்னு உங்களுக்கு தெரிய வேண்டாமா? அவர் வந்ததை யாருக்கும் சொல்ல வேணாம்னு சொன்னேனே. அது எதுக்குன்னும் உங்களுக்குத் தெரிய வேண்டாம்."

சாப்பிட்டுக் கொண்டிருந்த கோவிந்தன் நிமிர்ந்து அவள் முகத்தையே பார்த்தான். திருமணமான இத்தனை வருடங்களில் இப்போதுதான் அவன் விழியோடு விழி கலக்க நேருக்கு நேராய் பார்க்கிறான். பார்வையை அவள் முகத்திலிருந்து விலக்காமல் பதில் கூறினான்.

"அவர் இங்கே வந்ததற்கு ஏதாவது ஒரு முக்கியமான காரணமிருக்கும். அதை நீ மற்றவங்க கிட்ட மறைக்கிறதுக்கும் முக்கியமான காரணமிருக்கும். என் என்னிடமே நீ அதை மறைச்சிருந்தாலும் அதிலும் ஒரு காரணமிருக்கும். என்னா என் பெண்டாட்டியை எனக்கு நல்லாத் தெரியும். அவ நல்லவ."

இளமதியின் உடல் சிலிர்த்துப் போனது. இது என்ன அதிசயம்? இவன் என்ன வார்த்தைகள் கூறிவிட்டான்? அதிகம் பேசாத, படிக்காத ஆண் மகன் அவன். ஆனால் கட்டிய மனைவியை மதிக்கும் பண்பாளன். அவள் மேல் நம்பிக்கை வைத்திருப்பவன்.

'இளமதி! நீ காதலில் தோற்று விட்டாய். ஆனால் வாழ்க்கையில் ஜெயித்து விட்டாய்!' அவள் மனம் கூவியது.

அவள் மனதின் ஓரத்தில் கடமை உணர்வு மறைந்து காதல் உணர்வு சிறு தளிராய் துளிர்விட ஆரம்பித்தது.

## 10

நிலவு தொடும் வானம்
மேகம் தொடும் வானம்
விண்மீன் தொடும் வானம்
என்னைத் தொட வாராதோ...

தோட்டத்தில் பூ ஒன்றின் மீது அமர்ந்திருந்த வண்ணத்தில் பூச்சி காலடியோசை கேட்டுப் பறந்து சென்றது. மௌனமாய் நடந்து வந்து போடப்பட்டிருந்த சேர்களில் ஒன்றில் அமர்ந்த கமலம் அருகே அமர்ந்த இளஞ்செழியனை ஏறிட்டுப் பார்த்தாள்.



"முடிவு சொல்லாம நாள் கடத்தினா எப்படி செழியா. சுவாதி கல்யாணத்துக்கு குறிச்ச நாளுக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அதுக்குள்ள நாம மடமடன்னு வேலையை ஆரம்பிக்க வேணாமா?"

"அம்மா. நான் சொல்றது ஒண்ணே ஒண்ணுதான். நான் சுவாதியை எப்படியாவது மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம்."

"எப்படி சொல்லப்பா மாப்பிள்ளை பார்ப்பே. அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருந்தாங்க. நிச்சயம் பண்ணின கல்யாணம் பெண்ணை அவ அத்தை மகன் நான் கூட்டி வந்திட்டேன். இப்ப நான் கூட்டிக்கிட்டு வந்த பொண்ணை உங்களுக்கு கட்டிக்க சம்மதமா இப்படிச் சொல்லியா மாப்பிள்ளை பார்ப்பே."

"அப்படின்னா போலீஸ்ல சொல்லலாம்" சொல்லி

"அப்படின்னா போலீஸ்ல சொல்லலாம்" சொல்லி சுவாதியைக் காப்பாத்திட முடியுமா? இளமதியை என்ன செஞ்சாங்க சாவோம்னு மிரட்டலையா?"

"வேறு என்னதான் நாம செய்ய முடியும்மா. இளமதி கூடப் பிறந்த அக்கா. அவளும் அவ வீட்டுக்காரரோடு போய் சுவாதியைக் கூட்டி வந்து அவங்க பொறுப்பில் வைச்சுக்கலாமில்லையா நல்ல இடத்தில் நாம மாப்பிள்ளை பார்க்கறதில் அப்போ சிக்கல் வராது."

"என்னடா பேசற நீ. அக்கா புருஷன் கூட எப்படிடா அந்தப் பொண்ணு வரும். கூப்பிடத்தான் கோவிந்தனுக்கு என்ன உரிமை இருக்கு?"

"எனக்கு மட்டும் உரிமையிருக்கா? என்னம்மா பேசறிங்க? அந்தப் பொண்ணு இக்கட்டில் இருக்கு. காப்பாத்தறது யாராய் இருந்தால் என்ன?"

"கிராமப்புறச் சட்டம் தெரியாமல் பேசாதேடா செழியா. சுவாதியின் கல்யாணத்தை உன்னால்தான் நிறுத்த முடியும். உனக்குத்தான் உரிமை இருக்கே."

"அதைத்தான் அப்போதிருந்து ஏன் ஏன்னு கேட் கிறேன்." "ஏன்னா நீ சுவாதிக்கு முறை மாப்பிள்ளை. சொந்த அத்தை மகன். நீ மணவறையில் உட்கார்ந்திருந்தாலும் கல்யாணப் பொண்ணா உட்கார்ந்திருக்கிறது தாய் மாமன் பொண்ணுன்னா தூக்கிட்டு வந்து தாலிகட்ட உனக்கு மட்டும்தான் உரிமையிருக்கு."

"இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் முறை மாப் பிள்ளை உரிமைன்னு பேசிக்கிட்டு இந்த முறை மாப் பிள்ளை சட்டம் இளமதி விஷயத்தில் எங்கே போனது?"

"அதனால்தானே நமக்குத் தெரியாமல் ரகசியமாய் முடித்தார்கள். இவ்வளவு பேசுற ஆம்பளை நீ. கல் யாணத்துக்கு முதல் நாளே உனக்குத் தெரியுமில்லை. நீ போய் அவளைக் கூப்பிட்டிருக்கத்தானே. அவ வரமாட் டேன்னா என்னடா? காதலிச்சவளை கட்டித் தூக்கிட்டு வர உனக்கு ஏண்டா அப்ப தைரியம் வரலை? அப்படிச் செஞ்சிருந்தா உன் மாமனும் செத்திருக்க மாட்டான். நீயும் இப்படி கல்யாணம் வேணாம்னு வாழ்ந்து என்னை உயி ரோட சாகடிக்க மாட்டே. ஏண்டா அப்படிச் செய்யலை."

இளஞ்செழியன் மௌனமானான். ஏன் அப்படிச் செய்யவில்லை? என்னை விட்டுப் போய் விடு என்று இளமதி சொல்லியிருந்தாலும் கட்டித் தூக்கி வராமல் திரும்பி ஏன் வந்தான்?

"அம்மா ப்ளீஸ் போதும்மா பழைய கதை இப்ப வேணாம்" "நான் பழசைக் கிளறலைப்பா நீதான் இளமதி பேச்சை இழுத்தே."



"இப்ப என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க"

"இளமதியைக் கோட்டை விட்டது போதும். சுவாதியை யாவது காப்பாத்து."

"அவளைக் காப்பாற்றுவதைப் பற்றி பிரச்னையே இல்லைம்மா. உடனே அதைச் செய்து விடுவேன். அதற் கப்புறம். அவள் கழுத்தில் தாலிகட்டச் சொல்கிறீர்களே அதுதான் பிரச்னை."

"செழியா தாலிகட்டுன்னுதான் சொல்றேன். அவகூட வரச் சொல்லி கட்டாயப்படுத்த மாட்டேன். உன் மனசு மாறி வாழ்ந்தாச் சரி. இல்லைன்னா கடைசி வரை சுவாதி என் மருமகளாகவே இந்த வீட்டில் வாழ்ந்துட்டுப் போகட்டும். இளமதி சொன்னதை நினைச்சுப் பாரு. சுவாதிக்கு வேண்டியது அந்த வீட்டிலிருந்து விடுதலை யாமே சுயமரியாதையும் ஒரு படிச் சோறாமே கேட்கவே வயித்தெரிச்சலா இருக்குப்பா. என் தம்பி உயிரோட இருக்கிறவரை மான மரியாதையோடு வாழ்ந்து செத்தான். என் கூட வந்திருன்னு எவ்வளவு கெஞ்சியிருப்பேன். மாட்டேன்னுட்டானே. அவன் பெத்த பிள்ளைகடா இளமதியும், சுவாதியும். அவன் ரத்தம்தான் சுவாதியின் உடம்பிலையும் ஓடும். அவ எப்படிடா அடிமை வாழ்வு வாழச் சம்மதிப்பா. என் தம்பி உயிரோட இருக்கும்போது பெத்த பொண்ணுங்களை நினைச்சு ஏங்கிச் செத்தான் ஒருத்தியைத்தான் காப்பாத்த முடியலை. அடுத்தவளை யாவது காப்பாத்துப்பா. உன்னைக் கையெடுத்து கும் பிட்டுக் கேட்கிறேன்."

அங்கே இளமதி இங்கே பெற்ற தாயார். 'இளஞ்செழியா மத்தளம் ஆகிவிட்டாயே' மனதிற்குள் நொந்து கொண் டவன் சூழ்நிலைக் கைதியானான். அலைகடல் மனதை

மறைத்து மணக்க விரும்பியவளிடம் அவள் தங்கையை மணக்க சம்மதம் தெரிவித்தான்.

வாழ்க்கை என்னும் சதுரங்கத்தில் வெட்டப்பட்ட காயாய் அன்றொரு நாள் விழுந்த இளமதி இன்று அவளே காயை நகர்த்தும் சாதுர்யம் பெற்றவளாய் புத்துணர்வு கொண்டு எழுந்தாள். கனிந்து விட்ட காலம் அவளுக்கு இரக்கம் காட்டியது. காலம் வழிவிட இறக்கை வெட்டப் பட்ட கிளி தன் உடன் பிறப்புக்கு பறக்க கற்றுக் கொடுத்தது. கூண்டையும் திறந்து விட்டது.

# 11

நீ செல்லும் பாதை
தொடுவானம் நோக்கியா?
நான் தொடர்வேன் நிழலாய்
என் வானம் நீயல்லவா?

அதிகாலைக் காற்று பேருந்தின் ஜன்னல் ஓரம் அமர்ந்திருந்த இளமதியைத் தொட்டுச் சிலிர்க்க வைத்தது. பறக்க முயன்ற கூந்தல் கற்றையை ஒதுக்கி விட்டுக் கொண்டவள் குளிர் காற்றின் சிலுசிலுப்பிலிருந்து தப்ப புடவையின் முந்தானையை இழுத்து தோளோடு போர்த்திக் கொண்டாள். காலை நேரத்தில் முதல் டிரிப் என்பதால் பஸ்ஸில் இங்கொருவர் அங்கொருவராக மிகச் சிலரே அமர்ந்திருந்தனர்.

''என்னம்மா இளமதி பெரியம்மா வீட்டுக்குப் போறயா'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். அவளுக்குப் பின் சீட்டில் சுகவனம் பெரியப்பா அமர்ந்திருந்தார்.



''ஆமாம் பெரியப்பா. இன்னைக்கு ஸ்கூல் லீவ். அஜய் அப்பாவுக்கு கடையும் லீவ். பிள்ளைகளைப் பார்த்துக் கிறேன்னார். அதுதான் ஒரு எட்டு சுவாதியைப் பார்த்திட்டு வரலாம்னு போறேன்.''

''நீ போய் பாத்து என்ன செய்யப் போற. அந்தப் பச்சை மண்ணை உசிரோட பலிபோடப் போறாங்க. உன்னை பெத்த ஆத்தாளும், பெரியாத்தாளும். அந்தப் பிள்ளை பல்லில் பச்சைத் தண்ணி கூடப் படாம கிடக்குதாம். என் வீட்டு பொம்பள சொல்லுச்சு. நேத்து உங்க அம்மாவை வழியில பாத்தேன். 'வேணாம் தாயி'ன்னு சொல்லிப் பார்த்தேன். 'ஒன் சோலிய பாத்துக்கிட்டுப் போ. இது என் வீட்டு விவகாரம்'ன்னு மூஞ்சியில் அடிச்சாப்பல சொல் லிருச்சு. கிழவன் சொல்ல காதுல ஏற விடலை'' ஆற் றாமையுடன் புலம்பினார் அந்தக் கிழவர்.

''அம்மா சொல்வதிலும் நியாயம் இருக்கில்ல பெரி யப்பா. பெரியம்மாதான் எங்களை வளர்த்தாங்க. அவங்க பார்த்து வைக்கிற மாப்பிள்ளையைத்தான் நாங்க கல் யாணம் பண்ணிக்கணும்னு அவங்க நினைச்சா அதில் தப் பில்லையே பெரியப்பா. இந்த சுவாதி ஏன் மாட்டேன்னு சொல்லணும்'' இளமதி அகிலாண்டத்தை ஆதரித்துப் பேசினாள்.

''பொம்பளை புள்ளை ஆத்தாமை ஒடன் பொறந்ததுக்கே இல்லைன்னும்போது எனக்கென்ன வந்துச்சு ஆத்தா. ஒங்க பெரியம்மா செய்யறது நியாயம்னு ஒரு வார்த்தை யிலே என் வாயை அடைச்சுப் புட்டே. .....ம்ம்... நடக்கிறது நடக்கட்டும். நல்லவேளை இந்தக் கொடுமையையெல் லாம் பாக்க ஒங்க அப்பன் உயிரோடு இல்லை'' வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டார் அவர்.

இளமதி ரகசியமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அந்தப் பெரியவர் அவளைத் தவறாக நினைக்கிறார். அதனால் பரவாயில்லை. சுவாதி வீட்டை விட்டு வெளியேறும் வரை எந்தவித சந்தேகத்தின் நிழலும் இளமதியின் மேல் படிந்து விடக் கூடாது. அவள் நாவிலிருந்து உதிரும் ஒவ்வொரு சொல்லும் எச்சரிக்கையுடன் உச்சரிக்கப்பட வேண்டும். பேருந்து நின்றதும் இறங்கி கைப்பையை மார்போடு அணைத்துக் கொண்டு அகிலாண்டேஸ்வரியின் வீட்டை நோக்கி நடந்தாள். வீடு அமைதியாக இருந்தது.

'மயான அமைதி'யென மனதில் நினைத்துக் கொண்டாள். மனிதர்கள் மனதில் மனித நேயம் இல்லாதபோது வீடு எப்படி வீடாக இருக்கும்?

"வாடி. என்ன அதிசயமாய் இந்தப் பக்கம் வந்திருக்க" கண்களில் சந்தேகம் மின்ன அகிலாண்டம் கேட்டாள்.

"சுவாதி கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரம் தானே இருக்கு.

"பாவம் உன் பெரியம்மா தனியாக் கிடந்து கல்யாண வேலைகளை பார்க்கிறாங்களே. இன்னைக்கு உனக்கு லீவ்தானே. போய் கொஞ்சம் ஒத்தாசை பண்ணு"ன்னு என் வீட்டுக்காரர் அனுப்பி வைத்தார் பெரியம்மா."

"பரவாயில்லையே. உன் புருசனுக்கு கூட என் மேல் அக்கறை இருக்கே."

"என்ன இருந்தாலும் சுவாதியைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளை உங்க நாத்தனார் மகனில்லையா பெரியம்மா. எங்களை எவ்வளவு சிரமப்பட்டு வளர்த்து ஆளாக்கியிருக்கீங்க. அதுக்கு எங்க காலம் பூராவும் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கோமே பெரியம்மா. இந்தக் கல்யாணத்



தில் உங்களுக்கு ஒத்தாசை பண்ணலேன்னா நல்லா இருக்குமா பெரியம்மா."

அகிலாண்டேஸ்வரிக்கு வார்த்தைகளால் சோப்பு போட்டு விட்டபடி இளமதி கண்களால் சுவாதியைத் துழாவினாள்.

"என்னடி அந்தப் பக்கம் பார்க்கிற?"

"அம்மா எங்கேன்னு பார்க்கிறேன் பெரியம்மா."

"உன் அம்மா நெல் அவிச்சுப் போட களத்து மேட்டிற்குப் போயிருக்கா. கல்யாணத்துக்கு அரிசி தயாராகணுமில்ல."

"சரிதான் பெரியம்மா. அதுக்காக உங்களை இப்படித் தனியாகவா விட்டுவிட்டுப் போனாங்க? நல்லாயிருக்கு பெரியம்மா. நீங்களே பாவம் உடம்பு சரியில்லாதவங்க. ஒரு வாய் தண்ணீர் வேணும்னா கொடுக்கக் கூட பக்கத்தில் ஆள் இல்லாம இந்தம்மா பாட்டிற்கு பொறுப்பில்லாம போகலாமா?"

இளமதி ஐஸ் பெட்டியைத் தூக்கி அகிலாண்டத்தின் தலைமேல் வைக்க அவள் உச்சி குளிர்ந்து போனாள்.

"அவளை ஏண்டி வையறே. உன் தங்கச்சியை என்னைப் பார்த்துக்கச் சொல்லி விட்டுவிட்டுத்தான் போயிருக்கா."

"அதுதானே பார்த்தேன். இந்த சுவாதிக் கழுதையாவது உங்களுக்கு காபி, கீபி கொண்டு வந்து கொடுத்தாளா, இல்லையா?"

"அவ கொண்டு வந்து கொடுத்துட்டுத்தான் வேற வேலை பார்ப்பா. நல்லா சொன்னே போ. எல்லாம் அன்னம்மா கொண்டு வந்து கொடுத்தா."

''ஏன் சுவாதிக்கு என்ன வந்ததாம். இது கூட செய்யலைன்னா என்ன பொண்ணு அவ.''

''அதையேண்டி கேட்கிறே. ஒன் தங்கச்சி மகாராணிக்கு மூலையில் கிடந்து அழுகறதுதான் பொழைப்பாயிருக்கு. என்னை எங்கே கவனிக்கிறா. எப்பப் பாரு மாடி ரூமில் மோட்டு வளையைப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறா. என்னவோ இவன் அப்பன் வீட்டு அரண்மனையில் மாடி மேல் உட்கார்ந்திருக்கிறது மாதிரி மனசில நினைப்பு. உங்களைச் சொல்லிக் குத்தமில்லடி. இந்த அகிலாண்டம் சொத்துக்கு...'' முடிக்க முடியாமல் மூச்சு வாங்க அவள் நிறுத்திக் கொள்ள.

''அன்னக்காவடி நாராயணன் பெத்ததுக வாரிசாகணும்னு விதிச்சிருக்கு. அதுதானே பெரியம்மா'' என்று இளமதி முடித்தாள்.

''என்னடி வாய்க்கொழுப்பா?''

''விளையாட்டுக்குச் சொன்னேன் பெரியம்மா. இந்த சுவாதிதான் அறிவு கெட்ட கழுதைன்னு உங்களுக்குத் தெரியாதா? அவளைப் போய் ஒரு பெரிய மனுசின்னு நினைத்துக்கிட்டு பேசி உங்க உடம்பை ஏன் இப்படி கெடுத்துக்கறீங்க. இப்படிக் கவலைப்பட்டா உங்க உடம்பு தாங்குமா? நீங்க அலட்டிக்கலாமா? உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா எங்க கதி என்னாகிறது?'' என்று இளமதி பேசிய விதத்தில் அகிலாண்டேஸ்வரிக்கு சோர்வே வந்து விட்டது. அசதியாய் அவள் படுக்கையில் சாய்ந்து கொள்ள தலையணையை அணைவாய் வைத்து விட்ட இளமதி,

''மெல்ல, மெல்ல பார்த்துப் படுங்க பெரியம்மா. சாப்பிட ஏதாவது சுவாதியைக் கொண்டு வரச் சொல்லவா?'' என்று கேட்டாள்.



''அதெல்லாம் சாப்பிட்டாச்சு. அவளுக்கு புத்தி மட்டும் சொல்லிட்டுப் போ'' என்றபடி அகிலாண்டம் உறங்கலானாள்.

அந்த சந்தர்ப்பத்திற்காகத்தானே இளமதி காத்திருந்தாள். ''சரி பெரியம்மா'' என்றவள் அறையை விட்டு வெளியேறி மாடியேறினாள். காலடிச் சத்தம் கேட்டு சுவாதி மிரட்சியுடன் திரும்பிப் பார்த்தாள். இளமதியைக் கண்டதும் அவளது கண்களில் ஏக்கமும், தன்னிரக்கமும் குடிகொள்ள,

''எங்கேக்கா வந்தாய். இன்னும் நான் உயிரோடு இருக்கிறேனா, இல்லையான்னு பார்க்க வந்தாயா?'' என்று கேட்டாள். பிரியமுடன் அந்தக் குழந்தை முகத்தை கைகளில் ஏந்தி விழி நீரை துடைத்து விட்ட இளமதி,

''கிளம்பு சுவாதி'' என்றாள்.

''எங்கேக்கா. உன் வீட்டுக்கா? இவங்க அனுப்புவாங்களா?''

''என்னோட கிளம்பச் சொல்லவில்லை. தனியாகக் கிளம்பிப்போ.''

''தனியாகப் போவதா? நான் எங்கேக்கா போவேன்.''

''வீட்டின் பின் வாசல் வழியாகப் போ. ஊர் எல்லையில் அரச மரத்துப் பிள்ளையார் கோவில் பின்புறம் உனக்காக ஒரு கார் காத்துக் கொண்டிருக்கும் அதில் ஏறி இந்த ஊரை விட்டுப் போய் விடு.''

ஏதோ மர்மக் கதை கேட்பது போல் விழியகலக் கேட்டுக் கொண்டிருந்த சுவாதியின் உயிரற்ற விழிகளில் நம்பிக்கை ஒளி தோன்றியது. 'அக்கா ஏதோ செய்திருக்கிறாள்' என்பதைப் புரிந்து கொண்டாள்.

"இந்த ஊரை விட்டுப் போய் விடு என்கிறாய். ஆனால் எங்கே போவது? அதற்கப்புறம் என்ன செய்வது? இது எதையும் நீ சொல்லவில்லையே."

"அதை அந்தக் காரில் உள்ளவர் சொல்லுவார்?"

"காரில் யாரிருக்கிறார்?"

"நீ போய் பார் தெரியும்."

"அக்கா எனக்குப் பயமாக இருக்கிறது."

"சுவாதி இப்போது பேச நேரமில்லை. அம்மா வீட்டில் இல்லை. களத்து மேட்டில் இருக்காங்க. பெரியம்மா தூங்கிக்கிட்டு இருக்காங்க. அன்னம்மா வாசல் பக்கம்தான் வேலை பார்க்குது. நீ பின் வாசல் வழியா யார் கண்ணிலும் படாமல் காருக்குப் போயிடு. இது காலை நேரம் ஊருக்குள் அவ்வளவா நடமாட்டம் இருக்காது. வினாடிப் பொழுதைக் கூட வீணாக்காமல் ஓடு. அதுக்கப்புறம் ஆக வேண்டியதை உன்னைக் கூட்டிச் செல்கிறவர் பார்த்துக் கொள்வார். நீ வீட்டை விட்டுக் கிளம்ப இதுதான் சரியான சமயம்" அவளைக் கிளப்பிய இளமதி கைப்பையைத் திறந்து சிறிய நகைப் பெட்டியை எடுத்தாள்.

"இந்தா சுவாதி இதை வைத்துக் கொள்."

"அக்கா! இந்த நகையெல்லாம் உன்னுடையது அக்கா."

"ஆமாம் என்னுடையதுதான். நான் உழைத்த பணத்தில் வாங்கியது. சுவாதி! நீ கட்டின துணியோடு வெளியேற வேண்டியிருக்கிறது. மாற்றுத் துணிகூட எடுத்துப் போக முடியாது. இந்த நகைகள் உன் அக்கா உனக்கு கொடுக்கும் தாய் வீட்டுச் சீதனம்."

"அக்கா..."

"ஓடு சுவாதி ஓடு. நிற்கவோ, பாசம் காட்டிப் பேசவோ உனக்கு நேரமில்லை. இந்தக் காலை நேரத்தில் எல்லோரும் வீட்டுக் காரியம், தோட்டக்காரியம்ன்னு இருப்பார்கள். வெயில் வந்து விட்டால் ஊருக்குள் நடமாட்டம் வந்து விடும். கேள்வி கேட்காமல் ஓடு. திரும்பிப் பார்க்காமல் ஓடு."



ஒரு வினாடி தயங்கி நின்ற சுவாதி இளமதியின் பாதம் பணிந்து எழுந்தாள். மறு வினாடி மின்னலாய் மாடிப் படிகளைக் கடந்து பின் வாசல் கதவைத் திறந்து தெருவில் இறங்கி மறைந்து விட்டாள். இளமதியின் மனதில் அமைதி குடி கொண்டது. இனி அவள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சுவாதி வெளியேறி விட்ட செய்தியை மற்றவர்கள் மூலம் அவள் தெரிந்து கொள்வதாய் இருக்க வேண்டும். மாடிப்படி இறங்கி வாசல் பக்கம் சென்றவள் அங்கே வேலை செய்து கொண்டிருந்த அன்னம்மாவின் அருகே அமர்ந்து பேச்சுக் கொடுக்கலானாள்.

வீட்டை விட்டு வெளியேறிய சுவாதி ஓட்டமும் நடையுமாய் மறைந்து, மறைந்து ஊர் அரச மரத்துப் பிள்ளையார் கோவிலை அடைந்தாள். கோவிலின் பின்புறம் சென்றாள். ஒரு கார் நின்றிருந்தது. அவள் நெருங்கியதும் காரின் பின்புறக் கதவு திறந்தது. பதட்டமாய் அவள் ஏறி அமர்ந்தவுடன் கார் கிளம்பி விட்டது. ஊரைக் கடந்து கார் விரைய 'தப்பித்து விட்டோம்' என்ற உணர்வில் சுவாதி நிம்மதிப் பெருமூச்சு விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். கார் ஓட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்து,

"நீங்கள் யார் அக்காவுக்குத் தெரிஞ்சவரா?" என்று கேட்டாள்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த இளஞ்செழியன் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தைக் கண்டதும் சுவாதியின் இதயம் ஒரு கணம் நின்று அடித்தது.

"நீங்களா?" என்றாள் அவள் இன்ப அதிர்ச்சியுடன்.

"நான்தான்" என்றான் அவன் கடுமையான வெறுப்புடன்.

## 12

பாராதது போல் பார்த்தாய்
சிரிக்காதது போல் சிரித்தாய்
செல்லாதது போல் சென்றாய்
தொடுவானம் நீயென்றாய்

சுவாதியை எந்த திருமண விழாக்களுக்கும், விசேஷங்களுக்கும் அகிலாண்ட ஈஸ்வரி அழைத்துச் செல்வதில்லை. அபூர்வமாய் கடலூரில் நடந்த ஒரு திருமணத்திற்கு சுவாதியையும் உடன் அழைத்துச் சென்றிருந்தாள். அந்த திருமண வீட்டார், படித்த வசதியான குடும்பத்தினர் என்பதுதான் அதன் காரணம். படித்த நாகரிகமான அழகான சுவாதி தன்னுடன் வருவது முக்கியமென்று கருதி அவளை விலையுயர்ந்த சுடிதாரும், நகைகளையும் அணியச் செய்து உடன் அழைத்துச் சென்றிருந்தாள். திருமணச் சத்திரத்தில் உறவினருடன் அவள் கலந்து விட தனித்து விடப்பட்ட சுவாதி தனியே ஒரு கூல்டிரிங் பாட்டிலுடன் ஒதுங்கினாள்.

"ஹலோ" என்ற குரலுடன் அருகே வந்து நின்றாள் அவளது வயதையொத்த இளம் பெண் ஒருத்தி.

"ஐ ஆம் மாலதி."

"ஐ ஆம் சுவாதி."



சுவாதீனமாய் ஒரு சேரை இழுத்துப் போட்டு அருகே அமர்ந்த அந்த மாலதி நட்பாய் புன்னகை செய்தபடி.

"மேரேஜ் பங்ஷன் அட்டெண்ட் பண்ணனும்கிறதெல்லாம் பொய் சாக்கு. பெரியவங்க அரட்டை அடிக்கிறதுக்கு ஒண்ணாக் கூடுறதுதான் உண்மை. கூடவர்ற நமக்குத்தான் கஷ்டம்."

"ஆமாம்."

"நான் டெல்லியில் படிச்சுக்கிட்டு இருக்கேன் நீங்க...?"

"நான் டிகிரி முடிச்சுட்டு மேலே கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கிறேன்."

சிரத்தையில்லாமல் மாலதியின் கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டிருக்கையில் "ஹேய் மாலதி இங்கே என்ன பண்றே. அங்கே அக்காவும் அத்தானும் உன்னைத் தேடிக்கிட்டு இருக்காங்க" என்றபடி அருகில் வந்தான் அந்த வாலிபன்.

"ஏன் பெரியவங்க மட்டும்தான் அரட்டையடிக்கணுமா. நான் இவங்க கூட அரட்டை அடிச்சிக்கிட்டு இருக்கேன்."

"அரட்டை அடிக்கிறயா இல்லை அவங்களை மிரட்டிக்கிட்டு இருக்காயா" "அவங்களையே கேளுங்களேன்."

"கேட்டுட்டாப் போகுது" என்றபடி அவன் சுவாதி பக்கம் திரும்ப அதே கணம் சுவாதியும் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள். பார்த்தவுடன் பிரமித்தாள். ஆறடி உயரத்தில் அடங்க மறுத்து சிலுப்பிக் கொண்டு நிற்கும் சிகையுடன் க்ரீம் கலர் கோட் - சூட்டில் கம்பீரமாய் ஒரு ராஜகுமாரன் போல் அவன் நின்ற விதம் அப்படியே ஓவியமாய் அவள் மனதில் பதிந்தது. அதே நேரம் அவனும் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்

கொண்டிருந்தான். அவனது உடலில் ஒரு பரபரப்பு உற்பத்தியானது. விழிகள் மின்ன அவளிடம் எதையோ கேட்க அவனது உதடுகள் துடித்தன. அவனது படபடப்பைக் கண்ட மாலதி சிரித்தாள்.

"என்ன மாமா கண்டதும் காதலா இனி பாட்டிக்கு நிம்மதிதான்" என்று கிண்டலாய் அவள் கூற சுவாதியின் மனம் ஒரு கணம் சிறகடித்து பறந்தது. உண்மையா இது கனவா அல்ல நினைவா கதைகளில் தான் இப்படி ஒரு ராஜகுமாரன் வருவான். என் ராஜகுமாரன் இவன் தானா அவளது என்ன ஓட்டத்தை தடுத்து நிறுத்தியது அவனது குரல்.

"நீ... நீ... இளமதி இல்லையில்லை. அவளைவிட இளையவளாக தெரிகிறாய்... ஒருவேளை... நீ... என் இளமதியின் தங்கையா?"

"என் இளமதி அப்படியே சிலையாய் சமைந்து போனாள் சுவாதி. 'யாரிவன் ஒரு வினாடியில் வந்து மனதை கவர்ந்தவன் அடுத்த வினாடியில் சிலுவையில் அடிக்கிறானே. அக்காவை இவனுக்கு எப்படித் தெரியும்?" அவள் திகைத்து நிற்கையில் அதற்கு பதில் கூறுவது போல் மாலதியின் குரல் ஒலித்தது.

"ஆரம்பிச்சாச்சா, இளமதி, இளமதின்னு ஏன் மாமா இப்படிப் பேசுறீங்க. அவங்க யாரோ அவங்க கிட்ட போய் உங்க இளமதியை கேட்கிறீங்களே" அவள் பெரிய சுவாதீனமாய் கூறினாள்.

"இல்லைங்க நான் யாரோ இல்லை. அவர் சொல்வது போல் இளமதியின் தங்கை தான். நாங்க இரண்டு பேரும் ஒரே சாடையில் இருப்போம்."



"என்ன?" ஆச்சரியமாய் கேட்ட மாலதி, "அப்போ நாராயணன் தாத்தா?" என்று வினவினாள். "என் அப்பா தான்."

"ஓ! மாமா! பரவாயில்லை உங்க காதலுக்கும் சக்தி இருக்கிறது. இங்கே இளமதியின் தங்கையை பார்ப்போமுன்னு நினைத்துக் கூட பார்க்கவில்லை."

அவளது பேச்சு காதில் ஏறாதவனாய் சுவாதியை பார்த்துக் கொண்டு இருந்தவன் 'என் இளமதியின் தங்கையா நீ! அவள் ஜாடை அப்படியே இருக்கிறது' என்று மீண்டும் வியப்புடன் கூறினான்.

"சுவாதி" என்று அகிலாண்டம் அழைத்த குரல் கேட்டு பற்றி திரும்பியவன் அவர்களிருவரிடமும் விடை கூட பெறாமல் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

'அவர்கள் யார் இளமதியை அவர்களுக்கு எப்படித் தெரியும்' என்ற எண்ணம் அடிக்கடி வரும். அந்த எண்ணத்தோடு அவனின் நினைவும் சேர்ந்து வரும். முதன் முதலாய் அவளின் பெண்மையை தட்டி எழுப்பியவன். அவளது அக்காவின் காதலன். இளமதியிடம் இதைப்பற்றி பேச அவள் முயன்றதில்லை. இளமதியின் மேல் அவள் வைத்திருந்த மரியாதைதான் காரணம். காலப் போக்கில் அவள் இதயத்தில் கண்டதும் தோன்றிய அந்தக் காதல் ஆழத்தில் அமிழ்ந்து விட்டது. அவள் வாழ்க்கையின் போராட்டத்தில் காதலை எண்ணும் நிலையிலும் அவள் இல்லை. 'சுயமரியாதையுடன் ஒரு கவளம் உணவு' இந்தக் குறிக்கோளுக்காக போராடிக் கொண்டிருந்தவள். விடுதலை வேண்டித்தான் அந்தக் காரில் ஏறினாள். அந்தக் காரில் இருந்தவனோ அவள் கருத்தில் இருந்தவனாய் இருந்தான். அவளைக் காப்

பார்றும் பொறுப்பை அவன் ஏற்றான். தமக்கையின் வேண்டுதலுக்காக தங்கையை காப்பாற்ற வந்தானா? விடை தெரியாத கேள்விகள் அவன் நெஞ்சில். விடை தெரிந்தவனோ மௌனத்தில் இதுதான் காலத்தின் விளையாட்டு.

# 13

பாலை வனத்தின் சுடு மணலில்
கானல் நீர்தான் தாகம் தணிக்குமா?
பாவை மனத்தின் கைக்கிளைக் காதலில்
தொடு வான நிழல்தான் தொட்டு விடும் தூரமா?

துவரம் பருப்பை கல் திருகையில் போட்டு பிடிகம்பை இறுக்கி விட்டுக் கொண்டு திருகையை சுற்றலானாள் அன்னம்மா. திருகையின் ஓரங்களில் பருப்பு உடைபட்டு வெளியே விழுக அதை ஒரு கையால் தள்ளிவிட்டுக் கொண்டே காலை நேரத்திலேயே பேச்சுக்கு ஆள் கிடைத்துவிட்ட சந்தோசத்துடன் இளமதியுடன் பேசிக் கொண்டிருந்தாள். "உன் பெரியம்மா ஜரூரா வேலை வாங்கிட்டு இருக்க. நெல் அவிச்சுப் போட்டாச்சு. இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ள துவரம் பருப்பும், உளுந்தம்பருப்பும் தோல் தனியா பருப்பு தனியா இருக்கணும்டி. அன்னம்மான்னு சொல்லிப்புடிச்சு. இது சாயங்காலத்துக்குள்ள முடியுற வேலையா? முதுகு ஒடியுது."

S. No: 2741.



"பெரியம்மாவுக்கு எங்க மேல பிரியம் ஜாஸ்தி அன்னம்மா அதுதான் கல்யாண வேலைகளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறாங்க."

"என்னமோ போகண்ணு நீதான் உங்க பெரியம்மாவை மெச்சிக்கணும். உன் தங்கச்சிப் பொண்ணு சோறு தண்ணியில்லாம இப்பவோ, பிறகோன்னு குத்துயிரும் குலையுயிருமா கிடக்குது. அது பொழைச்சுக் கிடந்தாத்தான் கல்யாணம். செத்துக் கித்துப் போயிருச்சுன்னா பொணத்துக்கா தாலி கட்டுவான் அந்த கபோதி."

"அன்னம்மா ஒருத்தர் தப்பு செஞ்சா அதையே சொல்லிக் காட்டணுமா? பெரியம்மாவோட நாத்தனார் மகனை அப்படியெல்லாம் திட்டாதே. நான் சுவாதிக்கு புத்தி சொல்லி பல் தேய்க்க அனுப்பிட்டுத்தான் வந்திருக்கேன். நீ போய் டிபன் இருந்தால் கொண்டு வா. நாம் அவளை சாப்பிட வைக்கலாம். சின்னப் பெண். நல்லது, கெட்டது அவளுக்குத் தெரியுமா? பெரியம்மாவிற்குத் தெரியுமா? நீயும், நானும்தான் புத்தி சொல்லித் திருத்தணும். அவளை நம்ம வழிக்குக் கொண்டு வர்றதை விட்டுட்டு நாம் அவள் வழிக்குப் போகிறதா?"

"என்னம்மா சொல்றே. உன் தங்கச்சி பல்லு விளக்கப் போயிருக்கா? பெருமாளே! என் வயித்துல பாலை வார்த்தே சாமி. நான் வளர்த்த பொண்ணு பச்சத் தண்ணி பல்லு மேல படாம பட்டினி கிடக்குதேன்னு அல்லாடிக்கிட்டு கிடந்தேன். மகராசி நீ வந்து எழுப்பிட்ட. ரெண்டு நாளா என் தொண்டைக் குழியிலே அன்ன ஆகாரம் இறங்கலை இளமதிக் கண்ணு. இதோ, சொடுக்கு போடுற நேரத்துக்குள்ள பலகாரம் கொண்டு வரேன் பாரு."

உற்சாகமாய் பேசிக் கொண்டே அந்த தாய் மனம் கொண்ட வேலையாள் எழுந்தாள்.

'வீட்டில் வேலை செய்பவர்களுக்கு சுவாதி மேல் உள்ள பாசம் கூட பெற்றவளுக்கும், அவள் கூடப் பிறந்தவளுக்கும் இல்லையே' என்று எண்ணி மனம் கசந்த இளமதி.

"ஆமாம் நீ அவளை மட்டும்தான் வளர்த்தியா அன்னம்மா என்னை வளர்க்கலையா?" என்று கேட்டாள்.

"நீ தான் தூக்கி வளர்த்த பொண்ணு. சுவாதிக்குட்டி நான் மடியில் போட்டு தோளில் சாத்தி வளர்த்த பொண்ணு" என்று பேசியபடி அன்னம்மா உள்ளே செல்ல காலையில் இரண்டாவது குட்டித் தூக்கம் கலைந்தவளாய் அகிலாண்டம் எழுந்து வெளியே வந்தாள்.

"என்ன இங்கு கூத்தும் கும்மாளமும் கொடிகட்டிப் பறக்குது. டீச்சர் மகாராணி என்னத்தை கண்டுக்கிட்டா இப்படிச் சிரிக்கிறாள்" என்று இடக்காய் அவள் கேட்க.

'ஒனக்குத்தான் யார் சிரித்தாலும் பொறுக்காதே' என்று அன்னம்மா முணுமுணுத்தாள்.

"என்னடி வாய்க்குள்ளே முணுமுணுக்கிற. பருப்பை ஒடைடின்னா சமையல் கட்டிலே போய் பாத்திரத்தை உருட்டிகிட்டு நிற்கிறே. டீச்சரம்மா தானா கொட்டிக்கிற மாட்டாளாம்மா."

"அட சும்மா சும்மா சத்தம் போடாதேம்மா. இளமதிக்கு ஒண்ணும் பலகாரம் எடுக்கல. சுவாதி பின் பக்கம் பல்லு விளக்கி முகம் கழுவிட்டு வரப் போயிருக்கு. அதுக்குத் தான் பலகாரம் எடுக்கப் போறேன்."

"கழுதைக்கு வீம்பு குறைஞ்சிடுச்சா. நாலு நாள் பட்டினி போட்டா தானா அடங்கிடுவான்னு நான் போட்ட கணக்கு தப்படி. நாராயணன் பெத்த மக நாக்கை அடக்கி



பட்டினி கிடக்கிறாளாம். யாருக்கிட்ட வீம்பு பிடிக்கிறா? இவளுக ரோசமெல்லாம் தெரியாதடி இவங்கம்மா கல்யாணம் கட்டிக்கிட்டு ஆடிக்கிட்டு போனாளே என்ன ஆச்சு. திரும்ப வந்து இந்த அகிலாண்டம் காலில தாண்டி விழுந்தா. நாதியத்த கழுதைகளுக்கு ரோசம் வருதாம் ரோசம்."

அகிலாண்டம் நீட்டி முழக்கி பேச இளமதி நெஞ்சம் கொதிக்க முகத்தில் தசைகள் இறுக மௌனம் காத்தாள். அன்னம்மாள் பதறிப் போனாள்.

"ஐயோ, ஐயோ! மெதுவா பேசம்மா. நீ பேசறது காதில விழுந்தா அந்தப்புள்ள பழையபடி சாப்பிடாம போயிடப் போகுது. நாலாவது நாள் பட்டினின்னா சாவுதான். நீதான் கொன்னுட்டேன்னு போலீஸ்காரன் புடிச்சிட்டுப் போவான். அதற்கு இந்த ஊரே சாட்சி சொல்லிப்புடும், பாத்துப் பேச ஆமா சொல்லிப் புட்டேன்."

"போலீஸ்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் ஸ்விட்ச போட்டவளாய் அமைதியான அகிலாண்டம் பின் பக்கம் போனாள். கிணற்றடியில் முகம் கழுவியவள் உள்ளே திரும்பி, "ஏண்டி அன்னம்மா" என்று கூப்பிட்டாள்.

"அட என்னம்மா நீ வேற அன்னம்மா. அன்னம்மான்னு ஏலம் போட்டுகிட்டு. அந்த பொண்ணை ஒரு வா சாப்பிட வைக்கலாமுன்னா அதுக்கு ஒரு எட்டு விடாம வேலை சொல்லிக்கிட்டு இப்போ என்னம்மா வேணும்?"

"நீ வேற ஏண்டி என் உயிரை வாங்குற. அந்தக் கழுதை பின்னாடிதான் இருக்கிறான்னு சொன்னே. இங்கே காணோமே."

"பாத்ரூம்ல இருக்குதோ என்னமோ" என்றபடி பாத்ரூம் கதவை "சுவாதி சுவாதி" என்று அழைத்தபடி அன்னம்மா தட்டலானாள்.

''என்ன அன்னம்மா'' என்றபடி இளமதியும் பின் பக்கம் வந்தாள்.

''சுவாதியை காணோம்மா'' என்றாள் அன்னம்மா, திறந்து கிடந்த பாத்ரூமை கலவரத்துடன் பார்த்தபடி.

''என்ன அன்னம்மா சொல்றே. நீயும் நானும் தானே அவ பின்னாடி பல் தேய்க்கிறத பார்த்தோம். டிபன் எடுத்து வைக்கிறதுக்குள்ளே எங்கே போயிருப்பாள்'' என்று மடமடவென பேசியபடி இளமதி தேடலானாள்.

சுவாதியை தேடும் படலத்திலிருந்த அன்னம்மாவும் வெகுளியாக,

''அதான் கண்ணு இங்கே தானே இருந்துச்சு'' என்றபடி தோட்டத்துக் கதவ தொட அது திறந்திருந்தது.

''அம்மா பின்னாடி கதவு திறந்திருக்கு'' என்றாள் அன்னம்மா பெரிய சத்தமாய்.

அகிலாண்டேஸ்வரி ஓடி வந்து பார்த்தாள். திறந்திருந்த கதவு கூண்டை விட்டுக் கிளி பறந்துவிட்ட செய்தியைக் கூறியது. அடுத்த வினாடி அவள் போட்ட ஆத்திரக் கூச்சலில் ஊரே திரண்டு வந்து அந்த வீட்டில் குழுமியது. களத்து மேட்டிலிருந்த ரெங்கநாயகி தகவலறிந்து பதறி ஓடிவந்தாள். எல்லோரும் தலைக்குத் தலை ஊர் நியாயம் பேசினார்கள். கூட்டத்திலிருந்த சுகவனம் பெரியப்பா,

''அடடா நான் காலையில பஸ்ஸ்ல இளமதியை பார்த்தப்ப கூட ஆத்தாமைப்பட்டேன்ப்பா. பொட்டப் புள்ளையை பலி போட கூடாதும்மா. ஒன் வீட்டு பெரிய பொம்பளைங்ககிட்ட நீயாச்சும் சொல்லக் கூடாதான்னு சொன்னேன். பெரியப்பா, எங்க பெரியம்மா எங்களுக்கு நல்லதுதான் செய்யுமுன்னு மூஞ்சியில அடிச்சாப்புல பதில் பேசிப்புடுச்சப்பா.



இப்ப பாரு அந்த பொண்ணு வீட்டை விட்டு போயி ருச்சு. கொஞ்சமாவது நாலு பெரிய மனுசங்க நல்லது சொல்வதை கேட்டாத்தானே ஆச்சு. இதுதான் பொம்பளை பிள்ளைங்க ராஜ்ஜியம் கட்டின வீடாச்சே. பெரியம்மாவோட கூட பொறந்த பொறப்பு கண் காணாம போயிருச்சே இப்போ என்னப்பா சொல்லப் போகுது...'' என்றார் அருகி லிருந்தவரிடம், கோபமாக. அதைக் கேட்டு விழிகளை உருட்டி அவரை முறைத்தாள் அகிலாண்டேஸ்வரி. அதைக் கேட்டதும் அன்னம்மாவுக்கு தாங்கவில்லை.

''என்கிட்டயும் அப்படித்தான் சொல்லுச்சு இளமதி. பெரியம்மா மனசு கோணக்கூடாது. நாமதான் புத்தி சொல்லணும்னு சொல்லி தங்கச்சியைத் திட்டி பல்லு விளக்க அனுப்புச்சு. பல்லு விளக்கப் போன பொண்ணு நான் பலகாரம் எடுத்துக்கிட்டு வாரதுக்குள்ள பஞ்சாப் பறந்து போயிருச்சே. ஒரு வாய் சாப்பிடக் கூட இல்லையே. மூணு நாள் பட்டினி கிடந்த குழந்தை எங்க போச்சோ என்ன ஆச்சோ'' என்று அவள் புலம்ப,

''ஆமாடி ஓடுகாலிக் கழுதை ஊர் சிரிக்க வைச்சிட்டுப் போயிட்டா. அவளை வெட்டிப் போடணும்னு நான் கெடந்து தவிக்கிறேன். அவ பலகாரம் திங்காம போயிட் டாளேன்னு நீ கிடந்து பரிதவிக்கறே. இதெல்லாம் நேரம்டி. போக்கிடம் கெட்ட கழுதைய பொழுது போக படிக்க அனுப்பி வைச்சா அது ஓடிப்போகப் பழகிட்டு வந்து என் மானத்தை வாங்கிருச்சு. ஒண்ட வந்ததுகளை உட்கார வைச்சு ஆக்கிப் போட்டேன். இப்ப அருமை பெருமையா அள்ளிக் கொடுக்குதுக. ஏண்டி இளமதி நீயேண்டி பித்துப் பிடிச்சாப்புல நிற்கிறே. போ. போயி உன் பிழைப்பைக்

கவனி. பெரியம்மா, பெரியம்மான்னு சொன்னதையெல்லாம் கேட்டே. நான் காலால் சொன்னதை தலையால் செஞ்சு முடிச்சே. நன்றி விசுவாசத்தோடு இருந்தே. உன் கூடப் பிறந்தவளுக்கு அது இல்லாமப் போயிருச்சு. நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைச்சேன். அது இந்த மட்டிலும் கடிக்காம ஓடிடுச்சே. அதுவே நல்லதுன்னு நினைச்சுக்கறேன். நீ கிளம்புடி'' என்று அகிலாண்டம் பொரிந்தாள்.

''நாய்'' என்ற வார்த்தையைப் பொறுக்க மாட்டாமல் ''அக்கா'' என்று ரெங்கநாயகி கூவ அதைக் கவனியாதவள் போல் அவள் உள்ளே போய் விட்டாள். அப்படியே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ரெங்கநாயகி அமர்ந்துவிட இளமதியும், அன்னம்மாவும் தாங்கிக் கொண்டார்கள். ரெங்கநாயகி புலம்பிக் கொண்டே இருந்தாள். அன்னம்மா அவளை வெறுப்புடன் பார்த்தபடி,

''அட எம்மா இப்ப கிடந்து கூவிக்கிட்டு இருக்கிற. மாட்டேன், மாட்டேன்னு மல்லுக் கட்டின புள்ளையை மனுசியாக் கூட நினைக்க மாட்டேனுட்ட. இப்ப அது ஓடிப் போனப்புறம் நெஞ்சைப் புடிச்சுக்கிட்டு உட்கார்ந்து புலம்புற. உனக்கெல்லாம் இது அடுக்காதும்மா'' என்றாள்.

இளமதி அன்னம்மாவை தடுத்தபடி,

''நேரம் காலம் தெரியாம பேசாதே அன்னம்மா. பெத்தவங்க பிள்ளைக்கு கெடுதல் செய்வாங்களா?'' என்றாள்.

''பட்டும் புத்தி வரலையே என் இளமதி கண்ணுக்கு. ஏங்கண்ணு இந்தம்மா உங்க ரெண்டு பேத்தையும் பெத்த பொம்பளையா? உங்க பெரியாத்தா காரிக்கு தங்கச்சி கண்ணு. இதுவா பெத்தது?''



''போதும் அன்னம்மா வாயை மூடு.''

''பொறு கண்ணு. வந்ததை பேசிட்டு அப்புறமா வாயை மூடிக்கறேன். அப்புறம் வாயைத் திறக்க முடியுமா இந்த ரெண்டு பொம்பளைக கிட்டயும்? கஞ்சியோ, கூழோ குடிச்சாலும் கொண்டவன் கிட்ட மானமா குடித்தனம் பண்றவதான் பொம்பளை. காசு, பணத்துக்கு ஆசைப்பட்டு ஆத்தா வீட்டுக்கு வந்து அடிமைப் பொணமா வாழறவ பொம்பளை இல்லை. இந்தம்மா புருசனைக் கொன்னுச்சு. உன்னை பலி போட்டுச்சு. இப்ப உசிரோட அந்தப் பச்சை மண்ணை தொலைச்சிருச்சு.''

''அன்னம்மா இதுதான் உன் லிமிட் நிறுத்திக்க.''

''வேலைக்காரி லிமிட் எனக்கும் தெரியும் கண்ணு. ஆனா நான் வெறும் வேலையை மட்டுமா செஞ்சேன். உன்னைக் கையில பிடிச்சும், உன் தங்கச்சியை தோளில் போட்டும் வளர்த்தேனே. பெத்தவ சும்மா இருந்தாலும் இந்தப் பாவி மனசு கேட்கலியே. ரம்பம் போட்டு மனசை அறுக்குதே. போதும்மா. உன் வீட்டில இனி நான் வேலை செஞ்சு பொழப்பு நடத்தினா அது பாவம். நான் இன்னையில இருந்து வேலையை விட்டு நின்னுக்கறேன். நீ வேற ஆளைப் பார்த்துக்க.''

''அன்னம்மா, அன்னம்மா'' என்று இளமதி அழைக்க அழைக்க திரும்பிப் பாராமல் சென்று விட்டாள், அந்த கிராமத்து வைரம். ரெங்கநாயகி சவமாய் வெளுத்த முகத்துடன் அப்படியே அமர்ந்து விட்டாள். இளமதியின் ஆறுதல் வார்த்தைகள் அவள் செவியில் விழவே இல்லை. அன்னம்மா பேசிய ஒவ்வொரு வார்த்தையும் சிலுவையாக அவள் இதயத்தில் ரணத்தை உண்டாக்கியிருந்தது.

அன்றைய பொழுதின் மாலையிலேயே சுவாதி வெளியேறிய செய்தி பழையதாகப் போனது. ஊரார்

அவரவர் வேலைகளில் ஈடுபட ஊர் திரும்பினாள் இளமதி. அவள் அழைப்பு மணியை அழுத்தும் முன்னரே கதவு திறந்தது. கனிவாய் பார்த்தபடி கோவிந்தன் நின்றிருந்தான். களைத்த முகத்துடன், நிறைந்த மனத்துடன் உள்ளே வந்தாள் இளமதி.

என்றுமில்லாமல் புதிதாய் பார்வை பார்க்கும் கணவனைப் பார்த்து,

''ஏதாச்சும் சமைக்கவா?'' என்றாள்.

''சாப்பாடே ஆச்சு. பிள்ளைகள் சாப்பிட்டு விட்டு தூங்கிட்டாங்க. நான் மட்டும்தான். சாப்பிடலை. உனக்காக காத்திருக்கேன். வா சாப்பிடலாம்.''

''ஹோட்டலில் வாங்கினீர்களா?''

''ஏன் நான் சமைக்கக் கூடாதா?''

''நீங்களா, உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?''

''அது என்ன பிரம்ம வித்தையா? பொம்பளைக்கு மட்டும் தெரிஞ்ச வேலையா? சமையல் கலைக்கு பிரசித்தி பெற்றவன் நள மகராஜன்கிற ஆம்பளைதான் தெரியுமில்ல?''

''நள மகராஜன் கதை கூட இவனுக்குத் தெரியுமா?' கண்ணகல இளமதி நிமிர்ந்து பார்க்க,

''படிக்காதவனுக்கு நளமகராஜன் கதை எப்படித் தெரியும்ன்னு நினைக்கறியாக்கும்'' என்றான் அவன்.

''ஐயோ அப்படியில்லை.''

''நானும் பத்தாவது வரை படிச்சவன்தான்ம்மா. டிகிரி படிச்சாத்தான் படிப்பா? ஒரு வீட்டுக்கு அஸ்திவாரம் தான்ம்மா முக்கியம். அது மாடி வீடாய் இருந்தாலென்ன? ஓட்டு வீடாய் இருந்தாலென்ன? எனக்குப் படிக்க



பிடிக்கும். மளிகை கடையில் வந்து பாரு. ஒரு ஷெல்ப் பூரா ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், அகிலன், புதுமைப் பித்தன், மௌனின்னு புத்தகங்களா அடுக்கி வைச்சிருப் பேன், நான் படிக்கிறதுக்காக.''

இலக்கிய ரசனை கொண்ட கணவன் பற்றி எதுவும் தெரியாமல் ஆறாண்டு காலம் குடும்பம் நடத்தி அவனது இரு குழந்தைகளுக்கு அன்னையும் ஆகி இருக்கிறாள். பொருந்தா திருமணத்தில், அவள் விரும்பாத திருமணத்தில் பலியானது அவள் வாழ்வா இல்லை அவன் வாழ்வா?

நீர் மல்கும் கண்களோடு நின்றிருந்த மனைவியை ஆழமாய் பார்த்தவன் கேட்டான்.

''என்னம்மா அப்படிப் பார்க்கிற?''

''உங்களைப் பத்தி எதுவும் தெரியாம வாழ்ந்திருக் கேனே.''

''அதுக்கா கண் கலங்கறே. பைத்தியம் உட்கார்ந்து பேசினால்தானே ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சுக்க முடியும்? உட்கார நம்ம ரெண்டு பேருக்குமே நேரம் இருந்ததில்லை. இரண்டு பேருமே உழைக்க வேண்டி இருந்துச்சு. இறக்கை கட்டி பறக்கணும்கிற கட்டாயம். உட்கார நேரமில்லாம போயிடுச்சே. இன்னைக்கு உன் தங்கையை காப்பாத்திட்டு வந்திருக்க. மனசில் இருந்த வேதனை போய் அமைதியாய் இருக்க. எத்தனை வருசம் கழிச்சு இந்த அமைதியைப் பார்த்திருப்ப? எனக்கு உன்கதை தெரியும்மா. நாம ரெண்டு பேரும் பிறந்து வளர்ந்தது ஒரே ஊரில் தானே. கண்ணுக்கழகா பெண் டாட்டி வந்திருக்கா. அவளைக் கண்ணுக்குள்ள வச்சுப் பார்க்கணும். நாமளும் பெரிய மனுசன் ஆகணும்கிற வெறியில் உழைக்கிறதில் குறியா இருந்தேனே தவிர

உன்கூட ஒரு நிமிசம் ஆறுதலா உட்கார்ந்து பேசறதில் குறியா இல்லாமப் போனேன். இன்னைக்கு எனக்கும் பேச நேரமிருக்கு. கேட்கிற உனக்கும் மனசு அமைதியா யிருக்கு. அதுதான் விசயம். வா சாப்பிடலாம்."

நீளமாகப் பேசியவனை நேசமுடன் பார்த்தாள் அவள். நெடுந்தூரம் வெயிலில் பயணம் செய்கின்றபோது வழியினில் இளைப்பாற நிழலும் பசியாற உணவும் கிடைத்தது போன்ற உணர்வு. பேச்சின்றி நின்றவளின் தலையை கோதிக் கொடுத்தான் கோவிந்தன். அந்தச் செயலில் நெகிழ்ந்தவர் அவன் மார்பினில் முகம் புதைத் தாள். மன நிறைவோடு. கோவிந்தனின் நெஞ்சம் குலுங்கி விட்டது. தொடுவானம் போன்று கிட்ட இருந்தும் எட்டாத தொலைவிலிருந்த மனைவியின் மனம் அவன் வசப் பட்டு விட்டதா? தொடுவானை அவன் எட்டித் தொட்டு விட்டானா? பிரேமையுடன் அவளைச் சுற்றி வளைத்தன அவனது கரங்கள். மௌனமே பாஷையாக வருடங்கள் கடந்து அன்னையும், தந்தையுமான அந்தத் தம்பதிகள் காட்டிய ஆழமான நேசத்தைக் கண்ட காலம் ஒரு வினாடி நெகிழ்ந்து நின்று பின் நகர்ந்தது.

## 14

**எட்டாத தொலைவில் நின்று - என் மனதை**
**வெட்டிச் சிரிக்கும் வட்டநிலா**
**கிட்டாது என்று தெரிந்திருந்தும் - தொடுவானத்தை**
**தொட்டு விடத் துடிக்கும் தூண்டிற் புழுவின் அவா**



நிற்காமல் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்த காரை அந்தப் பெரிய நகரத்தின் மையத்திலிருந்த ஹோட்டலின் முன் நிறுத்தினான். இளஞ்செழியன். பின் சீட்டின் பக்கம் மிக லேசாகத் திரும்பி.

"இறங்கு" என்றான் ஒற்றை வார்த்தையில். சுவாதி பதில் பேசாமல் இறங்கினாள். ஹோட்டலின் வாசலில் இருந்த கடையில் சில பொருள்களை வாங்கியவன் கவருடன் வந்து,

"வா" என்றான். சுவாதி அவனைப் பின் தொடர்ந்தாள். உள்ளே சென்று இடம் பார்த்து அமர்ந்தவன் அவளிடம் கவரைக் கொடுத்து,

"பாத்ரூம் அந்தப் பக்கமிருக்கு. போய் பல் தேய்த்து முகம் கழுவி விட்டு வா" என்றான்.

கவரை வாங்கிக் கொண்டு பாத்ரூம் சென்றவள் திறந்து பார்த்தாள். உள்ளே சிறு சோப்பும், பேஸ்ட், பிரஷ் இருந்தன. அவனது நுணுக்கமான கவனிப்பை நினைத்து ஆச்சரியப்பட்டவள். பல் தேய்த்து முகம் கழுவி திரும்பி னாள். ஈர முகத்தோடு இருந்தவளிடம் தன் கர்ச்சீப்பைக் கொடுத்து "துடைத்துக் கொள்" என்றான். அவள் முகத்தை துடைத்துக் கொண்டபின்,

"என்ன சாப்பிடுகிறாய்?" என்று கேட்டான்.

"ப்ச். ஏதோ ஒண்ணு" சிரத்தையில்லாமல் பேசின வளைப் பார்த்து புருவத்தை உயர்த்தியவன் தானே ஆர்டர் செய்தான். ஆர்டர் செய்தவை வந்ததும் தன் முன் வைக்கப் பட்ட தட்டுக்களை சுவாதி காலி பண்ணிய வேகத்தைக் கண்டதும் அவன் மனதில் இரக்கம் சுரந்தது.

'பசியோடு பட்டினிப் போராட்டம் நடத்தி இருக்கிறாள்' என்ற புரிதலில் மனம் இளகினான். அவனது நினைவில் நாராயணன் மாமா வந்தார்.

'என் கூடப் பிறந்தவன் ரத்தம்டா' கமலத்தின் குரல் காதுகளில் ஒலித்தது. சாப்பிட்டு முடித்ததும் புத்துணர்வு பெற்ற சுவாதி கை கழுவி வந்தாள். மீண்டும் காற்றைவிட வேகமாய் கார் பறக்க பயணம் தொடர்ந்தது. இரவு தொடங்கிய சமயம் கடல் போன்ற பங்களாவினுள் கார் நுழைந்தது. வாசலிலேயே நின்றிருந்த கமலம் வரவேற்றாள்.

"வாம்மா சுவாதி. உள்ளே வா. இனிமேல் இதுதான் உன் வீடு."

அன்போடு அவள் அழைக்க குழப்பமாய் பார்த்தபடி இளஞ்செழியனின் பின்னால் சென்றாள் சுவாதி. ஆனால் அவனோ அவளைத் திரும்பியும் பாராமல் மாடிப்படியேறி மறைந்தான். திக்குத் தெரியாத காட்டில் தொலைந்து போன குழந்தையாய் விழித்துக் கொண்டு நின்றிருந்தவளின் அருகே வந்தாள் கமலம்.

"என்னம்மா மலைத்துப் போய் நிற்கிறே?" என்றாள்.

"இது யார் வீடு? நீங்கள் யார்?"

"இது எங்கள் வீடு. நான் இளஞ்செழியனின் தாய்."

"இளஞ்செழியன் யார்?"

கமலம் ஆச்சரியப்படவில்லை. மகன் குணம் அவள் அறியாததா?

"இப்போ உன்னைக் கூட்டி வந்தானே ஒரு பிடிவாதக்காரன். அவன் பெயர்தான் இளஞ்செழியன்."

அவன் பெயர் இளஞ்செழியனா? அவன் வீட்டிற்கு ஏன் அவளை அழைத்து வந்திருக்கிறான். அவனது தாய் வேறு அன்போடு வரவேற்கிறார். இளமதியின் மேல் அவன் கொண்டிருந்த காதலை தெரிந்தவர்களோ, அதனால்தான் அவளது தங்கையென்பதால் ஆதரிக்கிறார்களா? பெரிய



பணக்காரர்களாய் தெரிகிறார்கள். அவளைக் காப்பாற்றியவர்கள் அப்படியே ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்தால் வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலில் சேர்ந்து கொள்ளலாம். நொடிப் பொழுதில் ஆயிரம் எண்ணங்கள். மனதில் தோன்ற கமலத்தை ஏறிட்டாள்.

"என்னம்மா. என்னமோ கேட்க நினைக்கிற போல சும்மா கேளு."

"எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்க முடியுமா?" டிகிரி படிச்சிருக்கேன். கம்ப்யூட்டர் தெரியும்?"

"வேலை தானே வாங்கிக் கொடுத்தால் போச்சு. அருமையான வேலை ஒன்று உனக்கு ஏற்பாடு பண்ணி வச்சிருக்கேன். காலையில் இருந்து அந்த வேலையில நீ சேர்ந்துரலாம். இப்ப குளிச்சுட்டு எங்க மாலதியோட துணி ஏதாவது இருக்கும். எடுத்துத் தாரேன். மாத்திக்கிட்டு வா சாப்பிட்டுத் தூங்கலா என்ன."

"மாலதியோட துணியா?"

"மாலதி தெரியாது? என் மக வயிற்றுப் பேத்தி கடலூரில் ஒரு கல்யாணத்தில உன்னைப் பார்த்தாளாமே என்கிட்ட சொன்னா இப்ப கொஞ்ச நேரத்தில அ அம்மா அப்பாகூட வந்திடுவா. அவ துணிமணி இங்கே எப்பவும் ரெண்டு செட் இருக்கும். அதுல ஒண்ணை எடுத்துப் போட்டுக்க."

பேசியவாறே, கமலம் எடுத்துக் கொடுத்த துணிகளை வாங்கிக் கொண்டவள் குளித்து முடித்துச் சாப்பிட்டாள். கை கழுவும்போது முன்னறையில் சத்தம் கேட்டது எட்டிப் பார்த்தாள். ஏழெட்டுத் தலைகள் தெரிந்தன. திரும்பி பார்த்த கமலம் எழுந்து வந்தாள்.

"ஊரிலிருந்து என்னோட பெண் குடும்பத்தோட வந்திருக்காங்கம்மா. வா உனக்கு ரூமைக் காட்டறேன் தூங்கு."

"விருந்தாளிகள் வந்திருக்கும்போது நான் வேற உங்களுக்குத் தொந்தரவா வந்திருக்கேன்."

தயங்கியவாறு சுவாதி கூற அவளைத் திரும்பிப் பார்த்த கமலம் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். 'விருந்தாளிகளின் வரவே உனக்காகத்தான் பெண்ணே' என்று நினைத்துக் கொண்டவள்,

"அதெல்லாம் தொந்தரவு இல்லைம்மா நீ போய் தூங்கு" என்றாள்.

படுக்கையில் படுத்த சுவாதி கண்களை மூடிக் கொண்டாள். ஏதோ ஒரு பாதுகாப்பான அடைக்கலம் கிடைத்திருப்பதாய் அவளது உள்ளுணர்வு உணர்த்த வருடங்கள் கடந்து அந்த சின்னஞ்சிறு கிளி அமைதியாய் உறங்க ஆரம்பித்தது. உறக்கத்தில் கனவு வந்தது. கனவில் காதுகளில் தண்டட்டி ஆட அகிலாண்ட ஈஸ்வரி வந்தாள். "நாராயணன் பெத்த நாதியத்த கழுதைக்கு நிம்மதியான தூக்கமா" என்றாள்.

ரெங்கநாயகி "அக்கா சொன்னதைக் கேட்டில்ல எழுந்திருடி" என்றாள். அவர்கள் இருவரையும் தள்ளிவிட்ட இளமதி, "பயப்படாதே சுவாதி. உனக்கு நானிருக்கிறேன். என் உயிரைக் கொடுத்தாவது உன்னைக் காப்பாற்றுவேன். பயப்படாமல் எழுந்திரு" என்றாள்.

சுவாதி படக்கென்று கண் விழித்துப் பார்க்க அருகில் கமலம் நின்று கொண்டு,

"எழுந்திரும்மா சுவாதி" என்று எழுப்பிக் கொண்டிருந்தாள். பதறி எழுந்த சுவாதி மணியைப் பார்த்தாள்.



"இன்னும் விடியலைம்மா. விடிவதற்குள் கோவிலுக்குப் போகணும். அதுதான் எழுப்பி விட்டேன். போய் குளித்து விட்டு வா."

குளித்து விட்டு வந்தவளுக்கு உடுத்திக் கொள்ள புதுப் பட்டுப் புடவை கொடுக்கப்பட்டது.

"இது எதற்குங்க. சாதாரணமாய் ஏதாவது சுடிதார் இருந்தால் கொடுங்கள்."

"கோவிலுக்கு பட்டுப் புடவைதான் கட்டிக்கிட்டுப் போகணும்மா. அதுவும் இன்றைக்கு கட்டாயமாய் நீ பட்டுப் புடவைதான் கட்டிக் கொள்ள வேண்டும்."

புதிராக சிரித்தபடி அவள் வற்புறுத்த தயக்கத்துடன் சுவாதி கட்டிக் கொண்டாள். அவளது தலையை வாரி பின்னலிட்டு பூவை சூட்டி விட்ட கமலம்.

"இது என்னம்மா பெட்டி" என்று இளமதி கொடுத்த நகைப் பெட்டியை காண்பித்து வினவினாள்.

"என் அக்கா கொடுத்த நகைகள்ம்மா."

"இங்கே கொடு. அதை போட்டு விடுகிறேன்" என்று அவற்றை அணிய வைத்தாள்.

"எனக்கு இந்த அலங்காரங்களில் எல்லாம் இப்போது ஆர்வமில்லைங்க. எனக்கு முதலில் ஒரு வேலை கிடைக்கணும். அந்த எண்ணம் மட்டும்தான் மனதில் இருக்கு. இதெல்லாம் எதற்கு..." தன்னை குனிந்து பார்த்துக் கொண்டு சுவாதி கூற,

"எல்லோரும் நிறைய நகை போட்டு பட்டு உடுத்தி வரும்போது நீ சாதாரணமாய் நிற்கலாமா?"

"நீங்கள் எல்லாம் குடும்பத்தோடு கோவிலுக்குப் போகும்போது நான் எதற்கு தேவையில்லாமல்..."

"நீதானம்மா முக்கியத் தேவை" அவள் புதிராக மீண்டும் சிரித்தாள்.

"என் வேலை விஷயமா... நைட் நான் சொன்னேனே..."

"அதுக்கும்தான கோவிலுக்குப் போறோம்."

"எதுக்கு?"

"அதுதான் வேலை கேட்டியில்ல. உனக்கு வேலை போட்டுக் கொடுக்கத்தான் கோவிலுக்குப் போறோம்."

"புரியலயே."

"எல்லாம் போகப் போக புரியும் வா."

வாசலில் நின்ற கார்களில் ஒன்றில் பெரியவள், ஓரமாய் ஒடுங்கி அமர்ந்தாள் அருகே கமலம் ஏறிக் கொள்ள மற்றவர்கள் மற்ற கார்களில் ஏறிக் கொண்டனர். அணி வகுத்துச் சென்ற கார்கள் பெருமாள் கோவிலில் நுழைந்தன. அடுத்த சில நிமிடங்களில் அவள் எதிர்பாராமல் இளஞ் செழியனுடன் அவளது திருமணம் முடிந்திருந்தது. திருமணத்தை முறையாய் பதிவு செய்த பின் நட்சத்திர ஓட்டலில் விருந்து சாப்பிட்டு விட்டு எல்லோரும் வீடு திரும்பினர். 'நடப்பவை கனவா அல்லது நனவா' என்று அறியாத பிரமிப்புடன் செலுத்தப்பட்ட இயந்திரப் பார்வையாய் சுவாதி ஆரத்தி எடுத்து முடித்த பின் உள்ளே நுழைந்தாள். பூஜை அறைக்கு அவளை அழைத்துச் சென்ற கமலம் தீப்பெட்டியை அவள் கையில் கொடுத்து "விளக்கேற்றும்மா" என்றாள் பரிவுடன். விளக்கேற்றி வணங்கி எழுந்தவளின் பார்வை தெய்வத் திருவுருவங்களின் அருகே மாட்டப்பட்டிருந்த படங்களின் மீது விழுந்தது.

"உன் மாமனாரையும் அப்பாவையும் கும்பிட்டுக்கம்மா."



"அப்பாவா" வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் சுவாதி.

இளஞ்செழியன் தகப்பனார் படத்தின் அருகே நாராயணனின் படமும் மாட்டப்பட்டு இரண்டு படங்களுக்கும் மாலை போடப் பட்டிருந்தது.

"அப்பாவின் படம் இங்கே... எப்படி?" அவள் தடுமாறி பேச கமலம் கண் கலங்கினாள். "என் ஒரே உடன் பிறப்பம்மா அவன்" சுவாதி அதிசயமாய் அவளைப் பார்த்தாள். "அப்போ... நீங்க... நீங்க."

"உன் அத்தைடாம்மா" கமலம் ஆதரவாய் கைகள் நீட்ட அந்த கைகளுக்குள் பாய்ந்த சுவாதி கதறி அழுகலானாள். ஆக அவளைக் காப்பாற்றி வாழ்க்கை கொடுத்திருப்பது அவளது அத்தையின் குடும்பம். அத்தையின் மகன்தான் இளமதியை விரும்பி சுவாதியை திருமணம் செய்து கொண்டு இருக்கிறான். "அப்பா நன்றி அப்பா" செத்தும் கொடுத்தான் சீதக்காதிம்பாங்க. நீங்க செத்தாலும் உங்க இரத்தத்தை விட்டு என்னைக் காப்பாற்றி விட்டீர்களே அப்பா அப்பா." அந்த சின்ன பெண் கேவிக் கேவி அழுதாள். அவளுடன் சேர்ந்து அழுத கமலம் சட்டமிட்டிருந்த கண்ணாடியில் சிறைப்பட்டிருந்த நாராயணனின் படத்தை நிமிர்ந்து பார்த்தாள். எப்போதும் ஏக்கம் இழையோடிக் கொண்டிருந்த அந்தக் கண்களில் இன்று நிம்மதி இழையோடுவதாகத் தோன்றியது. 'தம்பி கவலைப்படாதேடா. உன் பெண்கள் இருவரும் நல்ல இடத்தில் அடைக்கலமாகி விட்டார்கள். இனியாவது உன் ஆத்மா சாந்தியடையட்டும்' என்று அந்த சகோதரியின் பாசம் நிறைந்த நெஞ்சம் எங்கோ காற்றில் கலந்து நிற்கும் நாராயணனின் ஆத்மாவிடம் கூறியது.

# 15

**மேகத்திலே மையெடுத்து நிலவினிலே நானெழுதி**
**காற்றோடு தூது விட்ட என் காதல் கவி போனதெங்கே?**
**தொடும் வானின் சுடும் மனத்தை தொட்டுவிட முடியாமல்**
**தோற்றுவிட்ட சோகத்தில் காற்றோடு அவை**
**கலந்தனவோ?**

மென்மையான நறுமணம் கமழ்ந்து வர பத்தி எரிந்து கொண்டு இருந்தது. அந்த நறுமணத்தின் ஆளுகை அந்த அறையெங்கும் நிறைந்து இருந்தது. மூடிய கதவின் முன் தயங்கி நின்றாள் சுவாதி. அவளது முகம் பார்க்காமல் தன் முகம் திருப்பிக் கொண்டான் இளஞ்செழியன். செய்வது அறியாது சுவாதி திகைத்து நிற்கையில் இளஞ்செழியன் அவளை மெதுவாக திரும்பிப் பார்த்தான்.

''உன் கூடப் பேசணும் வா.'' வந்தாள்.

''உட்காரு.'' உட்கார்ந்தாள்.

''உன்னை ஏன் நான் காப்பாற்றிக் கூட்டி வந்தேன் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு தெரியும்மா?'' தெரியா தென்று தலையாட்டினாள்.

''இளமதிக்காக. இளமதி கேட்டுக்கிட்டாள் சும்மா இல்லை. எனக்கு பிச்சை போடுங்கன்னு கேட்டாள். எனக்கு தாங்கலை. அவள் கேட்டதை செய்துட்டேன். எனக்கு கல்யாண வாழ்க்கையில விருப்பம் கிடையாது. என்னை எந்த வகையிலும் நீ டிஸ்டர்ப் பண்றதை நான் விரும்ப மாட்டேன். ''சுயமரியாதையுடன் சோறு'' அப் படின்ற கொள்கை வச்சிருந்தாயா ம், தாலி கட்டி கடைசி



வரை சோறு போடுன்னு உங்க அக்கா கேட்டுக்கிட்டா. அதைச் செய்திட்டேன்.''

சுவாதியின் தன்மானத்தை குத்தித் தின்றன இந்த வார்த்தைகள். சோறு போடுகிறானாமா? இவள் இவனிடம் கையேந்தி நிற்கிறாளா? பிச்சை கேட்டாளா? அகிலாண் டேஸ்வரி செய்த அவமானத்திற்கு இவன் செய்யும் அவ மானம் எந்த விதத்தில் தாழ்ந்ததாக இருக்கப் போகிறது?

''அக்கா கேட்டா தாலி கட்டிடுவீங்களா?''

''வேற யார் கேட்கணும்?''

''நான் கேட்கணும். நான் உங்கக்கிட்ட கேட்டேனா. சொல்லுங்க. நான் உங்கக்கிட்ட பிச்சை போடுங்கன்னு கேட்டேனா.''

''இப்ப என்ன சொல்றே. உன்னைக் காப்பாத்தினது தப்புங்கிறாயா?''

''எனக்கு தாலி கட்டினது தப்புங்கறேன். எதை வேண்டு மானாலும் பிச்சை போடலாமுன்னு நீங்க நினைச்சுட்டீங்க போல. பணக்காரர் இல்ல. ஆணவம் இருக்கத்தான் செய்யும்.''

''நான் ஆணவக்காரனா இல்லையான்னு நீ சொல்லி நான் தெரிஞ்சுக்கணும்கறது இல்லை. உன்னிடம் சர்டிபி கேட் நான் கேட்கவில்லை. உன்னைக் காப்பாத்தினா போதும் வேற மாப்பிள்ளை பார்த்துக் கட்டிக் கொடுத்திட லாம்னுதான் அம்மாகிட்டே சொன்னேன். அவங்க கேட்கவில்லை. கையெடுத்துக் கும்பிட்டாங்க. அங்கே இளமதி. இங்கே அம்மா. வேறு வழியில்லாம...?

''வேறு வழியில்லாம...? சொல்லுங்க எனக்கு வாழ்க்கை கொடுத்திருக்கீங்க சபாஷ். இதுக்குத்தானே இந்த சுவாதி இத்தனை நாள் காத்திருந்தாள்.

"இதுக்குத்தானே இத்தனை பாடுபட்டா வீட்டை விட்டு வெளியேறி முன்னே பின்னே தெரியாத உங்களோட வந்து அடிமை வாழ்க்கையில இருந்து தப்பிக்க அவமானத்திலிருந்து தப்பிக்க."

"இப்போதான் தப்பி விட்டாயே அப்புறமென்ன?"

"ஹூம் நான் தப்பிக்கவில்லை. என்னிடம் விவரமாய் நீங்கள் பேசியிருக்கலாம்."

"பேசியிருந்தால்."

"வழி சொல்லியிருப்பேன். எனக்குத் தேவை விடுதலைதான். கல்யாண வாழ்க்கையில்லை என்பதை புரிய வைச்சிருப்பேன். தாலிக் கயிறு பிச்சைப் போடும் விஷயமில்லைன்னு எடுத்துச் சொல்லியிருப்பேன். கடன்பட்ட வாழ்க்கை எனக்கு வேணாமுன்னு நானும் கையெழுத்து போட்டிருப்பேன்."

"நல்லது. இப்போது நீ எடுத்திருக்கும் முடிவிலிருந்து மாறி விடாதே. 'தாலி மட்டும் கட்டு. பிடித்தால் வாழ்க்கை நடத்து. இல்லாவிட்டால் விட்டுவிடு. கடைசி வரைக்கும் அவ என் மருமகளா வாழ்ந்திட்டுப் போகட்டும்'ன்னு அம்மா சொன்னாங்க. அவங்க சொன்னது போல நீ அவங்க மருமகள் மட்டும்தான். எனக்கு உறவில்லை. நினைவிருக்கட்டும்."

"நீங்களும் இப்போது நான் சொல்வதை நினைவில் வைத்துக் கொள்ளுங்க. கடைசி வரைக்கும் நான் உங்க அம்மாவின் மருமகள்தான். உழைத்து சம்பாதிக்கணும். அந்தப் பணத்தில் உட்கார்ந்து சாப்பிடணும்னுதான் என் குறிக்கோளாய் இருந்தது. இங்கே வந்தவுடனே உங்க அம்மாகிட்டே எனக்கு வேலை வாங்கிக் கொடுங்கன்னு தான் கேட்டேன். அவங்க விடிந்ததும் வேலை வாங்கித்



தரேன்னாங்க. இப்ப மருமகள் வேலையைத் தந்திருக்காங்க. இந்த வேலையை நான் சிறப்பா செய்வேன். நான் சாப்பிடும் சாப்பாட்டிற்கு என்னால் முடிந்த வேலையை செய்து விடுவேன். இங்கே நான் சாப்பிடும் சாப்பாடு நீங்கள் போடும் பிச்சையாக இருக்காது. என் உழைப்பிற்கான சம்பளமாய் இருக்கும். எனக்கும் நீங்கள் எந்த உறவுமில்லை. குட்நைட்."

அவனுக்கு முதுகு காட்டிப் படுத்தவள் அன்றிலிருந்து அவனைப் புறக்கணித்தாள்.

இளமதி பஸ்ஸில் இருந்து இறங்கியதும் அருகில் இருந்த பெட்டிக் கடையைப் பார்த்தாள்.

'ஹீரோ ஹோண்டா' வண்டியில் ஆரோகணித்து அவளுக்காக காத்திருந்த கோவிந்தன் அவளைப் பார்த்ததும் உல்லாசமாய் சிரித்தான். அவனது சிரிப்பிலிருந்த உல்லாசம் அவளையும் தொற்றிக் கொள்ள பதிலுக்குச் சிரித்தவள், வண்டியில் ஏறி அமர்ந்தாள். வண்டியை ஓட்டிக் கொண்டே கோவிந்தன்,

"தில்லானா மோகனாம்பாள் படம் போட்டிருக்காங்க போல. இந்தத் தியேட்டரில் போஸ்டரைப் பார்த்தியா" என்றான்.

கடந்து போய்க் கொண்டிருந்த அந்த தியேட்டரைப் பார்த்தவள்,

"இந்தப் படம் உங்களுக்குப் பிடிக்குமா?" என்று கேட்டாள்.

"ரொம்பப் பிடிக்கும். இன்னைக்கு நைட்ஷோ வரலாமா?"

"என் வீட்டில் வி.சி.டி. இருக்கே. போட்டுப் பார்க்கலாம். கேசட் வாங்கிட்டு வாங்க."

''இல்லை இளமதி அது எனக்குப் பிடிக்காது. படம் பார்க்கன்னு தியேட்டருக்குப் போகிற சந்தோசமே தனி. அதுவும் பிடிச்ச படத்தை எனக்குப் பிடிச்சவளோடு பார்க்கிற சந்தோசம் இன்னும் ஸ்பெஷல்.''

''பிள்ளைகள் தூக்கம் கெட்டுப் போகுமே.''

''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே. ஒரு நாள் தூக்கத்தை எனக்காக தியாகம் பண்ணு'' என்றபடி அவளைத் திரும்பிப் பார்த்தவனின் கண்களில் கெஞ்சல் இருந்தது. அதைத் தாங்காத இளமதி,

''சரி போகலாம். அதுக்காக கெஞ்சணுமா?'' என்றாள்.

''என் பெண்டாட்டி கிட்டத்தானே கெஞ்சறேன்.''

''போதும் வழிந்தது. ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க. வண்டியோட்டும்போதுதான் காதல் பண்ணத் தோணுமா?''

''வேற எப்போ நமக்கு காதல் பண்ண நேரம் கிடைக்குது?''

'ஆமாம் நேரமே கிடைக்கலை' வாய்க்குள் இளமதி முணுமுணுக்க.

''என்னடி முணுமுணுக்கிற'' என்றான் கோவிந்தன். அந்த அழைப்பு தந்த நெருக்கத்தில் சிலிர்த்த இளமதி.

''உங்களுக்கு கொழுப்பு கூடிருச்சு'' என்றாள்.

''ஆமாம்டி. பத்து கிலோ கூடிட்டேன். என் பெண்டாட்டியை கொஞ்சகிற சந்தோஷத்தில்.''

''வீடு வந்திருச்சு காதல் மன்னா. வண்டியை நிப்பாட்டுங்க.''

கதவைத் திறந்த இளமதி கதவின் கீழ்ப்புறம் தள்ளப் பட்டிருந்த கடிதத்தைக் கையில் எடுத்தாள். பின்னாலேயே வந்த கோவிந்தன்,



''யாரு எழுதியிருக்கிறது?'' என்றான்.

''தெரியலை. கடிதத்தை பிரிச்சுப் படிங்க. நான் உங்களுக்கு டீ போடறேன்.''

''டீ அப்புறம் போடலாம். கடிதம் சென்னையிலிருந்து வந்திருக்கு. சுவாதி எழுதியிருக்கும்னு நினைக்கிறேன் படி.''

அவசரமாய் கடிதத்தை வாங்கிய இளமதி பிரித்துப் படித்தாள். கமலம் எழுதியிருந்தாள்.

*அன்புள்ள மருமகள் இளமதிக்கு,*

*நலமா? இங்கு நாங்கள் நலம். சுவாதியும் உடலளவில் நலமாக இருக்கிறாள். மனதளவில்? அது கேள்விக்குறியாக உள்ளது. செழியனின் நிலையும் அதுதான். உடைந்த கண்ணாடியாக இவர்களது வாழ்க்கை ஒட்டாமல் போய் விடக் கூடாது. என்ன செய்யலாம்? ஏதாவது செய்ய வேண்டுமே. யோசி. நீ என் தம்பியின் அமைதியையும் நிதானத்தையும் பரிசாக எடுத்துக் கொண்டவள். சுவாதி அவனது ரோசத்தையும் சுயமரியாதையையும் பரிசாக எடுத்துக் கொண்டிருக்கிறாள். செழியனின் பாரா முகத்தை இவள் எறெடுத்தும் பார்க்காமல் காலத்தை ஓட்டுகிறாள். விதி விட்ட வழி என்று நம்மால் இருக்க முடியுமா? முடிவு சொல்.*

*உன் அன்பு அத்தை*

*எம்.கமலம்*

இளமதி கடிதத்தை மீண்டும், மீண்டும் படித்தாள். முகத்தில் சிந்தனைக் கோடுகள். ஓட மௌனமாக கண்

மூடி யோசித்துக் கொண்டிருந்தவள் நாசியைத் துளைத்த டீயின் மணத்தில் கண் விழித்தாள். முன்னாடி டீ டம்ளரை நீட்டியபடி கோவிந்தன் நின்றிருந்தான். மனம் நெகிழ்ந்த இளமதி அவனையே பார்த்தாள்.

''என்ன பார்வை உந்தன் பார்வை...'' பாடலாகக் கேட்டான் கோவிந்தன்.

''நான்தான் வந்து டீ போடறேன்னு சொன்னேனில்ல. அப்பறமும் நீங்க ஏன் போட்டீங்க.''

''ஏய்... ஸ்கூல்ல இருந்து களைச்சுப் போய் வந்திருக்கே.''

''நீங்க மட்டும் கடையில உட்கார்ந்து காலை ஊஞ்சல்ல தூங்கிட்டு வர்றீங்களா. அது களைப்பாய் இருக்காது.''

''லெட்டர் படிச்சவுடனே யோசனையாய் உட்கார்ந்துட்டே பார்த்தேன். என் பொண்டாட்டிக்கு ஏதோ புது பிரச்சனை வந்திருக்குன்னு புரிஞ்சுக்கிட்டு டீ போட்டுக் கொண்டு வந்துட்டேன். குடிச்சிட்டு தெம்பா யோசி. நான் கடைக்குக் கிளம்புறேன்.''

''என்னங்க'' இளமதி தளர்வான குரலில் அழைத்தாள்.

''சொல்லுங்க'' கெஞ்சலான குரலில் கோவிந்தன் பதிலுரைத்தான்.

''நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''இப்போதேவா கடையடைச்சிட்டு வந்தப்புறம் பேசிக்கலாமா?''

''நைட் ஷோ போகணும்னீங்களே.''

''நாளைக்குப் போனாப் போச்சு.''



''இல்லைங்க யாருக்காகவும் எதுக்காகவும் நம்ம புரோகிராமை கேன்சல் பண்ண வேணாம். எனக்கும் ராத்திரி வரை காத்திருக்கப் பொறுமை இல்லை. இன்னும் கொஞ்சம் நேரம் கடைப் பையனே பார்த்துக்கட்டுமே எனக்கு இப்போதே உங்ககிட்டப் பேசணும்.''

பிடிவாதமாகப் பேசியவளின் முகத்தை உற்றுப் பார்த்தான் கோவிந்தன். அமைதியாய் எதிரே அமர்ந்து ''சொல்லு'' என்றான். இளமதி கடிதத்தைக் கொடுத்தாள். அவன் படித்து முடித்ததும் கலங்கிய விழிகளோடு அவளது முகத்தைப் பார்த்தான்.

''என்னம்மா கண் கலங்கறே. என்ன விஷயம் சொல்லு.''

''இளஞ்செழியனைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் பட்டே முடியலை. என்னைக் கட்டிக்க வேண்டியதாப் போச்சு. இப்ப இளஞ்செழியன் சுவாதியை கல்யாணம் கட்டிக்கிட்டும் உன்னை நினைச்சுக்கிட்டு அது கூட வாழப் பிடிக்காம இருக்கிறார். இது தானேம்மா விஷயம்?''

இளமதியின் கலங்கிய விழிகளில் முதலில் அதிர்ச்சி தெரிந்தது. பின்னர் ஆச்சரியம் தெரிந்தது. கடைசியில் காதல் தெரிந்தது.

''தெரியுமா? உங்களுக்குத் தெரியுமா?'' கண் மூடி ஆமோதித்தான்.

''தெரியும் ஆனா லேட்டாத் தெரியும். முதல்லேயே தெரிஞ்சிருந்தா...'' தெரிஞ்சிருந்தா?''

''உங்களை சேர்த்து வைச்சிருப்பேன். ஆனா... இப்ப அதைப் பத்திப் பேச்சு எதுக்கும்மா விட்டுடு. பேச்சுக்குக் கூட ஒன்னை மத்தவரோட இணைச்சுப் பேச என்னால் முடியலை. நீ என்னுடையவ. இப்போ நாம சுவாதி

வாழ்க்கையை சரி பண்றதைப் பத்தி யோசிக்கலாம் என்னம்மா நான் சொல்றது சரிதானே.''

''நீங்க எப்ப தப்பாச் சொல்லியிருக்கீங்க.'' இளமதி அவன் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள். அவளது தலைமுடியை நீவியபடி.

''நாம மெட்ராஸ் போகலாம்'' என்றான் கோவிந்தன் இளமதி தலையை உயர்த்தி ''போய்?'' என்றாள்.

''நான் இளஞ்செழியன் கிட்ட பேசுகிறேன். நீ சுவாதி கிட்ட பேசு.''

''நான் சுவாதி கிட்டப் பேசவேன். புத்தி சொல்வேன். அவளைத் திட்டக்கூட செய்வேன். ஆனா நீங்க எப்படி கமலத்தை மகன் கிட்டே பேசுவீங்க?''

''அதைப் பத்தி நீயேன் கவலைப்படறே. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''கடையை யார் பார்த்துக் கொள்வது?''

''அப்பாவுக்கு தகவல் சொல்லி விடறேன். அவர் வந்ததும் கிளம்பி விடலாம் நீ ஸ்கூலுக்கு லீவு சொல்லி விட்டு பிள்ளைகளுக்கும் லீவ் சொல்லி விட்டு வந்து விடு. நாளை மறுநாள் ராத்திரி கிளம்பலாம்.''

''சரி.''

''இப்போ கடைக்குப் போறேன். நைட் ஷோ உண்டு தானே?''

''உண்டு சார். நான் இப்பவே டிபன் வேலையை ஆரம்பித்து விடுவேன்.''

இளமதியிடம் கை ஆட்டிவிட்டு கோவிந்தன் கிளம்பிச் சென்றான். அவனது வண்டி தெரு முக்கில் திரும்பும் வரை பார்த்துக் கொண்டிருந்த இளமதி உள்ளே வந்தாள்.



சுவரில் மாட்டப் பட்டிருந்த அவர்களது கல்யாணப் போட்டோவின் மேல் அவளது பார்வை படிந்தது. கையில் எடுத்துப் பார்த்தாள். அழகிய இளமதியின் விழிகளில் உயிர் இல்லை. அருகிலிருந்த கோவிந்தனின் முகத்தில் ஒரு முரட்டு தீவிரம் தெரிந்தது. அது வாழ்க்கையை தன் வசமாக்கத் தெரிந்த தீவிரம். அன்புடன் கணவனின் படத்தில் ஒரு முத்தம் பதித்த இளமதி படத்தை சுவரில் மாட்டி விட்டு சமையல் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

## 16

**அதோ அந்த வான வில்லில் ஊஞ்சல் கட்டிய**
**என் கனவுகளின் அரியாசனம்**
**தொடுவானத்தை தொட வேண்டி**
**என் கற்பனைகளின் பயணம்**

''வாம்மா இளமதி. வாங்க தம்பி. குட்டிகளா பாட்டியை பார்க்க வர இப்போத்தான், உன் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் வழி தெரிஞ்சிருக்கு'' வாய் நிறைய சிரிப்போடு வரவேற்றாள் கமலம்.

''சுவாதி எங்கே அத்தை?''

''உள்ளே இருக்காள். சுவாதி இங்கே யார் வந்திருக் காங்க. வந்து பாரு.''

கமலம் அழைத்த குரலில் எட்டிப் பார்த்த சுவாதியின் கண்களில் ஆச்சரியத்தை வாங்கினாள். சேலை கட்டி இருந்தாள். முகத்தில் முன்னே காணப்பட்ட எதையோ தொலைத்து விட்ட சோகமும், படபடப்பும் மாறி சாந்தம்

குடி கொண்டிருந்தது. கண்களில் நீர் துளிர்க்க ஓடி வந்து தமக்கையை கட்டிக் கொண்டாள் சுவாதி.

''மாமா வாங்க வாங்க.''

''என்னடி மாமாவுக்கு மட்டும்தான் வாங்க, வாங்கன்னு வரவேற்பா? எனக்கு இல்லையா?''

கோவிந்தன் கேலியாகக் காலரை தூக்கி விட்டுக் கொள்ள அதிசயமாய் அதை பார்த்த சுவாதி,

''அட அக்காவுக்கு கிண்டலடிக்கத் தெரியுது. மாமாவுக்கு அதை ரசிக்கத் தெரியுது. நான் பார்ப்பது கனவா, நிஜமா?'' என்றாள்.

அவள் கையை இளமதி செல்லமாகக் கிள்ள,

''ஐயோ வலிக்குது. அப்போ நிஜம்தான். என்ன சொக்குப் பொடி போட்டிங்க மாமா?''

''சொக்குப் பொடி நான் போடலைம்மா. உன் அக்கா தான் எனக்குப் போட்டிருக்கா.''

''ஐயோ நீங்க வேற. அத்தை இருக்காங்க.'' இளமதி முகம் சிவந்து கோவிந்தனை அடக்கினாள். சுவாதி அதிசயத்தின் உச்சிக்கே போய் விட்டாள்.

''சுவாதி இளமதிக்கு மாடியில் தெற்கு பக்க ரூமைக் கொடு. குளிச்சுட்டு வந்ததும் அவங்க சாப்பிடட்டும். அதற்குப் பின்னால் அக்கா கிட்ட எவ்வளவு நேரம்ன்னாலும் பேசு'' என்று கமலம் கூறவும்,

''வந்தவங்களை குளிக்கக்கூட விடாமல் நிற்க வைத்து அசடு மாதிரி பேசிக்கிட்டு இருக்கேன். வாங்க மாமா, அஜய், பல்லவி வாங்க. அக்கா வா'' என்று கூறியபடி இளமதியின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு படியேறினாள். அவளைத் தொடர்ந்த இளமதி அவளை அன்புடன் பார்த்தபடி,



''உபசாரமெல்லாம் பலமாயிருக்கு. பேச்செல்லாம் பெரிய மனுஷி மாதிரி மாறிப் போயிருச்சு. என் சுவாதிக் குட்டிக்கு'' என்றாள்.

''நீதான்க்கா என்னை பெரிய மனுஷி ஆக்கியிருக்கே'' என்றாள் சுவாதி நன்றியுடன்.

''போடி'' என்று செல்லமாய் கோபித்த இளமதி குளிக்கச் செல்ல சுவாதி கீழே சென்றாள்.

சாப்பாட்டு அறையில் அனைவரும் சந்தித்துக் கொண்டனர். இளஞ்செழியன் கோவிந்தனை அருகே அமர வைத்துக் கொண்டு,

''வாங்க வியாபாரம் எப்படிப் போகுது?'' என்றான்.

''எப்போதும் போல் நல்லாப் போகுது'' என்றான் கோவிந்தன். இளமதி கமலத்தின் அருகே சென்று,

''சுவாதி எங்கே அத்தை. நீங்க பரிமாறிக்கிட்டு இருக்கீங்க. கொடுங்க. நான் பரிமாறுகிறேன். நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்கள். அஜய், பல்லவி பாட்டி பக்கத்தில் உட்காருங்க'' என்றபடி பரிமாறலானாள்.

கமலம் இளமதியைப் பார்த்து,

''நீயும் உட்கார்ந்து சாப்பிடும்மா'' என்றாள்.

''நான் சுவாதி கூட சாப்பிடுகிறேன் அத்தை.''

கமலம் கோவிந்தனின் அருகே அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தவள் அவனைப் பார்த்து,

''நீங்க இங்கே வந்திருக்கிறது எல்லோருக்கும் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''அப்பாவுக்கு மட்டும் தெரியும் பெரியம்மா. ஊரில் டூர் போயிருக்கிறதா சொல்லச் சொல்லியிருக்கிறேன்.''

"ஏன் இங்கே நீங்க வருவது உங்க ஊருக்குத் தெரியக் கூடாதா?" என்றான் இளஞ்செழியன் கோவிந்தனைப் பார்த்து.

"தெரிந்தால் என்ன ஆகப் போகுது. ஒண்ணும் ஆகப் போறதில்லை. சுவாதி வீட்டை விட்டு வந்த பின்னால ஒரு வாரத்துக்கு அகிலாண்டத்தை கத்திய கத்தில இளமதியின் அம்மாவுக்கு நெஞ்சு வலி வந்து ஆஸ்பத்திரியில வச்சுப் பார்த்தாங்க. இப்ப இளமதி இங்கே வர்றது தெரிஞ்சா இன்னொரு ரகளை கிளம்பிடாதா அதனால தான் சொல்லவில்லை."

"அதுக்காக எத்தனை நாள் ஒளிஞ்சு ஒளிஞ்சு நீங்க வர முடியும்?"

"அதுக்கு என்னங்க அதிக நாளா ஆகப் போகுது. காலா காலத்தில் நீங்க ஒரு குழந்தையைப் பெத்துட்டிங்கன்னா பேரக் குழந்தையைப் பார்த்து கோபம் ஆறிடப் போகுது" சாதாரணமாகக் கூறுவது போல் கோவிந்தன் கூற இளஞ்செழியனின் முகம் மாறிப் போனது. பதில் கூறாமல் எழுந்து கை கழுவச் சென்றவனின் முதுகை வெறித்துப் பார்த்த கமலத்தின் கண்கள் கலங்கியது. இளமதி கவலையுடன் கோவிந்தனைப் பார்க்க.

"இப்போத்தானே ஆரம்பிச்சிருக்கோம். சரி பண்ணிடலாம்" என்றான் அவன் ஆறுதலாக.

"சரி பண்ணிட முடியுமாப்பா" என்று கமலம் கேட்க.

"நிச்சயம் முடியும் பெரியம்மா. சரி பண்ணிட்டுத்தான் நானும் இளமதியும் ஊருக்குப் போவோம் சரியா" என்றான் அவன்.

"அது போதும்பா எனக்கு."



சாப்பிட்டு முடிந்ததும் கோவிந்தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு சென்றுவிட கமலமும் இளமதியும் பேச அமர்ந்தனர்.

"கடிதத்தைப் பார்த்ததும் நீ பறந்து வந்திடுவேன்னு எனக்குத் தெரியும் இளமதி. இருந்தாலும் நீ வரும் வரை தவிப்பாகவே இருந்தது."

"வராமல் எப்படி இருப்பேன் அத்தை. நான் இழுத்து வைத்த இழுவை தானே இது. சரி பண்ண வேண்டியது என் பொறுப்பாச்சே. என்னடா பிள்ளையார் பிடிக்கப் போய் ஆஞ்சநேயரா போச்சேன்னு மலைச்சுப் போயிட்டேன். அனுப் அப்பாதான் தைரியம் கொடுத்து கூப்பிட்டு வந்தார்."

"கோவிந்தனை நினைத்தால் பெருமையாவும் ஆச்சரியமாவும் இருக்கு. உன் வாழ்க்கை தப்பாப் போயிடுச்சேன்னு கவலைப்பட்டேன். அப்படி இல்லை. தங்கமான பிள்ளை கூடத்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்னு நினைக்கும்போது மனதுக்கு ஆறுதலா இருக்கு. உன் அப்பன் இருந்து இதைப் பார்க்காமப் போயிட்டான்."

"ஆமாம் அத்தை. மனதுக்கு நிறைவான வாழ்க்கையைத்தான் வாழ்ந்துகிட்டு இருக்கேன். உங்க மகன் தான் அவர் வாழ்க்கையை பாழடிச்சுக்கிட்டு இருக்கார்."

"அக்காவை விரும்பிட்டு தங்கையை எப்படிம்மா கட்டுவேன்னான். அடேய். சுவாதிக்கு தேவை விடுதலை தானே. நீ கல்யாணம் பண்ணி அந்த விடுதலையைக் கொடுத்தா என்னடா? தாலியை மட்டும் கட்டு. வாழச் சொல்லி கட்டாயப் படுத்தலை'ன்னு சொல்லி அவனைச் சம்மதிக்க வைத்தேன். அவன் அதை உடும்புப் பிடியாப் பிடிச்சிட்டான். கல்யாணம் ஆனா சரியாகிடும்ன்னு நினைச்சேன் சரியாகலையே."

"சுவாதி என்ன சொல்கிறாள்?"

"என்ன தம்பி சொல்லச் சொல்றே. நானா அவளை வழிக்குக் கொண்டு வர முயற்சி பண்ணி என்னம்மா பண்ண? இரண்டு கையும் தட்டினால்தானே சத்தம் வரும் ஒற்றையாய் தட்டி என்ன பண்ண? உன் தங்கை என் கூட ஒத்து வரணுமே. 'அத்தை எனக்கு பாதுகாப்பா ஒரு வீடு வேணும். மரியாதையோடு ஒரு வாய் சோறு வேணும்னு நினைத்தேன். அது கிடைத்திருக்கு. எனக்கு இது போதும் வேறு ஆசை எனக்கு இல்லை. அவரைக் கஷ்டப் படுத்தாதீங்க'ன்னு சொல்கிறாள். அவனுக்கு காபி கொடுக்கறதில் இருந்து சாப்பாடு போடுகிற வரை நானே தான் செய்கிறேன். பார்த்தாயில்லை. அவன் வீட்டில் இருந்தால் இவள் தோட்டத்தில் போய் உட்கார்ந்து கொள்கிறாள். இந்தக் கொடுமையை நான் எங்கு போய் சொல்ல?"

அலுத்துக் கொண்ட கமலத்தின் ஆற்றாமை புரிந்தது. தம்பிக்காக தன் மகளின் வாழ்வை முன்னிருத்த எந்தத் தாய் முனைவாள்? இந்தத் தமக்கை செய்து இருக்கிறாளே. "அம்மா" இளமதியின் நெஞ்சம் நெகிழ்ந்தது. "உங்களால் முடியா விட்டாலும் உங்கள் உடன் பிறப்பை வைத்து எங்களைக் காப்பாற்றி விட்டீர்கள்.'

இளமதி சுவாதியைத் தேடிச் சென்றாள். தோட்டத்தில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டே கோவிந்தனிடம் பேசிக் கொண்டிருந்தாள் அவள்.

"சின்னப் பிள்ளைகளோடு சரிசமமாய் இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறாயா? அனு, பல்லவி அப்பாகூடப் போய்த் தூங்குங்க. சுவாதி வா சாப்பிடலாம்."

"எதுக்குக்கா குழந்தைகளை விரட்டி விடுகிறாய்."



"நான் இன்னும் சாப்பிடவில்லை சுவாதி."

"சாரிக்கா வா சேர்ந்து சாப்பிடலாம்."

சாப்பிட்டுக் கொண்டே தங்கையைப் பார்த்தாள் இளமதி. "என்னடி எதுவும் பேசாம சாப்பிடுகிற?"

"என்னக்கா பேசற?"

"பேச எதுவுமே இல்லையா? அன்னைக்கு ஊரில் 'ஓடு'ன்னு சொன்னதும் ஓடினவளை இப்போது தான் பார்க்கிறேன். உனக்கு பேச எதுவுமே என்கிட்ட இல்லையில்லை. நீ மாறிட்ட சுவாதி."

"இல்லைக்கா நான் மாறவில்லை. அதே பழைய சுவாதியாகத்தான் இருக்கிறேன். இடம்தான் மாறி இருக்கிறது. வாழ்க்கை மாறவில்லை. நீ போட்ட பிச்சையில் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்."

"என்ன சுவாதி உளறுகிறாய்?"

"உளறவில்லை. அக்கா உண்மையைத்தான் சொல்கிறேன். கடன் பட்ட வாழ்க்கைதான் இது. காலம் பூராவும் உன்னிடம் கடன் பட்டு விட்டேன். சுயமரியாதையுடன் ஒரு வாய் சோறு வேண்டுமென்று ஆசைப்பட்டேன். பெரியம்மாவின் அடிமைத் தளையிலிருந்து கல்யாணம் என்ற பந்தம் என்னை விடுவித்து விடும் என்று கனவு கண்டேன்... இன்று என் கனவு பொய்த்து விட்டது. என் ஆசை மண்ணோடு மண்ணாகி விட்டது. நான் இறந்த பின்னும் எனது சாம்பலிலும் என் தோல்வி எழுதப்படப் போகிறது. நான் வாழ்வது வாழ்க்கையில்லை அக்கா."

"சரியாகச் சொன்னாய். நீ வாழ்வது வாழ்க்கையில்லை என்பதை தெரிந்து வைத்திருக்கிறாய். நீ கெடுத்துக் கொண்டிருப்பது உன் வாழ்க்கையை மட்டுமா? செழி

யனின் வாழ்க்கையையும் சேர்த்து கெடுத்துக் கொண்டிருக்கிறாய்.''

''அக்கா நான் என்ன செய்யட்டும்? இவர் என்னை காப்பாற்றியதோடு நின்றிருக்கலாம். கல்யாணம் பண்ணி கிட்டதுதான் தப்பு.''

''என்னடி தப்பைக் கண்டுட்ட. அவர் கிட்ட அழகில்லையா? படிப்பில்லையா? குணமில்லையா? ஏன் அவரை ஒதுக்குகிறாய்?''

''நான் ஒதுக்கவில்லை அக்கா ஒதுங்குகிறேன்.''

''அதுதான் ஏன்?''

''ஏன்னா அவர் மனதில் நீயிருக்கிறாய். உன் இடத்தில் அமர எனக்கு இஷ்டமில்லை.''

''ஆனால் சுவாதி. நான் கோவிந்தனின் மனைவி இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். அதை மறந்து விடாதே.''

''மறக்கவில்லை அக்கா. ஆனால் அவரும் உன்னை மறக்கவில்லையே. நீ கோவிந்தனின் மனைவி என்று எனக்குப் புரிந்தால் போதுமா? அவருக்குப் புரிய வேண்டாமா?''

''நீதான் புரிய வைக்க வேண்டும்.''

''என்னால் முடியாது.''

''உன்னால்தான் முடியும். உன் அன்பினால் அவரை வசப்படுத்து. அவர் மனதை உன் பக்கம் திருப்பு. நீதான் அவருடைய மனைவியென்று உணர்த்து.''

''அக்கா என்னை மன்னித்து விடு. அன்பு என்ற பெயரைச் சொல்லி அவர் காலடியில் விழ என்னால் முடியாது. அவர் உன்னைக் காதலித்தவர் இல்லை. இப்போதும்



உன்னைக் காதலிக்கிறவர். காதல் பிச்சை கேட்கப்பட வேண்டிய விசயமில்லை.''

''போடி முட்டாள். செழியன் தான் கானல் நீரை காவேரி நீர்ன்னு நினைத்துக்கிட்டு இருக்கார்ன்னா நீயுமா? பைத்தியக்காரி செழியன் இளமதியை காதலிக்கவில்லை. அவரோட அம்மாவின் தம்பி மகளை காதலித்தார். என்கிட்ட இருந்த எது அவரைக் கவர்ந்தது? என்னை காதலிக்க வைத்தது? என் அழகா? அறிவா? அடக்கமா? இது எதுவுமேயில்லை சுவாதி. நான் அவருடைய மாமன் மகள் என்ற சொந்தம்தான். அவரை என் மேல் அன்பு கொள்ள வைத்தது. அவர் என்னைப் பார்க்க வரும்போதே தான் கல்யாணம் பண்ணிக்க வேண்டிய தாய் மாமனின் மகளைப் பார்க்க வரும் நினைவோடு வந்தார். அங்கே இளமதி மூத்தவளா நின்னா காதலிச்சார். அதுவே சுவாதி மூத்தவளா நின்றிருந்தால் அவளைத்தான் காதலிச்சிருப்பார். அவருக்கு வேண்டியது அவருடைய மாமாவின் மகள். முதலில் என்னைப் பார்த்து பழகி விட்டதால் குழம்புகிறார். நீதான் அவரைத் தெளிய வைக்கணும். அதை விட்டு விட்டு நீயே குழம்பி நின்னா எப்படி சுவாதி.''

''அக்கா.''

''நீ இளமதியின் தங்கை என்பதால் மட்டும் அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலை. அத்தையோட கெஞ்சலுக்காகவும்தான் ஒத்துக்கிட்டார். உனக்கும், எனக்கும் இருக்கிற ஒரே தகுதி நாம் இரண்டு பேரும் அத்தையின் தம்பி மகள்கள். அந்த ஒரு காரணத்தால் மட்டும் தான் இந்த மாளிகைக்கு நீ மகாராணியாக நின்று கொண்டிருக்கிறாய். அத்தை மூத்தவளான என்னை

பெண் கேட்டாங்க. முடியலை. சமயம் பார்த்து இளைய வளான உன்னை கட்டியிருக்காங்க. இதில் சொந்தத் திற்குத்தானே இடமிருக்கு. அவமரியாதைக்கு எங்கே இடமிருக்கு.''

சுவாதி சிந்தித்தாள். திருமணம் முடிந்ததும் அத்தை 'உன் பெண்ணை காப்பாத்திட்டேண்டா தம்பி' என்று தந்தையின் படத்தின் முன் அழுதது நினைவு வந்தது. இரும்பு இளகுவதை கண்டு கொண்டாள் இளமதி. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க ஆரம்பித்தாள்.

''இளமதியை கோவிந்தனின் மனைவின்னுதான் சொல்வாங்க. உன்னைத்தான் இளஞ்செழியனின் மனைவின்னு சொல்வாங்க. அத்தை நம்ம அப்பாவுக்காக உன்னை அவங்க மகனுக்கு கட்டி வைத்தாங்களே. நீ அந்த அத்தைக்காக உன் உரிமையை நிலை நாட்டக் கூடாதா? நீ வேறு எதுவும் செய்ய வேணாம். இந்த காபி கொடுக்கிறது. சாப்பாடு போடுகிறதுன்னு சின்னச் சின்ன வேலைகளை உன் புருசனுக்கு செய்யக் கூடாதா? வயதான காலத்தில் உன்னை வாழ வைத்த அத்தையை வேலை வாங்க விடலாமா?''

''அக்கா நான் இந்த வேலைகளை மட்டும்தான் செய்வதில்லை. மற்ற வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்கிறேன்.''

''மற்ற வேலைகளைச் செய்ய ஆளில்லாத வீடா இது? காபியை போட்டு வைப்பதில் பெருமையில்லை. அதை உன் கையில் எடுத்துக் கொண்டு போய் உன் புருசனிடம் கொடுப்பதில்தான் பெருமை. இந்த வீட்டில் சமையலுக்கு ஆள் இருக்கிறது. சமைத்ததை எடுத்து உன் புருசனுக்கு பரிமாற ஆள் வைக்கக் கூடாது. வீட்டு வேலைகளை



வேலையாள்கள்தான் செய்யணும். ஆனால் கட்டின புருசனுக்கு வேலையாளை வேலை செய்ய விட்டா வம்பு தான் பேசுவாங்க. நீ அதுக்கு இடம் கொடுக்காம இருக்கக் கூடாதா? வீட்டில் வேலை செய்கிறவர்கள் நாலு விதமா பேசினால் அந்த வயதான மனுசி மனசு கஷ்டப்படாதா?''

இளமதி கரைத்தாள். சுவாதி கரைந்தாள். மனைவியின் மந்திர ஆலோசனை வெற்றி பெற ஆரம்பிக்க கணவனும் தனது முயற்சியை ஆரம்பித்தான்.

## 17

கானோடு கனியுறங்க, கவியோடு கவிதையுறங்க,
வானோடு நிலவுறங்க, வையகமே சேர்ந்துறங்க
உன்னோடு நானுறங்க ஊனுருகி தவம் செய்தேன்
என்னோடு நீயும் வந்தால் தொடுவானம் தொட்டு
விடுவேன்

தோட்டத்தில் தனியாக உலவிக் கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

''தோட்டத்தில் தனியா யோசனை பண்ணிக்கிட்டு இருக்கீங்க போல'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

கோவிந்தன் நின்று கொண்டிருந்தான்.

''சும்மா நடந்து கொண்டிருந்தேன். வாங்க உட்கார்ந்து பேசலாம்.''

அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள். கோவிந்தன் பேச்சை ஆரம்பித்தான்.

"இளமதிக்கு உங்க கவலைதான்."

"என்னைப் பத்தி கவலைப்பட என்ன இருக்கு?"

"சுவாதி சின்னப் பொண்ணு. மனசில் எதுவும் வைச்சுக்கத் தெரியாது. படபடன்னு பேசிடும். உங்க மனசு அறிஞ்சு நடந்துக்குமான்னுதான் கவலை."

"என் மனதறிந்து நடக்கணும்னு சுவாதிக்கு அவசியமில்லை. அவ வாழ்க்கையை அவ மனசு போல் வாழலாம்."

"என்னங்க இது. புருசன் பொண்டாட்டின்னா புருசனுக்காக பெண்டாட்டி வாழணும். பெண்டாட்டிக்காக புருசன் வாழணும். பெத்த பிள்ளைகளுக்காக அவங்க இரண்டு பேருமே வாழணும். இதுதாங்க வாழ்க்கை. அவங்க அவங்க இஷ்டம் போல் வாழ்ந்தால் அது வாழ்க்கை இல்லை."

"வாழ்க்கை பொதுவானதாக இருக்கலாம். கோவிந்தன் ஆனால் மனது தனியானது."

"மாறுவது தாங்க மனது. இப்போ இளமதிக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு மனசிருந்தது இல்லையா? ஆனா அது நடக்காம என்னைக் கல்யாணம் பண்ண வேண்டி வந்ததும் என் கூட வாழாம செத்தா போயிட்டா? இல்லை இன்னொருத்தனை ஆசைப்பட்டவளை கல்யாணம் பண்ணிக்கிட்டோம்னு நான்தான் அவளை வச்சு வாழாமல் போயிட்டேனா?"

இளஞ்செழியன் அதிர்ந்து போனான்.

"கோவிந்தன் நீங்க என்ன சொல்றீங்க?"

"எனக்கும் எல்லாம் தெரியும்னு சொல்றேன்."

"எப்போது தெரியும்?"

"கல்யாணத்துக்கு மறுநாள் தெரியும். ஒரு நல்லது பொறுக்காத நாதாரிப் பயல் என்கிட்ட வந்து போட்டுக்



கொடுத்தான். முதலிலேயே தெரிந்திருந்தால் என் கல்யாணத்தை நிறுத்தி விட்டு உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைத்திருப்பேன். அது வேற விசயம். இப்போ அந்தப் பேச்செல்லாம் பேசக்கூடாது. எனக்குத் தெரியும். அது உங்களுக்குத் தெரிந்தால் போதும்."

"கோவிந்தன் நாங்க தப்பாப் பழகலை. இளமதி நல்லவள்."

"என் பெண்டாட்டி நல்லவங்கிறது எனக்குத் தெரியும்ங்க. மத்தவங்க பேச்சைக் கேட்டு குடித்தனம் பண்ற கபோதி இல்லை நான்."

"கோவிந்தன் நான் என்ன சொல்ல வரேன்னா..."

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்ங்க. இளமதி என் உயிர். நீங்க சிபாரிசு செய்துதான் என்கூட குடித்தனம் பண்ணணும்கிற அவசியம் அவளுக்கில்லை. என்னா 'எனக்காக நீ செத்துப் போடா'ன்னு ஒரு வார்த்தை அவ சொன்னா அந்த நிமிசமே நான் செத்து விடுவேன். அந்த அளவுக்கு அவ மேல் என் உயிரை வைச்சிருக்கேன்."

"நன்றி கோவிந்தன்."

"திரும்பத் திரும்பச் சொல்ல வைக்கறீங்களே. என் பெண்டாட்டிகிட்ட நான் உயிரை வைக்கிறதுக்கு நீங்க ஏன் நன்றி சொல்லணும்? அவளுக்கும் எனக்குமிடையே வர நீங்கள் யார்? ஒரு காலத்தில் நீங்க அவளை விரும்பி இருக்கலாம். அவளும் உங்களை விரும்பி இருக்கலாம். இப்போ அப்படி இல்லை. அவ என் பெண்டாட்டி என்னைக் காதலிக்கிறவ."

"உங்களுக்கு உண்மையிலேயே பெரிய மனது."

"பெரிய மனது பண்ண நான் என்ன தேவாதி தேவனா? மனுசன் சார். திடீர்னு எங்க அப்பா வந்து 'இளமதியைக் கட்டிக்'கன்னு சொன்னார். 'இளமதி தேவதை பெண்ணுப்பா அவ நிழலை நினைச்சுப் பார்க்கக் கூட எனக்குத் தகுதி பத்தாது'ன்னு சொன்னேன். 'நீ ஆம்பளையாடா? ஒரு ஆம்பளைக்கு இப்படி ஒரு எண்ணம் வரலாமா'ன்னு கேட்டார். இளமதியோட பெரியம்மா என் தங்கச்சி கல்யாணத்துக்குப் பணம் கொடுத்து எனக்குப் பெட்டிக்கடை வைத்துக் கொடுக்க இருக்கிறதாய் சொன்னார். 'மாமியார் தயவில் பொழைக்கிறவன் மட்டும் ஆம்பளையா இருப்பானா'ன்னு கேட்டேன்.

'என் தங்கச்சியை வாழ வைக்கிறது உன் கடமை'ன்னு சொல்லி என்னை கூடப் பிறந்த கடமையில் கட்டிப் போட்டு விட்டார். வேறு வழியில்லாமல் தாலி கட்டினேன். நல்லா கேட்டுக்கங்க. நானும் பெத்தவங்க பேச்சை தட்ட முடியாமல் தாலி கட்டினவன்தான். இளமதியும் பெத்தவங்க பேச்சைத் தட்ட முடியாமல் கழுத்தை நீட்டினவள்தான். அதுக்கு அடுத்த நாள் தான் எனக்கு உங்க விசயம் தெரிய வந்தது. துடித்துப் போய் விட்டேன். எனக்காக இல்லை. இளமதிக்காக அப்போதெல்லாம் அவ ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டா. நடை பிணமாத்தான் என் பெண்டாட்டியா என் வீட்டு மருமகளா வந்தா. அவளைப் பார்க்கும் போதெல்லாம் என் மனசு பொங்கும். வானத்தில் மிதக்க வேண்டிய நிலாவை என் கையில் பிடிச்சுக் குடுத்திட்டாங்களே.

சும்மாவும் கொடுக்காமல் அவ சிறகை ஒடிச்சு இதயத்தைக் கொன்னு குத்துயிரா கொடுத்திட்டாங்களேன்னு மனசு கெடந்து அடிச்சுக்கும். அவளுக்காகத்தான் நான்



வெறி பிடிச்ச மாதிரி உழைத்தேன். பெட்டிக்கடை திறக்கவும், என் தங்கச்சி கல்யாணத்திற்கும் இளமதியோட பெரியம்மா கொடுத்த பணத்தை வட்டியும், முதலுமா திருப்பிக் கொடுத்தேன் பாருங்க. அன்னைக்கு இளமதியின் கண்களில் கொஞ்சம் உயிர் வர ஆரம்பித்தது. அதுக்கப்புறம் என்னோடு கடமைக்காக வாழ ஆரம்பிச்சா. இரண்டு பிள்ளைகள் பிறந்தாச்சு. காசு பணம் வந்திருச்சு. நாங்களும் பணக்காரர்கள் ஆனோம். ஆனால் அதுனால எல்லாம் என் மனது நிரம்பலை. என் மனம் எப்போது நிரம்புச்சுன்னு தெரியுமா?" கோவிந்தனின் பார்வை எங்கோ கனவில் மிதந்தது. கண்கள் பளபளக்க தன் மனம் நிரம்பிய அந்தப் பொழுதை சொல்லிக் கொண்டு வந்தான். இளஞ்செழியன் சிலிர்ப்புடன் கேட்டான்.

"எப்போது?"

"என் பெண்டாட்டி என்னை அன்பா ஒரு பார்வை பார்த்து என் மார்பில் தலை சாய்ச்சாளே அப்பத்தான் எனக்கு காதல்ன்னா என்னன்னு தெரிஞ்சது. அப்போது தான் என் மனம் நிரம்பியது. நான் காதலிச்சது இல்லைங்க. ஆனால் எந்த நிமிசம் என் இளமதி கழுத்தில் தாலி கட்டினேனோ அந்த நிமிஷத்தில் இருந்து என் உயிர், மூச்சு எல்லாத்திலயும் இளமதி நிறைஞ்சிட்டா. அவ அழகானவ, படிச்சவ. அப்படிங்கறதால் அந்த உயிரை விடற காதல் அவ மேல எனக்கு வந்திரலைங்க. அவ என் பெண்டாட்டி. என் பொம்பளை. அவ சிரிக்கணும்கிறதுக்காக மாடா உழைத்தேன். பணம் சேத்தேன். ஆனா என் பெண்டாட்டி இருக்கிறாளே அவ பணத்துக்கு மசியற ரகமில்லை. மனத்துக்கு மசியற ரகம். ஒரு நாள் அவ என் மனசை புரிந்துகிட்டா. அவ மனசை என்கிட்ட கொடுத்துட்டா.

'புருசன் பெண்டாட்டி உறவு தேவ ரகசியம்'ன்னு பெரிய வங்க சொல்வாங்க. பார்வதியும் பரமசிவனும் ஏகாந்தமா பேசிக்கிட்டதை கேட்டதால் அர்ச்சகரை வேதாளமாய் போக சபிச்சுட்டாங்கன்னு விக்கிரமாதித்தன் கதையில் படிச்சிருக்கேன். அப்படி இருக்க எங்க விசயத்தை நான் ஏன் உங்க கிட்ட சொன்னேன் தெரியுமா?''

'தெரியவில்லை' என்பதாக பேச்சிழந்து நின்ற இளஞ் செழியன் தலையை ஆட்டினான்.

''நாம் கல்யாணத்துக்கு முன்னாடி யார் மேலயும் ஆசை வச்சிருக்கலாம். தாலின்னு ஒண்ணை ஒருத்தி கழுத்தில் கட்டி விட்டால் அவ கூனோ, குருடோ, நொண்டியோ, முடமோ எதுவாக இருந்தாலும் அவ மேல்தான் பிரியம் வைக்கணும். அதுதான் மனுசனுக்கு அழகு. இளமதி வார்த்தைக்கு கட்டுப்பட்டு சுவாதிக்கு தாலியைக் கொடுத் துட்டிங்க. ஆனா வாழ்க்கை...? அதை யாரு கொடுப்பாங்க. புருசன் தானே கொடுக்கணும். வெறும் சாப்பாடும், துணிமணியும் பொம்பளை மனசை நிறைச்சிருமா? அவ மேல் பிரியம் காட்டுற புருசன் துணை வேணும்ங்க. அதுதான் அவள் மனசை நிறைய வைக்கும். இளமதி மனம் நிறைஞ்ச வாழ்க்கையை வாழ்கிறாள். ஆனால் சுவாதி...? அது என்ன பாவம்ங்க பண்ணுச்சு? இளமதி கோவிந்தனோட பெண்டாட்டிங்க. அவ கோவிந்தனின் உயிர். கோவிந்தனின் வாழ்க்கை. சுவாதியைத்தான் உங்க பெண்டாட்டின்னு சொல்லுவாங்க. நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. நீங்க சுவாதியை உங்க உயிரா, வாழ்க்கையா நினைக்கறீங்களா? நம்மளை நம்பி வாழ வந்தவளை ஒழுங்கா வைத்து வாழணும். அப்பத்தான் நாம் ஆம்பளை. பெண்டாட்டியை கண் கலங்க வைக்கிறவன் நல்ல புருசனா? என்னங்க நான் சொல்றது?''



இளஞ்செழியன் பதில் சொல்ல மாட்டாமல் திகைத்து நிற்க,

''நான் சாப்பிடப் போறேங்க. அப்பவே இளமதி சாப்பாடு போட வந்தாள். நான் உங்ககிட்ட பேசிட்டு வந்து சாப்பிடுகிறேன்னு சொன்னேன். அவள் காத்திருப்பாள்.'' பெருமையுடன் கோவிந்தன் உள்ளே செல்வதைக் கண்ட இளஞ்செழியனுக்கு வியப்பான வியப்பு.

அதிகம் படிக்காதவன், பட்டிக்காடு, மளிகைக் கடைக் காரன் என்று இதுவரை நினைத்திருந்த கோவிந்தன் என்னமாய் சொல்லால் தாக்கி விட்டுப் போகிறான். மைத்துனியின் வாழ்க்கைக்காகவும் வாதாடி அதே சமயம் 'இளமதி என் மனைவி எனக்கு மட்டுமே சொந்தம்' என்ப தையும் கூறிச் சென்று விட்டானே. கோவிந்தன் இளஞ் செழியனின் சிந்தனையை தூண்டி விட்டுச் செல்ல இளஞ்செழியன் யோசிக்கலானான்.

இளமதி துணிகளை பெட்டியில் அடுக்கிக் கொண் டிருந்தாள். கோவிந்தன் குழந்தைகளுக்கு துணிகளை உடுத்த வைத்துக் கொண்டு இருந்தான். அருகே நின் றிருந்த கமலம்,

''சொன்னால் கேளு இளமதி. இன்னும் ஒரு வாரம் இருந்து விட்டுப் போ'' என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

''பிள்ளைகளுக்கு படிப்பு கெட்டுப் போய் விடும் அத்தை. அவரும் கடை வியாபாரத்தை விட்டு விட்டு வந் திருக்கிறார். வயலில் நாற்று ஓடும் நேரம். என் மாமனார் விவசாயத்தை கவனிக்கப் போகணும். அதுதான் ஒரு வாரம் தங்கி விட்டோமில்லை. போதும் அத்தை.''

''என்னப்பா கோவிந்தா நீயாவது சொல்லக் கூடாதா?''

"வந்த வேலை முடிந்து விட்டது பெரியம்மா. செழியனும் சுவாதியும் பிடிவாதத்தை விட்டு விட்டு ஒருத்தருக்கு ஒருவர் பேசிப் பழக ஆரம்பிச்சிருக்காங்க. 'இனி எல்லாம் சுகமே'ன்னு பாட்டுப் பாட வேண்டிய சமயம் இது பெரியம்மா. நீங்க வேணும்னால் எங்ககூட வந்து ஒரு வாரம் இருந்து விட்டு வாங்க."

"சரியாச் சொன்னீங்க" என்றாள் இளமதி.

"நீ எப்ப உன் புருசனை விட்டுக் கொடுத்து பேசியிருக்கே. உங்க இரண்டு பேரின் ஒற்றுமையை பார்த்து என் கண்ணே பட்டு விடும் போல இருக்கு."

"இனிமேல் உங்க பிள்ளையையும் சுவாதியையும் பார்த்து கண் போடப் போறீங்க."

"நடக்குமா இளமதி?"

"நடந்திருச்சே அத்தை. இப்ப காலையில் செழியனுக்கு காபி கொடுக்கறதில் இருந்து சாப்பாடு போடுகிற வரை சுவாதிதான் செய்கிறாள்."

"அது போதுமா கண்ணு."

"இன்னும் இருக்கே. முந்தா நாள் அவள் சாப்பாடு போட வரலைன்னு உங்க மகன் கூப்பிட்டு சாப்பாடு போடச் சொல்லி சாப்பிட்டார். சுவாதியின் முகத்தைப் பார்க்கணுமே. ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்டதுபோல் அவ்வளவு பிரகாசம். நேற்று அவங்க இரண்டு பேர் மட்டும் கோவிலுக்குப் போய் விட்டு ரொம்ப நேரம் கழித்து வந்தாங்க. சுவாதி பிரசாதம் கொண்டு வந்து தந்து விட்டு மனசு விட்டுப் பேசினோம்ன்னு முகம் சிவக்க சொல்லிவிட்டு ஓடி விட்டாள். நான் பின்னாடியே போய் விசாரிச்சேன். 'அவருக்கு நான் எனக்கு அவர்'ன்னு முடிவு பண்ணிட்டோம். அக்கா இனி குழப்பமில்லைன்னு சொன்னாள்."



"அப்படியா சேதி?"

"அப்படித்தான் சேதி. அடுத்த பத்தாவது மாதம் அவங்க ரெண்டு பேரும் ஒரு பிள்ளையைப் பெத்து உங்க கையில் கொடுத்திடுவாங்க. போதுமா. அத்தை! இரண்டு பேருமே வாழ்க்கையில் நிரம்பவும் சங்கடப்பட்டு இப்போதுதான் சந்தோசத்தைப் பார்த்து இருக்காங்க. நாங்க எதுக்கு பூஜை வேளை கரடியாய். அதனால் கிளம்புகிறோம் அத்தை."

"நானும் கிளம்புகிறேன். டெல்லியில் என் மக வீட்டில் போய் கொஞ்ச நாள் இருந்து விட்டு வருகிறேன்."

"அதுதான் சரி."

இரவு கிளம்பி மறுநாள் காலையில் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே போகும்போது இளமதியின் இதழ்கள் உல்லாசமாய் பாடின.

"என்ன உல்லாசம் என் மகாராணிக்கு."

"தாய் வீடாக இருந்தாலும் தன் வீட்டைப் போல ஆகுமான்னு சும்மாவா பெரியவங்க சொல்லி வைத்தாங்க. மாளிகை போல்தான் அத்தையின் வீடு. ஆனா நம்ம வீட்டில் கிடைக்கிற சந்தோசமும், நிம்மதியும் அங்கே கிடைக்கலை."

காதலுடன் சொன்ன மனைவியின் கரம் பற்றி முத்தமிட்டான் தொடுவானத்தை தொட வருடக் கணக்கில் தவமிருந்து ஜெயித்த அந்த கிராமத்து இளைஞன்.

அவன் அணைப்பில் அடங்குவதில் நிம்மதி என்பதை கண்டு உணர்ந்தாள் காதலை கோட்டை விட்டு விட்டு வாழ்க்கையை கர்மயோகி போல் வாழ்ந்து ஜெயித்த அந்தக் காரிகை.

வாழ்க்கை யாராலும் கணிக்க முடியாதது. விசித்திர மானது. ஆழமானது. அதன் சுழற்சியில் சிக்கிய இள மதிக்கு காதல் தொடுவானமானது. ஆனால் கோவிந்தன் என்னும் மாணிக்கத்தைப் பெற்றாள். கோவிந்தனுக்கு மனைவியின் அன்பு தொடுவானமானது. ஆனால் காத் திருந்து ஜெயித்தான். இளஞ்செழியனுக்கோ இளமதி தொடுவானமாய் போனாள். ஆனால் அவனைக் காதலித்த சுவாதி கிடைத்தாள்.

சுவாதிக்கோ சுயமரியாதை தொடுவானமாய் இருந்தது. இறுதியில் காதலுடன் சுயமரியாதையும் வசப்பட்டு விட்டது.

வாழ்க்கை யாரையும் வஞ்சிப்பது இல்லை. வாழ்ந்து பார்த்தால் தெரியும்.

தொடுவானம் என்பது தொட்டு விடும் தூரம்தான் என்பது.